R. No. M. 2992. "PURATCHI" தனிப்பிரதி விலை ஒரு அணா

# புரட்சி

ஞாயிறுதோறும் வெளிவரும்.

ஆசிரியர்:- ஈ. வெ. கிருஷ்ணசாமி.

மாலை 1. | ஈரோடு, பவ-வரு ஆனி-மீ 4-உ (17—6—1934) | மலர் 30.

## இனம்! சந்தாதாரர்களுக்கு இனம்!

## அருமையான புத்தகங்கள் இனம்!

நமது "புரட்சி" பத்திரிகைக்கு ஜூன் மாதம் 1-தேதியிலிருந்து 31-உக்குள் முன்பணம் மணியார்டரில் அனுப்பி புதுசந்தாதாரராய்ச்சேருகிறவர்களுக்கு 8 அணா விலையுள்ள அடியில்கண்ட புஸ்தகங்களில் எது இஷ்டமோ அதை இலவசமாய் புக்போஸ்டில் அனுப்பிக்கொடுக்கப்படும்.

| | | |
|---|---|---|
| கைவல்யம் | | 0–8–0 |
| இந்தியாவின் குறைபாடு | | 0–8–0 |
| இராமாயண ஆராய்ச்சி (அயோத்தியாகாண்டம்) | | 0–8–0 |
| மாதர் சுதந்திரம் or பெண்மக்கள் பெருமை | | 0–8–0 |
| லெனினும் மதமும் | அணா 4 | 0–8–0 |
| பொதுவுடைமைத்தத்துவம் | ,, 3 | |
| போல்ஷ்விக் முறை | ,, 1 | |
| கடவுளும் பிரபஞ்சமும் | அணா 4 | 0–8–0 |
| சோஷியலிசம் | ,, 3 | |
| இலங்கை உபந்யாசம் | பை 6 | |
| சமதர்ம உபந்யாசம் | ,, 6 | |

மானேஜர், "புரட்சி", ஈரோடு.

## குடி அரசு பதிப்பக வெளியீடுகள்

வெ. ரா. சொற்பொழிவு.
விலை அணா 2,

அகத்தியர் ஆராய்ச்சி
விலை அணா 2.

இராமலிங்க சுவாமிகள் பாடல்
விலை அணா 2.

சுயமரியாதைப் பாடல்
விலை அணா 2.

கதர்மூட நம்பிக்கை (இங்கிலீஷ்)
விலை அணா 2.

சுயமரியாதை தாலாட்டு
விலை அணா 2.

சோதிடப் புரட்டு
விலை அணா 2.

பர்னார்ட்ஷா உபந்யாசம்
விலை அணா 1.

இலங்கை உபந்யாசம்
விலை அரை அணா.

கத்தோலிக்கர் வீண் கூச்சல்
விலை அரை அணா.

குடி அரசு புத்தகாலயம் ஈரோடு.

---

நாகர் கோவிலிலிருந்து
தோழர் பி. சுப்பிரமணியம்
பி. ஏ. பி. எல். அவர்களை
ஆசிரியராகக்கொண்டு

### "தமிழன்"

ஆங்கிலோ—தமிழ் வாரப்பத்திரிகை ஞாயிறுதோறும் வெளிவருகிறது.

| | | |
|---|---|---|
| வருட சந்தா | ரூ. | 3—0—0 |
| 6 மாதம் | ,, | 2—0—0 |
| 3 மாதம் | ,, | 1—4—0 |

மானேஜர்,
"தமிழன்" ஆபீஸ்,
கேப்ரோட், நாகர்கோவில்.

---

### "தமிழன்"

ஓர் உயரிய சுயமரியாதைத் தமிழ் வாரப்பத்திரிகை.

தமிழர்களுக்காகத் தவராதுழைப்பவன் தமிழன், வெட்டு ஒன்று துண்டு இரண்டான அபிப்பிராயங்கள் அச்சமற்ற கண்டனங்கள். அறிஞரின் அறிய ஆராய்ச்சியுரைகள். சமதர்ம முழக்கங்கள் நிறைந்தது.

வருட சந்தா.

| | | |
|---|---|---|
| உள் நாடு | ரூ. | 3—0—0 |
| வெளிநாடு | ரூ. | 5—0—0 |

விலாசம்:—
மானேஜர், "தமிழன்"
அண்டர்சன் பேட்டை போஸ்டு,
கோலார் தங்கவயல்.

---

குறிப்பு:—புஸ்தகங்களுக்கு ஸ்டாம்பு வைத்து அனுப்புகின்றவர்கள் புஸ்தக கிரயத்துக்கு மேலாக புஸ்தகம் ஒன்றுக்கு ஒன்றரை அணா ஸ்டாம்பு அனுப்பவேண்டும். 8 அணாவுக்குக் குறைந்த ஆர்டருக்கு வி. பி. அனுப்பப்படமாட்டாது. ஆர்டர்களுக்கு பாதித்தொகையாவது முன்பணம் அனுப்பவேண்டும்.

### 'குடி அரசு' 'ரிவோல்ட்' மாலைகள்.

குடி அரசு மாலைகள் கோர்வையாக முதல்வருஷத்திலிருந்து சென்ற வருஷம்வரை 7 வருஷகாலம் வெளியான மலர்களைத்தனித் தனி வருஷமாகபைண்ட் செய்து புஸ்தகமாகவைக்கப்பட்டிருக்கிறது.

| | | |
|---|---|---|
| ஒவ்வொரு வருஷமாலை கிரயம் | ரூ. | 4—0—0 |
| ரிவோல்ட்டு ஒருவருஷமாலை செய்தது கிரயம் | ரூ. | 4—0—0 |

மானேஜர், குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

---

வெளிவந்து விட்டது! நமது புதிய பிரசுரங்கள்!!

## சோஷியலிசம்.

உலகானுபவப் பேரறிஞர் ஜியார்ஜ் பர்னாட்ஷா எழுதிய "Intellegint womans guide to Socialism" என்ற நூலைத் தழுவி, காலஞ் சென்ற தோழர் சே. நரசிம்மன் எம். ஏ. அவர்களால் எழுதப்பட்டது. ஒவ்வொருவரும் தவறாது படித்துப் படித்துப் பார்க்கவேண்டிய நூல், விலை அணா 3.

## சமதர்ம உபன்யாசம்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களின் தமிழ் மாகாண சமதர்ம மகாநாட்டின் சமதர்ம உபன்யாசம் புஸ்தக ரூபத்தில் அச்சிடப்பட்டிருக்கிறது. விலை அரை அணா. வேண்டுவோர் $1\frac{1}{4}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

## போல்ஷ்விக் முறை.

விலை அணா 1. தனிப்பிரதி வேண்டுவோர் $1\frac{3}{4}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும்.

விலாசம்:— மானேஜர்,

குடி அரசு புத்தகாலயம, ஈரோடு.




பிராமணரென்று கூறிக்கொள்ளும் ஒரு கூட்டத்தார் ஆடுகளை வேதத்தின் பேராலும், யாகத்தின் பேராலும், மதத்தின் பேராலும், செய்கின்ற கொடுமையைப் பாருங்கள். இக்கொலைபாதகத்துக்குக் கேள்வி கேட்பாரு இல்லையா?

இப்படிக்கு,
ஆடுகள்.

# யாகப்புரட்டு.

## திரு. வி. கல்யாணசுந்தர முதலியார் அவர்கள் தலைமைப் பிரசங்கம்.

ஆரணியில் 3—6—'34ல் நடைபெற்ற யாக மறுப்புக்கூட்டத்தின் அக்கிராசனர் தோழர் திரு. வி. கல்யாணசுந்திர முதலியார் அவர்கள் முடிவுரையின் சாராம்சம்:—

என்னுடைய அரிய நண்பர் தோழர் ஈ. வெ. இராமசாமி அவர்கள் எல்லா விஷயங்களையும் அழகாயும், பொருத்தமாயும் சொல்லி விட்டார். அவருடைய பிரசங்கம் சிலருக்குப் பிடித்தமாயும், சிலருக்குப் பிடிக்காமலும் சிலருக்கு வேறு மாதிரியாகவும் தோன்றலாம். இங்கே ஒரு அதிசயம். திரு. நாயக்கர் கடவுள் இல்லை என்று சொல்பவராச்சே. நான் கடவுள் உண்டு என்று சொல்பவனாச்சே. இரண்டு பேரும் எப்படி ஒன்று சேர்ந்தார்கள் என்று கேட்கலாம். உலகத்தில் [Seven Wonders of the World] ஏழு அதிசயம் உண்டு என்பார்கள். இது எட்டாவது [Eight Wonders of the World] அதிசயம் என்று நான் சொல்லுகிறேன். யோக்கியமாய் இருப்பவர்களுக்கு இரண்டும் ஒன்றுதான். கடவுள் என்றால் அன்பு என்று பெயர். கடவுளை கொலைகாரனென்று எந்த சமயமும் சொல்லவில்லை.

மனித சமூகத்திற்குத்தொண்டு செய்பவர்கள் யாராயிருந்தாலும் அவர்கள் கடவுள் இல்லை என்றாலுங்கூட கடவுளின் அறிய பக்தரும், தொண்டரும் ஆவார்கள். எந்த உயிருக்கும் துன்டம் கூடாது, எல்லோரும் சமம் என்று சொல்லுபவர்கள் எல்லோரும் ஆஸ்திகர்களே. நான் பல சாஸ்திரங்களை வாசித்து இருக்கிறேன். இதற்கு ஆதாரமாக அனேக மேற்கோள்களைக்கூட எடுத்துக்காட்டுவேன். இதற்கு விரோதமாக கடவுள் சொன்ன வேதம் என்றாலும் நான் ஒப்ப முடியாது. இப்படிப்பட்ட கருத்தும் உண்மையும், இல்லாத வேதத்தைக் கடவுள் சொல்லி இருப்பாரானால் அப்படிப்பட்ட கடவுள் எனக்கும் வேண்டாம். எந்த சமயத்திலும், எந்தவேதத்திலும் மனித சமூகத்தில் வித்தியாசம் பாராட்டும்படியும், கொலை புரியும்படியும் சொல்லவில்லை. ஜீவ காருண்யத்தை உத்தேசித்தாவது கொலைகளை நிறுத்தவேண்டும். மிஸ். மேயோ என்ற அமெரிக்கா மாது சில வருடங்களுக்கு முன்பு இந்தியாவுக்கு வந்து சுற்றிப் பார்த்து பல அநாகரீக மூடப் பழக்க வழக்கங்களைக் கண்டு இந்தியா சுயராஜ்யத்துக்கு லாயக்கில்லை என்று புஸ்தக ரூபமாய் வெளியிட்டார்.

கும்பகோணம், கடலாடி, தஞ்சாவூர், எல்லூர் யாகத்தைஅவள் பார்த்திருந்தால் இன்னும் நம்மைப்பற்றியும், நம் தேசத்தைப் பற்றியும் என்ன எழுதி இருப்பாளோ தெரியவில்லை. ஓர் ஆட்டைக் கட்டிப்போட்டுவாயையும், கால்களையும் கட்டிக் கொலைபுரிவது மெத்த கொடுமை ஆனதால் நம்மை எல்லாம் அந்தம்மாள் அநாகரீகமான சமூகம்—தேசம் என்று பகிரங்கமாய்ச் சொல்லி இருப்பாள். நாம் சுயராஜ்யத்துக்கு லாயக்கில்லை. கடவுள், மதம், சமூகம், சாஸ்திரம், வேதம், இதுகள் பேரால் இந்த அக்கிரமங்களைச் செய்பவர்கள் முற்போக்கடைந்த மனிதர்களாகார். ஆண்மையுள்ளவர்கள் இதை எதிர்த்தேயாகவேண்டும். ஒரு காலத்தில் இந்த யாகக்கொடுமை இருந்தது வாஸ்தவம் என்றாலும் தயானந்த சுவாமிகள் யாகத்துக்கு வேறு பொருள் கொண்டார். இதெல்லாம் உபனிஷதம் படித்தவர்களுக்குத் தெரியும். யாகம் பயம் காட்டுவதற்காகச் செய்யப்படுகிறது-என்று திரு. ராமசாமியார் சொன்னதை நான் உண்மை என்றே அறிகிறேன். காட்டுமிராண்டித் தனமாய் பயம் காட்டுவது கசடர்கள் தொழில். இது எலக்ஷன் தந்திரம்தான்.

தொடர்ச்சி 18ம் பக்கம்பார்க்க

# கர்ப்ப ஆட்சி.

## கருத்தடையால் உயிர் அழியவில்லை.

### கர்ப்ப ஆட்சியால் ஜனத்தொகை குறையாது.

### இயற்கைக்கு விரோதமல்ல.

### பொருப்பு மிகுந்த நல்ல செயல்.

### பொதுவுடைமை காணும்வரை கர்ப்பாட்சி.

(ஒரு ஆங்கில புத்தகத்தில் கண்டதைத் தழுவி எழுதியது)

[சிவகங்கை—பாண்டியன்]

கர்ப்ப உற்பத்தியை தடை செய்யும் வழிகளை அனுஷ்டிப்பது மிகவும் துர்நடத்தையுள்ள செய்கையாகவும், இயற்கைக்கு விரோதமான காரியமாகவும் சில மனிதர்கள் எண்ணுகிறார்கள். கர்ப்பத்தடை என்னும் செய்தியை முதல் முதலில் கேட்ட மாத்திரத்தில் பலர் திடுக்கிட்டுப்போகிறார்கள் ஆனால் அது விஷயமாக மிகவும் ஆழ்ந்து யோசனை செய்யச் செய்ய ஒவ்வொருவரும் அவர் அவர்கள் சக்திக்குத்தகுந்தபடி அவர் அவர்கள் குடும்ப எண்ணிக்கையை ஆட்சி செய்து கொள்ளுவது மிகவும் பொருத்தமானதும், புத்திசாலித் தனமானதும், இயற்கையானதுமான காரியம் என்று திண்ணமாகத் தலைப்படுவார்கள். கர்ப்பத்தடை சம்மந்தமான சந்தேகங்களும், கேள்விகளும் ஒருவருடைய மனதில் தோன்றும் பொழுது அச்சந்தேகங்களையும், கேள்விகளையும் முற்றிலும் சமாதானப்படுத்தி விட்டால் இப்பிரச்சினையை முடிவு செய்து விடலாம்.

ஆகையால் கர்ப்பதடை சம்மந்தமாக எழும் சில கேள்விகளுக்கு கீழே பதில் அளிப்போம்.

கேள்வி:—கர்ப்ப உற்பத்தியை தடை செய்வதால் ஒரு உயிர் அழிக்கப்படவில்லையா?

பதில்:—அனேகர், கர்ப்பத்தடை என்பதற்கும், கர்ப்பச்சிதைவு என்பதற்குமுள்ள வித்தியாசத்தை விளக்கிக் கொள்ள வில்லை. அனேகர் கர்ப்பச்சிதைவு என்பதும், கர்ப்பத்தடை என்பதும் ஒன்று என்று கருதுகிறார்கள். கல்யாணம் செய்து கொள்ளாமலிருப்பதால் எவ்விதம் கர்ப்பத்தில் உயிர் கொலை செய்யப்படாமல் இருக்கிறதோ அவ்விதமே கரு உற்பத்தியாவதற்கு முன் தடை செய்வதால் உயிர் கொலை செய்யப் படவில்லை. பருவமுள்ள ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தங்களுடைய பருவ திசையில் எவ்வளவு குழந்தைகளை உற்பத்தி செய்ய முடியுமோ அவ்வளவு குழந்தைகளை உற்பத்தி செய்யாமலிருப்பது சிசுக்கொலை என்றால் பெண்களுடன் சேர்க்கையில்லாமல் ஒவ்வொரு ஆணும் சுத்தமான வாழ்க்கை வாழ்வதும் சிசுஹத்தி என்றேசொல்ல வேண்டும். இரண்டும் ஒரே தன்மையுடையன. கருத்தரிப்பதற்கு முன் அவ்விடத்தில் உயிர் என்ற ஒன்றும் இல்லை. மனித இந்திரியம் (சுக்கிலம்) என்பது உடம்பில் உண்டாகும் ஓர் வகை திரவம் அதன் வளரக்கூடிய சக்தியானது ஒருஉயிர் உள்ள வஸ்துவல்ல. அந்தச் சக்தியை உபயோகப்படுத்தாததால் உயிர் கொலை ஒன்றும் செய்யப்படவில்லை. (சுக்கிலத்தில் மிகுந்துள்ள) ஸ்பர்மட்டோஸா (Spermatozoa) என்று சொல்லப்படும் அந்த வளரும் தன்மையுள்ள அணுக்கள் உயிர் உள்ளவைகள் அல்ல. ஆண் அணுவும், பெண் அணுவும் ஒன்றுபட்டாலன்றி உயிர்உள்ள ஒன்றும் உண்டாவதில்லை. விவாகமாகாதவர்கள் ஆண் பெண் சேர்க்கையின்றி இருப்பதாலும் கல்யாணமான ஆணும், பெண்ணும் மேற்சொன்ன இரண்டு அணுக்களும் ஒன்று சேர மார்க்கமில்லாமல் புணருவதாலும் உயிர்க்கொலை ஒன்றும் செய்யப்படவில்லை. ஏன் என்றால் அங்கு உயிர் ஒன்றும் இன்னும் உற்பத்தி செய்யப்படவில்லையல்லவா? ஸ்பர்மட்டோஸா (Spermatozoa) என்ற அணு அனேக சிறு அணுக்களைப்போல உணரும் தன்மை உடையதல்ல. அந்த அணுவை அழித்து விடுவது பாவச்செயல் என்றால் அதே தன்மை உடைய அணுவான மலேரியா ஜுரத்தின் கிரிமியை கொயினாப் பொடி (Qiunine) யால் அழிப்பது பாவமான செயல் அல்லவா? திரேகத்தால் கஷ்டப்பட்டு வேலை செய்பவனுடைய உடம்பிலும், தலையிலும் உண்டாகும் வியர்வையைத் துடைப்பதும், கழுவி விடுவதும் பாவமான செயல் அல்லவா? ஏன் என்றால், தலையில் உண்டான வியர்வையை கழுவாமல் விட்டு விட்டால் பேன்உர்பத்தியாகுமல்லவா?

கேள்வி:—கர்ப்பத்தடை. செய்யும் மார்க்கத்தை கையாளுவதால் ஆண்,பெண்களின் உடல்நலம்கெட்டு விடாதா?

பதில்:—கர்ப்பத்தடை செய்யும் மார்க்கங்களில் கெடுதல் செய்யாத மார்க்கங்கள் உள்ளன. அவைகளை அறிந்து அதன் படி நடக்க வேண்டும்.

கேள்வி:—ஒரு தேசத்தில் உள்ள ஜனங்கள் கர்ப்ப ஆட்சி செய்தால் அத்தேசத்தின் ஜனத்தொகை மிகவும் குறைந்து சூன்யமாகி விடாதா?

பதில்:—ஒரு ஆணும், ஒரு பெண்ணும் சேர்ந்து இருவருமாக மூன்று குழந்தைகளை உற்பத்தி செய்வதாக இருந்தால் இந்தியாவின் ஜனத்தொகை குறைவு படாது என்று கணக்கிட்டிருக்கிறார்கள். ஒவ்வொரு ஆணும், ஒவ்வொரு பெண்ணும் சேர்ந்து வெகு காலம் விட்டு விட்டு மொத்தத்தில் மூன்று குழந்தைகளை மட்டும் உண்டு பண்ணினால் அக்குழந்தைகள் எவ்வளவு திடகாத்திரமும், எவ்வளவு அறிவும் உள்ளவர்களாக இருப்பார்கள் என்பதை ஊகிப்பதுடன் அவ்விதக் குழந்தைகளைப்பெற்றவர்களும் எவ்வளவு சந்தோஷத்துடனும் ஊக்கத்துடன் அக்குழந்தைகளைப் போஷிப்பார்கள் என்பதையும் யோசித்துப்பாருங்கள். நோயற்று, திடகாத்திர முள்ள குழந்தைகள் ஏற்படுவதால் குழந்தை மரண விகிதம் குறைவதுடன், தேசத்தில் நோயுற்று, இளைத்து வாழும் ஏழைகளைக் காண்பதரிதாகி விடும்.

கேள்வி:—கர்ப்பத்தடை செய்வது இயற்கைக்கு விரோதமானதும், துர்நடத்தையான காரியமும் அல்லவா?

பதில்:—"இயற்கைக்கு விரோதமானது" அல்ல. ஏன் என்றால் மனிதனுடைய மூளையானது இயற்கையாக உண்டான மற்ற எல்லாவற்றையும்விட மிகச் சிறந்தது. பகுத்தறிவுக்கு ஒத்து வராத தன்மையுடையவைகளிலுருந்து முன்னேற்றமடைவது மிகவும் இயற்கையைச் சார்ந்த முன்னேற்றமாகும். காலையில் எழுந்தது முதல் இரவில் படுக்கைக்குப் போகும் வரை நித்திய வாழ்க்கையில், நாகரீக வாழ்க்கையில் கையாளப்படும் அனேக பழக்க வழக்கங்களை விட கர்ப்பத்தடை செய்வது ஒருக்காலமும் இயற்கைக்கு விரோதமல்ல. பச்சை மாமிசம் உண்ணல், நிர்வாணமாக வசித்தல், குகைகளில் தங்கி யிருத்தல் முதலியவைகள் பகுத்தறிவுக்கு ஒத்து வாராத தன்மையுள்ள குணங்கள் சமைத்த ஆகாரம் உண்ணுதல், ஆடை அணிதல்' அழகிய வீடுகளில் வசித்தல் முதலியவைகள் பகுத்தறிவுக்கு ஒத்த தன்மையுள்ள வழக்கங்கள். காட்டுத்தனமாக, கவலையற்று கணக்கிலடங்கா குழந்தைகளைப் பெறுவது முற்றிலும் பகுத்தறிவு அற்ற மிருகத்தன்மையான காரியம். ஒவ்வொரு மிருகமும் அந்தக்காரியத்தில் நம்மை ஜெயிக்க முடியும். முன் எச்சரிக்கையுடனும், அபிமானத்துடனும், குழந்தைகளைப் பெற்றெடுப்பது பகுத்தறிவுள்ள தன்மையைச் சார்ந்தது. அதுவே மனிதனுக்குப் பொருத்தமானது.

"துர்நடத்தையுள்ளது" நன்னடத்தை என்றால் என்ன? அதிகமான நன்மையடைவதற்காக அதிகமான ஜனங்களால் அனுஷ்டிக்கப்படும் நடத்தைக்கு நன்னடத்தை என்று பெயர். ஒருவனால் காப்பாற்ற முடியாத ஒரு உயிரை உண்டு பண்ணுவது துர்நடத்தையுள்ள செயலா, அல்லவா? போதுமான ஆகாரமும், ஆடையும், கல்வியும் கொடுக்க முடியாத ஒருவன் உலகத்தில் குழந்தைகளை உண்டு பண்ணுவது மிகவும் துர்நடத்தையுள்ள செய்கையாகும். கூட்டம் மிகுந்த ஒரு வீட்டில் மேலும் மேலும் குழந்தைகளை உண்டுபண்ணி சுகாதார மற்று வாழச்செய்வது மிகவும் துர்நடத்தையான காரியமாகும். ஒரு பெண்ணைப் புணருவதால் ஏற்படும் ஒவ்வொரு காரியத்தையும் பொருப்பாக உணர்ந்து நடந்து கொள்வது மிகவும் நன்டைத்தையுள்ள செய்கையாகும். பொதுஜனங்களுக்கு அவ்வித நல்ல செயலை கேலமாகக் காண்பிக்கப் பிரியாசைப்படுபவர்கள் அவர்களால் உண்டாக்கப்படும் பொறுப்பற்ற துர்நடத்தையை உணராதவர்கள் ஆவார்கள். கர்ப்பத்தடை மார்க்கத்தை அனுசரித்து புணர்ச்சி செய்வதைக் கண்டிப்பவர்கள் ஜனநெருக்கத்தைக் கட்டுப்படுத்தும் மற்ற மூன்று முறைகளான ஏழைத்தன்மை, விபசாரத்தன்மை, புணர்ச்சியற்றிருத்தல் முதலியவைகளை தேர்ந்துஎடுக்க வேண்டும்.

கேள்வி:—கர்ப்பத்தடை முறைகளை பெண்கள் கற்றுக்கொண்டால் அவர்கள் தைரியமாக விபசாரம் செய்யமாட்டார்களா?

பதில்:—இது ஒரு பெண் விபசாரம் செய்வதற்கு அடிப்படையான காரணம் என்ன என்பதை யோசித்துப்பார்க்காத ஒருவன் கேட்கும் கேள்வியாகும். (அதைப்பற்றி மற்றொரு சமயம் எழுதுவோம்.) இப்பொழுது, கர்ப்பத்தடை முறைகள் போதிக்கப்படவில்லையானால் ஒன்றிரண்டு பெண்கள், இயற்கையிலேயே, ஏதோ ஒரு காரணத்தினால், விபசாரம் செய்யத் தகுந்த மனதுள்ளவர்கள் பயந்துகொண்டு விபசாரம் செய்யாமலிருக்கலாம ஏதோ ஒன்றிரண்டு கெட்டசிந்தையுள்ள பெண்களுக்காகவா, ஆதிக்கமுள்ள 'ஆண்களால் கெடுக்கப்பட்ட. சிந்தையுள்ள பெண்களுக்காகவா, மற்ற எல்லாப் பெண்

தொடர்ச்சி 17-ம் பக்கம் பார்க்க.

# கடவுளும், பகுத்தறிவும்.

(கொளும்பு தோழர் I. M. இப்ருஹீம்)

எல்லாம் வல்லவனும், எங்கும் நிறைந்தவனும் சர்வசக்தனும்- சர்வ ஞானியும்—அருளாளனும்- அன்புடையோனும்-நீதிமானும்- நன்மைகளை விரும்புகிறவனும்- தீமைகளை வெறுக்கிறவனுமாகிய ஓர் கடவுள் (ஆண்டவன், அல்லாஹ்) இப் பிரபஞ்சத்தையும் இதிலுள்ள எல்லாவற்றையும் படைத்து, இவைகள் எல்லாவற்றிற்கும் சர்வாதிகாரியாயிருந்து நீதியென்னும் செங்கோல் பிடித்து ஆண்டு வருவதாகவும், மக்களுக்காகவே இவ்வுலகத்தை இக் கடவுள் படைத்தார் என்றும், இப் பிரபஞ்சத்தில் அவனன்றி ஓரணுவும் அசையாது என்றும் இன்னும், இக் கடவுள் மக்கள் பேரில் கொண்ட அன்பின் பெருக்கால் மக்களை சீர்திருத்துவதற்காக வேண்டி ஒவ்வொரு தேசத்திற்கும், ஒவ்வொரு ஜாதியாருக்கும் தீர்க்கதரிசிகளையும், தீர்க்கதரிசிகள் மூலமாய் மதங்களையும் மக்களுக்கு அருளினான் என்றும், (இப்படி அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகள் தொகை 124000-மாம்) இன்னும் இக்கடவுள் "தீர்க்கதரிசி"களுடன் "அசரீரி" என்னும் "தெய்வ அறிவித்தல்" மூலமாக அடிக்கடி விஷயங்களை அறிவித்துக்கொண்டிருந்தான் என்றும் கடைசியில் இக் கடவுள் உலகத்திற்கே பொதுவாக ஒரு மதத்தை (இஸ்லாத்தை)யும் உலகத்திற்கே பொதுவாக ஓர் "தீர்க்கதரிசி"யை (முகமது 'நபி'யை)யும் அனுப்பினான் என்றும் எனவே உலக மக்கள் எல்லோரும் இக் கடவுளையே கதியென நம்பி இக் கடவுளால் அனுப்பப்பட்ட தீர்க்கதரிசிகளின் போதனைகளுக்கப்பால் போகாமல் அதற்குட்பட்டு மக்கள் நடந்து வரவேண்டுமாம். இதன்படி நடக்கிறவர்களுக்கு மாத்திரம் இக் கடவுள் இவ்வுலகிலும் "மறு உல"கிலும் அழியாத இன்பத்தையும், குறையாத செல்வத்தையும் கொடுப்பான் என்னும் இக் கடவுளையும், தீர்தரிசிகளையும் மதங்களையும் நம்பாதவர்களையும், வேறுபுதிய புதிய கொள்கைகளை கைக்கொள்பவர்களையும், இக் கடவுளை வணங்காதவர்களையும் இக் கடவுள் இவ்வுலகில் பலவித கஷ்ட நஷ்டங்களுக்குட் படுத்துவதுடன் "மறு உல"கிலும் 'நரகலோக'த்தில் போட்டு சுட்டெறித்து சித்திரவதை செய்து துன்புறுத்துவான் என்றும் மதங்களில் சொல்லப்பட்டிருக்கின்றன. மேற்காட்டியவைகள் அத்தனையும் எந்த மதத்தில் சொல்லியிருந்தாலும், இல்லாவிட்டாலும் இஸ்லா மதத்தில் சொல்லப்பட்டிருப்பதுடன் உலகத்திலுள்ள 60 கோடி "முஸ்லீம்களா"ல் நம்பப்பட்டும் வருகின்றன. இதற்கொப்பாகவேதான் (ஒரு சில விஷயங்களைத் தவிர்த்து) கிறிஸ்துவ மதத்திலும் சொல்லப்பட்டிருக்கின்றன. இதைத்தான் நமது மூதாதைகள் ஆயிரமாயிரம் வருடங்களாக வாழையடி வாழையாக சொல்லிக்கொண்டு வந்ததுடன் நின்றுவிடாமல் இன்றைய மதப் பிரசாரகர்களும், பக்தர்களும் பத்திரிகைகள் மூலமாயும், நூற்கள் வாயிலாயும், பிரசங்கங்கள் மூலமாயும் பஹிரங்கமாக எடுத்துச் சொல்லப்பட்டு வருகின்றதுடன் எல்லா மக்களையும் கட்டாயமாக நம்பும்படி (ஆராய்ச்சி பண்ணாமல் நம்பும்படி)யும் வற்புறுத்தப்பட்டு வருகின்றன! இன்னும் விளக்கிச்சொல்லவேண்டுமானால் சிறுவர்களுக்கு பால்யத்திலேயே மேற்காட்டியவைகளைப் புகுத்தப்பட்டு வருவதனால் அவர்கள் மரணமடையும் வரையிலும் அவைகளை ஆராய்ச்சி பண்ணாமல் எல்லாம் உண்மையாய் இருக்கக்கூடும் என்று சந்தேகப்படாமல் ஒருவித நம்பிக்கையிலிருந்து விடுகிறார்கள். இன்று உலகத்திலுள்ள ஆஸ்திகர்கள் எல்லோரும் சிறுவயதில் பெற்றோரால் புகுத்தப்பட்டதினால் நம்பிக்கொண்டிருக்கிறவர்களே யன்றி ஆராய்ந்து பார்த்து ஒப்புக்கொண்டவர்கள் என்பதை ஒவ்வொரு ஆஸ்திகனும் தன் நெஞ்சில் கையைவைத்து 'எனக்கு எப்படி கடவுள் நம்பிக்கையும்—மத நம்பிக்கையும் ஏற்பட்டது?' என்று நெஞ்சை வினவினால்—ஆழச் சிந்தித்து பார்த்தால் தெரியும்!

எனவே நாமும் நமது தொட்டில் பழக்கத்தை சுடுகாடு வரையிலும் இருக்க விடாமல் மேற்காட்டியவைகள் அத்தனையும் எவ்வளவு தூரம் உண்மை யென்பதைப்பற்றி பகுத்தறிவைக் கொண்டு ஆராய்ந்து பார்ப்போம். உலகத்திலுள்ள ஒவ்வொரு விஷயத்தையும் மனித சமூகம் ஆராய்ந்து ஒப்புக்கொள்ள வேண்டுமே யன்றி, நமது மூதாதைகளும், நமது பெற்றோரும், உலகமும் நம்பிக்கொண்டிருப்பதற்காக வேண்டி நம்புவது பெரும் மூட நம்பிக்கையாகும். இக் கட்டுரையில் நாம் ஆராய்ச்சி பண்ணுவதில் ஆஸ்திகத் தோழர்களின் கடவுள் நம்பிக்கைக்கு, மத நம்பிக்கைக்கு விரோதமாய் இருக்கக்கூடும். அதற்காக வேண்டி நமக்குச் சரியென்று தோன்றினதை எடுத்துச் சொல்லாமல் இருக்க முடியாது. ஒவ்வொருவருக்கும் அவரவருடைய அபிப்பிராயத்தை எடுத்துக் காட்டுவதற்கு இன்று முழு உலகமும் அனுமதித்திருப்பதனால் நமது அறிவிற்கு சரியென்று தெரிந்ததை பொதுஜனங்களிடத்தில் எடுத்துக் காட்டி விடுவோம். சத்தியம் எது என்பதைப் பொதுஜனங்கள் தீர்மானித்துக் கொள்ளட்டும். இதற்காக வேண்டி யாரும் ஆத்திரப்பட வேண்டிய அவசியமில்லை.

ஆஸ்திகத் தோழர்கள் பகுத்தறிவைக் கொண்டு நியாயத்தை கவனியாமல் உங்களுடைய இரத்தத்தில் ஊறிக்கிடக்கும் பழையபக்தியின் பெருக்கால் இவைகளை 'மதத்துவேஷம்' 'கடவுள் துவேஷம்' என்று மழுப்பி விட எத்தனிக்காதீர்கள். அது நியாயமாகாது! "மதத் துவேஷம்" "கடவுள் துவேஷம்" என்பது தன் மதபக்தியால் தன் மதத்திற்குச் செல்வாக்குத் தேடுவதற்கும், உலகததில் தன் மதமே சிறந்தது என்று ஸ்தாபிப்பதற்கும், பிற மதங்களையும் மத ஸ்தாபகர்களையும்பகுத்தறிவிற்கு முரணாக வாயில் வந்த மாதிரி யெல்லாம் இழிவு படுத்தி வீண் வம்பளந்து கொண்டிருப்பதற்குத் தான் "மதத்து வேஷம்" "கடவுள் துவேஷம்" என்று சொல்லுவது! ஆனால் பகுத்தறிவு சமதர்மிகளாகிய நாமோ பகுத்தறிவிற்குப்பொருத்தமற்ற,நீதிக்கு விரோதமான முன்னேற்றத்திற்கு முட்டுக்கட்டையான எல்லாவற்றையும் அது இஸ்லாம் மதமானாலும் சரி, கிறிஸ்துவ மதமானாலும் சரி, பௌத்த மதமானாலும் சரி, ஹிந்து மதமானாலும் சரி, அது எதுவானாலும் சரி, எவ்வளவுபளுவானதானாலும் சரி, அவைகளைக்கண்டித்தேதீருவோம்- கண்டித்துத் தீரவேண்டியவர்களாகவும்இருக்கிறோம்.எனவே இப்பொழுதாவது நமது வாதமெல்லாம் உலக மனித சமூகத்தின் நன்மைக்காக வேண்டி மனுஷாபிமானமே லீட்டால் செய்யும் நியாய வாதம் என அறிந்து கொள்க!

வாசக நேயர்கள் மேலே நாம் விளக்கிக் காட்டிய மதவாதிகளால் சொல்லப்படும் கடவுள் (ஆண்டவன் அல்லாஹ் தெய்வம்) எத்தனை வல்லமையும், கருணையும், ஞானமும் நிறைந்தவன் எலபந்த ஞாபகத்தில் வைத்துக்கொண்டு நாம் கூறுவதில் ஞாயமிருக்கிறதா இல்லையா என்பதை துவேஷ மின்றி கவனிக்கும்படி தங்களை அன்புடன் வேண்டிக்கொள்கிறேன்.

முதலாவது நாம் இப்போது பீஹாரில் ஏற்பட்ட பூகம்ப நிகழ்ச்சியை எடுத்துக்கொள்வோம். இப் பூகம்ப நிகழ்ச்சியை முழு உலக மக்களும் அறிவார்கள். இப் பூமி அதிர்ச்சியினால் அநேகர் ஆஸ்திக சிகாமணிகளுக்குக் கடவுள் பேரில் உள்ள நம்பிக்கையிலும்-பக்தியிலும் ஒருவித ஆட்டம் கொடுத்துவிட்டன, அநேகருக்கு இதனால் முன்னையை விட கடவுள் நம்பிக்கையும், பக்தியும் அதிகரித்திருக்கின்றன. இந்த பூகம்பத்தைப் பற்றி நாம் இங்கு எடுத்துக்கொள்ள வேண்டியது ஏனெனில் இது மேலே நாம் ஆராய்ச்சிபண்ண எடுத்துக்கொண்ட "தெய்வத் தன்மை பொருந்திய விஷயங்களு"க்கு அவசியமானதாயிருக்கின்றதை முன்னிட்டே.

இந்த மாபெரும் பூகம்பம் ஏற்பட்டதினால் பதினாயிரக்கணக்கான மக்கள் மாண்டுமடிந்ததையும், லட்சக்கணக்கான மக்கள் வீடு, வாசல், சொத்து சுகங்களை யெல்லாம் இழந்து தவிக்கும் பரிதாபத்தையும்; மாதா மடிமீது கொஞ்சிக் குலாவிக்கொண்டிருந்த மாசற்ற குழவிகள் மாபெரும் கட்டிடங்களுக்கு அடியில் சிக்குண்டு, மாண்ட கோரக் காட்சியையும்; நெற்றிவியர்வை நிலத்தில் விழ உழைத்து, மண்ணை வெட்டி கல்லாக்கி, கல்லையடுக்கி சுவராக்கி கட்டிய கட்டிடங்கள் தரை மட்டமாய் போனதையும்; மக்களது சரீரத்தை சாறாய்ப் பிழிந்து இக்கடவுளை வணங்கக்கட்டிய ஆயிரக்கணக்கான மாபெரும் அழகிய மசூதிகளும், சர்ச்சுகளும், கோவில்களும், மடங்களும் மண்ணோடு மண்ணாய்ப் போனதையும் உலகத்தை ஆண்டு வரும் உலகத்தின் சர்வாதிகாரியாய் எல்லாம் வல்ல- எங்கும் நிறைந்த- கருணைக்கடவுள் தடுக்காமல் சோம்பேறியாயிருந்து பார்த்துக் கொண்டிருந்ததேன்? எல்லாம் வல்ல கடவுளுக்கு மக்களை சகிக்க முடியாத கொடிய துன்பத்திற்காளாக்கும் இப்பூமி யதிர்ச்சியை நிகழ விடாமல் நிறுத்திக் கொள்ள முடியுமே! நிறுத்திக்கொள்ள முடியாவிட்டால் "கடவுளுக்கு திரிகால ஞானம், அருள், அன்பு, நீதி, சர்வ சக்தி உண்டு" என்று ஆஸ்திகர்கள் சொல்வது பொய்யாகக் கூடுமே! இந்த பூகம்பத்தினால் கஷ்ட நஷ்டங்களுக்குட் பட்ட மக்களுக்கு அகில தேசத்தவர்களும் அவரவர்களால் இயன்ற பலவித உதவிகளைச் செய்தார்கள். ஆனால் அளவிலா அருட்ஜோதிக் கடவுளுக்கு மக்கள் பேரில் கிஞ்சிற்றும் தயை யில்லையே. "எல்லாம் வல்ல இக்கருணை மிக்கக் கடவுள்" மக்களுக்கு உபகாரம் செய்யாவிட்டாலும் உபத்திரவம் செய்யாமலாவது இருந்து விடக்கூடாதா? இம்மாதிரி குற்றங்களைக் கடவுள் (ஆண்டவன் அல்லா) பேரில் சுமத்தும் போது கடவுளின் பக்த சிரோமணிகள் "அது கடவுளின் இயற்கை","கடவுளின் கோபாவேஷம்" "அப்பரம பிதாவின் எச்சரிக்கை" என்று சமாதானம் சொல்லித் தப்பித்துக்கொள்ளப் பார்க்கிறார்கள். கடவுள் பக்தர்களே! கடவுளுக்காக வேண்டி வக்காலத்து வாங்கிப் பேசுபவர்களே!! கடவுளைக் காப்பாற்றுபவர்களே!!! சில போலிக்காரணங்களையும், உதாரணங்களையும் காண்பித்து பகுத்தறிவு வாதிகளை ஏமாற்றி கடவுள் நம்பிக்கையை இன்னும் உல

தொடர்ச்சி 16ம் பக்கம் பார்க்க.

# ஜர்மனியில் நிர்வாண இயக்கம்.

## சர்க்காரால் அங்கீகாரம்.

(எஸ். நவகார்.)

ஜெர்மனியில் நாளடைவில் நிர்வாண இயக்கம் காட்டுத்தீ போல் மிக விரைவாய்ப் பரவி வருகிறது. மித மிகப் பிற்போக்குடைய வைதீக வெறியனும், ஆரிய நாகரீக பிரியனும், சமதர்மப் பகைவனுமாகிய கொடியோன் ஹிட்லரின் மறக்கோலாட்சியும் நிர்வாண இயக்கத்தை அசைப்பதற்கு மனதில்எண்ணக்கூடிய சக்திகூடப் பெற்றிருக்க வில்லையென்றால் அந்நாட்டில் நிர்வாண இயக்கத்திற்குள்ள வலு எத்தன்மையது என்று வாசகர்களே யூகித்துக்கொள்ளும்படி அவர்கள் முடிவுக்கே விட்டு விடுகின்றோம்.

### நிர்வாண இலக்கியங்கள்.

ஜெர்மனிய பாஷையில் நிர்வாண இயக்க சம்மந்தமாய் ஆயிரக்கணக்கான நூற்கள் வெளியிடப்பட்டுள்ளன. அவைகளெல்லாம் ஜெர்மனியிலுள்ள பிரபல நூலாசிரியர்களால் மிக உயர்ந்த நடையில் யாவரும் கண்டு வியப்புற்று படிக்கும் வண்ணம் உயர்ந்த நடையில் தர்க்க முறையில் அனுபவ ரீதியாய்—போதிய ஆதாரங்களுடன் எழுதப்பட்டுள்ளன.

### பத்திரிகைகள்.

நிர்வாண சங்கத்தின் அரிய கொள்கைகளைப்போற்றாத பத்திரிகைகளே ஜெர்மனியில் இல்லையெனக் கூறலாம். செல்வாக்குள்ள பத்திரிகைகள் எல்லாம் அக்கொள்கைகளை ஆதரித்தே எழுதி வருகின்றன. இதுஅல்லாமல்ஜெர்மனியப் பாஷையில் நிர்வாண சங்கங்களில் இருந்தே பல பத்திரிகைகள் வெளிவருகின்றன. அவைகளில் தங்கள் இயக்கத்தின் கொள்கைகளை மிகத் தெளிவாய் எடுத்துக் கூறியிருப்பதோடு அனுபவத்தில் அவர்கள் பெற்ற நன்மையையும் எடுத்துக்கூறி யிருக்கிறுர்கள். எல்லாப் பத்திரிகைகளும் அழகிய நிர்வாணப் படங்களை வெளியிட்டு வருகின்றன.

### அறிஞர்கள்.

இவ்வியக்கத்தில் பாமரமக்கள் மட்டுமல்ல விஞ்ஞான விற்பன்னர்களும் உயர்தர டாக்டர்களும், பிரபுக்களும், ஜட்ஜ்களும், பாதிரிகளும் ஏராளமாய்ச் சேர்ந்திருக்கிறுர்கள். ஆண்கள் மட்டுமல்ல, பெண்களும் சேர்ந்திருக்கிறுர்கள். வயோதிகர்களும், வாலிபர்களும், பெற்றோர்களும், பிள்ளைகளும், பேரர்களும் பேதமின்றிச் சேர்ந்திருக்கிறுர்கள்.

### பிரசாரமுறை.

நிர்வாணிகள் இவ்வியக்கத்தை டிராமா, சினிமா மூலமாய்ப்பிரசாரம் செய்து வருவதோடு ஒவ்வொரு காட்சி சாலையிலும் நிர்வாணப் படங்களை வைத்துப் பிரசாரம் புரிந்து வருகின்றூர்கள். ஆங்காங்கே பிரசாரகர்களை அனுப்பியும் பிரசாரம் புரிந்து வருகின்றூர்கள். இவர்கள் இப்பிரசாரத்திற்காக ஏராளமாய்ப் பணஞ்செலவு செய்து வருகின்றூர்கள். ஜெர்மன் தேசத்தில் நூற்றுக் கணக்கான நிர்வாண சங்கங்களிருக்கின்றன. மொத்தத்தில் 30லக்ஷம் அங்கத்தினர்களிருக்கின்றூர்கள்.

### சங்கங்கள்.

நிர்வாணமாய்த் தெருக்களில் நடமாடுவதையே தற்காலத்திலுள்ள எல்லா அரசாங்கச் சட்டமும் தடுக்கக்கூடியதா யிருக்கின்றதே யொழிய ஒரு சங்கத்தினுள்ளோ அல்லது வீட்டினுள்ளோ கூட்டமாகவோ தனியாகவோ நிர்வாணமாய் இருப்பதை எந்த அரசாங்கமும் தடுப்பதாய் இல்லை. அதைப்போலவே ஜெர்மன் அரசாங்கமும் பொதுஜனங்களுக்கு இடைஞ்சலில்லாத வழியில் நிர்வாண சங்கங்களிருக்க ஹிட்லருக்கு முன்னுலிருந்த ஆட்சியே இடமளித்துவிட்டது. அதன் பேரில் நகரிற்கு வெளியே அழகிய இடங்களில் நிர்வாணிகள் தங்கள் சங்கங்களை நிறுவிக்கொண்டார்கள். வெளியிலிருந்து பார்ப்பவர்களுக்கு உள்ளே நடக்கும் விஷயங்கள் தெரியாதிருக்கும்படி உயர்ந்த வேலிகள் போடப்பட்டிருக்கின்றன.

### சங்கத்தின் அமைப்பு

சங்கத்தினுள்ளே அழகிய நீர் நிலைகளுள்ளன, பல சங்கங்கள் சமுத்திரக் கரையோரங்களிலும், பல ஆற்றங்கரையோரங்களிலும் அமைக்கப்பட்டிருக்கின்றன. ஆங்கு அழகிய நந்தவனங்களுண்டு. எங்கு பார்த்தாலும் ஆணும் பெண்ணும் நிர்வாணமாய் நடனமாடுவதும், சூரிய ஸ்நானஞ் செய்வதும், வெய்யிலில் டிரில் (தேகாப்பியாசம்) செய்வதும், சந்திர ஒளியிலும் சூரிய வெளிச்சத்திலும் தண்ணீரில் குதித்து விளையாடுவதும் எப்பேர்ப்பட்டவர்கள் மனதையும் கவரத்தக்க சாக்ஷியாய் விளங்குகின்றன. ஜெர்மனியில் தோன்றிய பொருளாதார நெருக்கடியால் பல ஏழைகள் ஆடை வாங்க வழியற்றவர்கள் நிர்வாணமாகவே ஆண்டு சிறு குடிசை கட்டிக்கொண்டு வசித்து வருகின்றூர்கள்.

இச் சங்கத்தைப் பற்றியும் அதன் கொள்கைகளைப்பற்றியும் அறியவிரும்புவர்கள் அச்சங்கத்தலைவர்கள் அனுமதியின் மீது உள்ளே செல்லலாம். உள்ளே செல்பவர்கள் எல்லாம் முழு நிர்வாணமாய்ச் செல்லவேண்டுமென்பது கட்டாயமல்ல. எல்லோருக்கும் அனுமதி யளிக்கப்படுவதுமில்லை தலைவர் யாரை அனுமதிக்கலாம் என்று கூறுகிறுரோ அவர் தான் அனுமதிக்கப்படுவர்.

### ஆஸ்திகர்களின் ஆதரவு

இச் சங்கத்தில் எல்லா மதஸ்தர்களும் இருக்கின்றூர்கள். ஆஸ்திகர்களும், நாஸ்திகர்களுமுண்டு பெரும்பாலோர் வைதிகக் கிறிஸ்தவர்களேயாவர். நிர்வாணமாயிருப்பதை கிறிஸ்துமதம் ஆதரிக்கின்றது என்றும் அதுவே கடவுளின் சித்தம் என்றும் ஆதாம் ஏவாளை கடவுள் நிர்வாணமாகவே வாழும்படி செய்தார் என்றும் தம் கொள்கைக்கு அரண் செய்யும் பல ஆதரவுகளைக் காட்டி வருகின்றனர். இவர்கள் நிர்வாணமாயிருப்பதனுல் ஒழுக்கம் என்பதை உதறித் தள்ளி விட்டனர் என்று முடிவு கட்டி விடுவது பெருந்தவறூகும். இவர்கள் ஆணும் பெண்ணும் ஒழுக்கத்தில் மற்றவர்களைவிட ஒரு படி அதிகம் உடையவர்களென்று தைரியமாகக் கூறலாம். ஜெர்மனியிலுள்ள நிர்வாண சங்கங்கள்பலவற்றைசுயமரியாதை இயக்கத்தலைவரான தோழர் ஈ. வெ. ராமசாமியும் அவரது சகாக்களும் நேரில் சென்று பார்வை யிட்டும் வந்தனர். அக் கூட்டங்களில் கலந்து புகைப்படமும் எடுத்து வந்திருக்கின்றனர் அவர்களெல்லாம் அச் சங்கங்களின் உயர்வையும் ஒழுக்க நேர்மையும் நன்கறிவர்.

### நிர்வாணத் தடாகம்.

நிர்வாணமாக ஸ்நானஞ் செய்வதற்காக இச் சங்கத்திற்கென்றே சர்க்கார் இரண்டு குளங்களை பெர்லின் நகரிற் கூட ஒதுக்கி வைத்து விட்டனர். சில்ட் என்னும் தீவின் கடற்கரை யோரங்களில் நிர்வாணிகள் தாராளமாய் ஆடையின்றி ஸ்நானஞ் செய்ய ஜெர்மன் அரசாங்கம் அனுமதியளித்திருக்கின்றதோடு அதற்கான பந்தோபஸ்துகளும் செய்துகொடுத்திருக்கின்றது ஆண்களும் பெண்களும், குழந்தைகளும் இக் கடற்கரை யோரமாக ஸ்நானஞ் செய்துவிட்டு கடற்கரையின் வெள்ளிய மணலில் ஆனந்தமாய் படுத்துக்கொண்டு சூரிய ஸ்நானஞ் செய்து வருகின்றூர்கள்.

### எதிர்ப்பு

ஜெர்மன் தேசத்தின் தென் பகுதியிலுள்ள கத்தோலிக் கிறிஸ்தவர்கள் இந்நிர்வாண இயக்கம் ஆரம்பமான போது பெரிதும் எதிர்த்து வந்தனர். ஆனுல் நாளடைவில் நிர்வாணப் பிரசாரம் வலுப்பெற்று பல அறிஞர்களின் ஆதரவும்பல செல்வவான்களின் உதவியும் அரசாங்கப் பாதுகாப்பும் பெற்ற பின்னர் கத்தோலிக் குருக்களின் எதிர்ப்பு இருந்தவிடந் தெரியாது மறைந்து போயிற்று.

### சமதர்மிகளின் ஆதரவு

நிர்வாண வாழ்க்கையினுல் உடலுக்கு உரமும், ஒழுக்கமும் உண்டாகாது என்று சாதாரண மக்களிடையே ஜெர்மனியில் பலத்த பிரசாரஞ் செய்யப்பட்டிருந்தது- ஆனுல் ஜெர்மன் தேசத்திலுள்ள சமதர்மக் கட்சியின் தலைவர்களில் ஒருவரான தோழர் அடோல்ப் கோச் என்னும் சீரியஅறிஞர் பல நாட்களாய் இவ்வியக்கத்தின் போக்கைக் கவனித்து வந்ததோடு மட்டுமன்றி பல நிர்வாண இயக்க அறநூற்களையும் ஆராய்ந்து நிர்வாண வாழ்க்கை மக்கட்கு அவசியம் வேண்டற்பாலதே என்னும் முடிவிற்கு வந்ததுடன் அமையாது, இளமையிலேயே மக்களுக்கு நிர்வாண வாழ்க்கையை அனுஷ்டிக்கக் கற்றுக்கொடுத்தால் நல்ல பலனுண்டாகுமென்று பல நிர்வாண எலிமெண்டரி பாடசாலைகள் நிறுவினர். பல சங்கங்களை ஸ்தாபித்தார். அக்கல்விச்சாலைகளில் நிர்வாணமாய்த் தேகாப்பியாசஞ் செய்ய ஏற்பாடு செய்தார். எவ்வளவோ எதிர்ப்பு வந்தும் இவர் அவைகளைப் பொருட் படுத்தாது வேலை செய்து வந்ததின் பலனுகவே ஜெர்மன் சர்க்கார் இச்சங்கத்தையும் இதன் கொள்கைகளையும் அங்கீகாரஞ் செய்து தன்னுல் கூடிய எல்லா ஆதரவையும் காட்டி வரும்படி செய்து விட்டது. தோழர் கோச் இவ்வேலையில் ஈடுபட்டதும் பொதுவாய்த் தொழிலாளரும் சிறப்பாய்ச் சமதர்மிகள்- பொது உடமைக்காரர்கள என்போர்கள் மட்டும் 60 ஆயிரம் பேர்கள் நிர்வாண இயக்கத்தில் அங்கத்தினராய்ச் சேர்ந்திருக்கின்றூர்கள்.

### நிர்வாணத்தின் நன்மை.

நிர்வாணிகளே மிகுந்த நல்லொழுக்கமும் காம இச்சை அற்றவர்களாயுமிருக்கின்றூர்கள். மேலும் பெரும்பான்மையோர் திடகாத்திரமான சரீரமுடையவர்களாயும் உடல் நிறம் கருத்து கபில வர்ணமுடையவர்களாயுமிருக்கின்றூர்கள். இவர்களை பெரும்பாலும் எவ்வித நோயும் அதிகமாய் அணுகுவதே கிடையாது. நிர்வாணிகள் பெற்ற பிள்ளைகள் ஏனைய மக்கள் பெற்ற குழந்தைகளை விட அதிகமான எடையுள்ளவைகளாயிருக்கின்றன. நிர்வாணிகள்தான் இன்று மிருக இச்சை குறைந்தவர்களாய்- மனிதர்களைப் போல் வாழ்க்கை நடத்துகின்றூர்கள்.

### சகோதரத்வம்

நிர்வாணிகள் ஒருவர்க்கொருவர் மிகுந்த சகோதரத்துவத்துடனும் அன்புடனும் நடந்து கொள்வார்கள். எக்காரணத்தையிட்டும் ஒருவர்க்கொ

தொடர்ச்சி 15ம் பக்கம் பார்க்க.

ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

# சுயமரியாதை திருமணம் என்றால் என்ன?

## ஈ. வெ. ரா. சொற்பொழிவு.

8—6—34ந் தேதி சென்னை தோழர் கர்ப்பகம் அம்மாள் அவர்களுக்கும், தோழர் கே. கல்யாணசுந்ரம் அவர்களுக்கும் சென்னை சௌகார்பேட்டை இருளப்பன் தெரு 25 நெம்பர் வீட்டில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் சுயமரியாதைத் திருமணம் நடைபெற்றது. கூட்டத்திற்கு முக்கியமாக வந்திருந்தவர்கள்.

திருவாளர்கள் கருநாகர முதலியார் போஸ்ட் மாஸ்டர் G.P.O, Dr. துரைசாமி முதலியார் ராயப்பேட்டை ஆஸ்பத்திரி, Mrs. Ms. ஜயராம்ராவ் முதலியார் M. A B. L, எத்திராஜ் முதலியார் மதராஸ் சிட்டி போலீஸ், சதானந்த முதலியார் பி. ஏ., கன்னைய செட்டியார் எட்மாஸ்டர் கார்ப்பரேஷன் பாய்ஸ் ஸ்கூல், சுந்தரேசன் பி. ஏ., எத்திராஜன் பி. ஏ, தியாகராஜ முதலியார் சராப் நேஷனல் பேங், ராஜரத்தின முதலியார் கிளார்க் நியூ இந்தியா அஷ்யூரன்ஸ் கம்பெனி, P. K. சுப்பராயன் உதவி உபாத்தியாயர் கார்ப்பொரேஷன்பாய்ஸ் ஸ்கூல், முருகேச நாயக்கர் கேஷியர் சிங்கர் கம்பெனி, ராமகிருஷ்ண முதலியார் G. P. O., T.V. அப்பர் சுந்தர முதலியார் எம். ஏ. எல். டி., அவரது மனைவியார், C R. மீனாக்ஷிசுந்தர முதலியார், கிளார்க் சென்னை கார்பொரேஷன் ஆபீஸ், M சுந்தரமூர்த்தி ஆக்டிங் சப்-ரிஜிஸ்தாரர், பண்டிட் திருஞான சம்பந்தம், மயிலை சீனி வெங்கடசாமி, ஸ்ரீபால், T. சுப்பிரமணியம், கபாலி, கும்பகோணம் குப்புசாமிபிள்ளை, ரெங்கனுதம், சம்மந்தம், அமிர்தவாசகம், S. குருசாமி B. A., இந்திராணி பாலசுப்பிரமணியம், L. ராமசாமி, குஞ்சிதம் B. A. L. T., K. V. அழகர்சாமி, சாமிசிதம்பரனுர், சுந்தரி அருணகிரி, மேரி சௌந்தரியம்மாள், நாராயணி அம்மாள் முதலியவர்களாகும்.

தோழர்கள் S.குருசாமி B. A, இந்திராணி பாலசுப்பிரமணியம், L. ராமசாமி, குஞ்சிதம் B. A. L. T., K. V. அழகர்சாமி, சாமி, சிதம்பரனுர், சுந்தரி அருணகிரி முதலியவர்கள் "சீர்திருத்தத்திருமணம்" என்பதுபற்றிப் பேசினர்கள். அதுசமயம் தலைவர் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் பேசியதாவது:—

### தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமை உரை.

தோழர்களே இன்று இங்கு நடைபெறப்போகும் திருமணம் சுயமரியாதைத்திருமணம் என்று சொல்லப்படுகின்றது. மற்ற திருமணங்களுக்கும் சுயமரியாதைத் திருமணங்களுக்கும் அடிப்படையாக என்ன மாறுதல் இருக்கின்றது என்று பாருங்கள்.

அனுவசியமாக சிலர் "சுயமரியாதைத் திருமணமா?" என்றாலே அதிசயப்படுவதும் ஏதோ முழுகி விட்டது போல் வெறுப்படைவதுமாயிருக்கின்றதே தவிர வேறு என்ன மாறுதல் இருக்கின்றது என்பது எனக்கு விளங்கவில்லை.

விவாகம் அல்லது திருமணம் என்று சொல்லப் படுவதெல்லாம் ஒரு பெண்ணும், ஆணும் சேர்ந்து ஒருவருக்கொருவர் கட்டுப்பட்டு அவர்களது வாழ்க்கையை கூட்டுப்பொருப்பில் நடத்துவதற்கு பலர் அறிய, செய்யச் செய்து கொள்ளும் அல்லது செய்யப்படும் காரியமே ஆகும் இதைச்சிலர் அதாவது பழைய முறைக்காரர் சடங்கு என்கிறார்கள். சிலர் அதாவது புதிய முறைக்காரர்கள் ஒப்பந்தம் என்கிறார்கள். சடங்கு என்று சொல்லுகின்றவர்கள் உண்மையிலேயே சடங்காகவே கருதி காரியங்களில் லக்ஷியமில்லாமல் நடத்துகிறார்கள். அதாவது கல்யாணத்தில் மாப்பிள்ளைக்கும் பெண்ணுக்கும் எவ்வித உரிமையும் இல்லை. அதுபோலவே சடங்கிலும் கல்யாணக்காரருக்கும் சடங்குக்கும் யாதொரு உரிமையுமில்லை எப்படியென்றால் தம்பதிகளின் பெற்றோர்களோ அல்லது பெற்றோர்களைப் பெற்றோர்களோ அல்லது இந்தப் பெற்றோர்களுக்கு வேண்டியவர்களோ பார்த்து இன்ன பெண்ணுக்கு இன்ன மாப்பிள்ளை அல்லது இன்ன மாப்பிள்ளைக்கு இன்ன பெண் என்று தீர்மானித்து விட்டால் அதைத்தம்பதிகள் மணமக்கள் ஆக்ஷேபிக்க முடியாது. அது மாத்திரமல்ல இன்னொரு அநியாயம் என்னவென்றால் திருமணம் என்பது நடக்கும் நிமிஷம் வரையில் மாப்பிள்ளை பெண்ணைப் பார்த்திருக்க மாட்டார். பெண் மாப்பிள்ளையைப் பார்த்திருக்க மாட்டார். 100க்கு 99 திருமணத்தில் பெண்ணும் மாப்பிள்ளையும் ஒருவரையொருவர் சந்தித்துப் பேசி இருக்கவே மாட்டார்கள்.

அங்க லக்ஷணம், அறி[illegible]ணம், யோக்கியதை லக்ஷணம் யரிசனதையும் பார்க்காமலும் தெரியாமலும் தான் திருமணம் தீர்மானிக்கப்படுகிறது. இவர்கள் இருவர்கள் விஷயத்தில் ஏதாவது ஒன்று கவனிக்கப் படுகின்றதா என்றால் இருவர் பிறந்த நேரம் என்று சொல்லப்படும் 'அது சரியான நேரமோ தப்பான நேரமோ என்பதைப்பற்றி கவலை இல்லாமல்' ஒருகாலத்தை குறிப்பில் வைத்து அதன் மூலமாகவே ஒரு பொறுப்பற்ற நபரால் இருவருக்கும் பொருத்தம் உண்டா இல்லையா என்பது முடிவு செய்யப்பட்டு விடும். சில சமயங்களில் பிறந்த காலம் நேரங்கள் கூட கவனிக்கப்படாமல் பெண்ணின் பெயரின் முதலெழுத்தையும் மாப்பிள்ளையின் பெயரின் முதலெழுத்தையும் ஆதாரமாக வைத்து பொருத்தம் முடிவு செய்யப்பட்டு விடும். மற்றும் சில சமயங்களில் அதுகூட இல்லாமல் கோவிலில் பூவைத்து கேட்பது மூலமோ, கருடன் பறப்பது மூலமோ, பல்லி கத்துவது மூலமோ, இருவர் பெயர் எழுதப்பட்ட சீட்டுகளின் மீது ஈ (பறவை) உட்காருவதன் மூலமோ, அல்லது கோவில்களில் ஏதாவது ஒருவன் சாமியாடி வாக்கு சொல்லுவதன் மூலமோ கல்யாணம் தீர்மானிக்கப்பட்டு விடும். எவ்வளவு காட்டுமிராண்டித்தன வாழ்வில் நமது மக்கள் இருந்து வருகிறார்கள் என்பதற்கு இதைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும் என்பது எனக்குத் தெரியவில்லை.

இது போலவே சடங்குகள் விஷயத்திலும் இந்தச்சடங்குகள் எதற்காக என்றாவது இந்த சடங்கின் அர்த்தம் என்னஎன்றாவது இச்சடங்குகளுக்கு அவசியமோஆ, தாரமோ ஆரம்ப காலமோ பொருத்தமோ என்னவென்றாவது மணமக்களுக்கோ பெற்றோர்களுக்கோ மற்றும் பந்து மித்திரர்களுக்கோ யாருக்குமே தெரியாது.

ஆனால் சுயமரியாதைக்கல்யாணம் என்பது இந்தப்படிக்கல்ல. மணமக்கள் ஒருவரை ஒருவர் அறிந்து தங்களுக்குள்ளாகவே ஒருவரை ஒருவர் தேர்ந்தெடுத்துக்கொள்ள வேண்டும் என்பதும் அர்த்தமும், பொருத்தமும் அவசியமும் இல்லாமல் வெறும் சடங்கு பழக்க வழக்கம் என்பதற்காக மாத்திரமே ஒன்றையும் செய்யக்கூடாது என்பதுமே யாகும்.

இவை மாத்திரமல்லாமல் திருமணம் சம்மந்தமாக செலவு மெனக்கேடு வீண் கஷ்ட நஷ்டம் ஆகியவைகளைப்பற்றி பழைய முறைக் கல்யாணங்களில் லக்ஷியமே செய்யப்படுவதில்லை. ஆடம்பரத்துக்காகவே வீண் செலவுகளை தகுதிக்கு அதிகமாக கடன் வாங்கியாவது செய்யப்பட்டு வருகிறது. திருமணத்திற்காக 3நாள் 4நாள் 5நாள் சிலர் 7நாள்கூட மெனக்கெட்டு அயலூர் பந்து மித்திரர்களையும் தருவித்து மெனக்கெடச்செய்து 5விருந்து 10விருந்து என்பதாகச்சாப்பாட்டுச்செலவும், பந்தல் மேளம் சங்கீதம் ஊர்வலம் வாணம் என்பதாக வீண் காரியங்களும் குடிகாரர்கள் குடித்த போதையில் தாருமாறாய் நடப்பதுபோல் கல்யாண போதையில் சிக்கி பணங்கள், நேரங்கள் கஷ்டங்கள் ஆகியவைகள் தாருமாராக செலவாக்கப்பட்டு வருகின்றன. 2, 3 நாளைக்கு ஆக சிலர் பார்த்து புகழ்வதற்காக என்று செய்யப்படும் இப்படிப்பட்ட தாருமாரான ஆடம்பர சிலவுகள் கல்யாணத் தம்பதிகள் தலையிலோ அல்லது குடும்பத்தார்கள் தலையிலோ விழுந்து கல்யாணக் கடன் பார்வைகளால் வெகு நாளைக்கு அவதிப்பட வேண்டியிருப்பதால் சில குடும்பங்கள் கல்யாணச் செலவாலேயே பாப்பராகி மீளாக்கடன்காரர்களாகக் கூட ஆகவேண்டியதாகி விடுகின்றன. இப்படிப்பட்ட கொடுமைகளும் முட்டாள்தனமான காரியங்களும் கூடாது என்பது தான் சுயமரியாதைக் கல்யாணம் என்பதின்முக்கியாம்சங்களாகும்.

மற்றும் கல்யாணம் செய்து கொள்ளும் விஷயத்தில் தம்பதிகளை விட மூன்றாவதவர்களுக்கே சகல சுதந்திரமுமிருந்து வருகிறது. செய்து வைப்பதற்கு ஒரு புரோகிதன் வேண்டும். இன்ன இன்ன மாதிரி செய் என்பதற்குப் பெற்றோர்கள், பந்து மித்திரர்கள் வேண்டும் இவர்கள் சொன்னபடியெல்லாம் தம்பதிகள் நடக்கவேண்டும்.

சுயமரியாதைக் கல்யாணம் என்பதில் இந்த முறையில்லை மணமக்கள் தங்கள் ஒப்பந்தங்களை ஒருவருக்கொருவர்சொல்லிசம்மதித்ததற்கு அறிகுறியாக மாலையிட்டுக் கொள்வது என்பதுடன் முடிவுபெற்று விடுகின்றது.

மற்றும் இவற்றையெல்லாம் விட ஒரு முக்கிய விஷயம் என்னவென்றால் கல்யாண விஷயத்தில் மணமக்களின் வாழ்க்கைச் சம்மந்தம் முக்கியமானது லக்ஷியமானது அல்லவென்றும் அதில் ஏதோ ஒரு தெய்வீக சம்மந்தம் இருக்கிறதென்றும் அதுவேதான் திருமணத்தின் லக்ஷியமென்றும்ஆதலால்அப்பெண்ணும், மாப்பிள்ளையும் அத்தெய்வீக சம்மந்தத்துக்காக ஒருவர் குற்றங்களையும் அநீதிகளையும் மற்றவர்கள் பொருத்துக்கொள்வேண்டும் என்றும் அதிலும் சிறப்பாக மாப்பிள்ளை செய்யும் கொடுமையையும் அநீதியையும் பெண் பொருத்துக்கொண்டு வாழ்நாள் முழுமையும் மாப்பிள்ளைக்கு பெண் அடிமையாய் பக்தியாய் இரு

தொடர்ச்சி 14-ம் பக்கம் பார்க்க.

# தமிழர் மகாநாடு.

## ஜாதி—சமயப் பிரிவினை வேண்டுமா?

### தமிழ்ப்பாஷையின் வளர்ச்சிக்கு முட்டுக்கட்டை.

### பிற்போக்கான தீர்மானங்கள்.

திருநெல்வேலி ஜூன் 11

சென்னை மாகாணத்தமிழர் மகாநாட்டின் விஷயாலோசனைக்கமிட்டிக்கூட்டம் இன்று காலை சுமார் 8 30மணிக்கு மேல் இந்து கல்லூரி ஆங்கில சொற்பொழிவு மண்டபத்தில் தோழர் டி. வி. உமாமகேசரன் பிள்ளை தலைமையில் சுமார் 2மணி நேரம் நடைபெற்றது. மணி சுமார் 10-30 ஆனதும் வரவேற்புக் கழகக் காரியதரிசி தோழர் ஈ. எம். சுப்பிரமணிய பிள்ளை, சாமி வேதாசலம் வருவதாயும் தமிழ்ப் புலவர் மகாநாடு ஆரம்பிக்கப்பட வேண்டுமென்றும் கூறினர்.

உடனே தோழர் சி. டி. நாயகம் நிகழ்ச்சிக் குறிப்பு எழுதும்படி தோழர் ஈ. எம். சுப்பிரமணிய பிள்ளையை வேண்டிக்கொண்டு, நிகழ்ச்சிக்குறிப்பு தனக்கு தெரிய வேண்டுமென்றும் சொன்னர்.

#### புலவர் மகாநாடு ஏன்? சிலர் எதிர்ப்பு.

சாவடி தோழர் எஸ். கூத்தநயினர்பிள்ளை தமிழர் மகாநாடு நடத்தப்படுவதே போதுமென்றும், அதோடு புலவர் மகாநாடு என்னும் பெயரால் ஒரு மகாநாடு நடத்தவேண்டியது அனுவசியமென்றும், எனவே புலவர் மகாநாட்டை நடத்த வேண்டியதில்லையென்றும் பேசினர்.

ரிட்டயர்டு போலீஸ் இன்ஸ்பெக்டர் தோழர் நாராயணசாமி நாயுடு, ஜனங்களிடம் பரிசு வாங்கிக்கொண்டு பேசுபவர்கள் புலவர்களில் கிடையாதென்றும், புலவர்கள் அரசர்களிடமிருந்து மட்டும் பரிசு வாங்குவது வழக்கமென்றும், சாமி வேதாசலம் புலவர் மகாநாட்டுக்கு தலைமை வகித்து பேசுவதற்கு பரிசில் பெற்றிருப்பதாகத் தெரிய வருகிறதென்றும் அது புலவருக்கு அழகல்லவென்றும் பேசினர்.

ஷை தோழர் நாராயணசாமி நாயுடு பேசிக்கொண்டிருந்தபோது சாமி வேதாசலத்தை மகாநாட்டு மண்டபத்திற்குள் அழைத்து வந்தனர்.

#### சமயப்பேச்சு வேண்டாம். தமிழ் நூல்களின் இயல்பு.

தோழர் சி. டி. நாயகம் தமிழைப் பேணுதல், தமிழைப் பரப்புதல் ஆகிய விஷயங்களைப் பற்றி மட்டும் மகாநாட்டில் பேசப்பட வேண்டுமென்றும் ஜாதி சமயத்தைப்பற்றி மகாநாட்டில் பேசக்கூடாதென்றும்சொன்னர்.

சாவடி தோழர் எஸ்.கூத்த நயினர் பிள்ளை:—"அன்பையும், அறிவையும், ஒற்றுமையும் மல்கச்செய்வதே மகாநாட்டின் நோக்கமென ஒரு அறிக்கையில் குறிப்பிடப்பட்டிருக்கிறது. அதை யனுசரித்து ஜாதியை தகர்த்தெரிய வேண்டுமென்று தோழர் சி. டி. நாயகம் ஒரு தீர்மானம் கொண்டு வந்தார். அந்த தீர்மானம் ஜாதி சம்பந்தப்பட்டதென்னும் காரணத்தினல் வரவேற்புக் கழகத்தாரால் புறக்கணிக்கப்பட்டது. அது எங்கனம் புறக்கணிக்கப்பட்டதோ அதே போன்று ஜாதியைப்பற்றியும், சமயத்தைப் பற்றியுமுள்ள பேச்சுகள் இங்கு புறக்கணிக்கப்படவேண்டும்" என்று பேசினர்.

விருதை சிவஞான யோகிகள், தமிழ் நூல்களெல்லாம் கடவுளிடத்தும், சமயத்தினிடத்தும் நம்பிக்கை கொண்டதாகவே யிருக்கின்றனவென்றும், கடவுள், சமயத்தைப்பற்றிய பேச்சுகள் மகாநாட்டில் நடைபெறக்கூடாதென ஆக்ஷேபணை கிளம்புவது கூடாதென்றும் கூறினர்.

கூட்டத்திலிருந்த ஒருவர்:—"அப்படியானல் நாஸ்திகத்தைப்பற்றிப் பேசவும் இங்கு இடங்கொடுக்கப்படவேண்டும்"

தோழர் சி. டி. நாயகம்:—"கடவுள் சமயம் ஆகியவைகளைப்பற்றிப் பேசுவது மகாநாட்டின் நோக்கத்திற்கு விரோதம். ஆகையினல் அவைகளைப்பற்றிப் பேசக்கூடாது."

#### பேசப்போகிறவர்கள் யார்?

தோழர் உமாமகேஸ்வரன் பிள்ளை, புலவர் மகாநாடு கூடி எவ்வித தீர்மானமும் செய்யப் போவதில்லையென்றும், அந்த மகாநாட்டில் தமிழின் பெருமை தமிழ் மருத்துவம், தமிழ் இசை ஆகியவைகளைப்பற்றியே பேசப்படுமென்றும் அதற்கு எல்லாரும் சாதகமாகவிருந்து மகாநாடு வெற்றியுடன் நடைபெற உதவிசெய்ய வேண்டுமென்றும் கூறினர்.

தோழர் எஸ். கூத்தநயினர் பிள்ளை:—"மறை மலையடிகள் (சாமி வேதாசலம்) மட்டும் பேசப்போகிறார்களா? வேறு யாரும் பேசப்போகிறார்களா? என்பதைப்பற்றி கூற கேட்டுக்கொள்ளுகிறேன்"

காரியதரிசி தோழர் ஈ. எம். சுப் பிள்ளை:—மறைமலையடிகள், சிவஞானயோகிகள், திருவனந்தபுரம் தோழர் இலக்குமணப் பிள்ளை ஆகியவர்கள் பேசுவார்கள்.

தோழர் நடராஜன்;—புலவர் மகாநாடு தமிழர் மகாநாட்டின் ஆதரவில் நடப்பதானல், அந்த மகாநாட்டில் சமயத்தைப்பற்றி பேசக்கூடாது. தமிழர் மகாநாட்டுக்கு சம்மந்தமன்னியில் புலவர் மகாநாடு நடப்பதானல், இந்த மகாநாட்டை நடத்த ஆட்சேபணை இல்லை.

தோழர் சி. டி. நாயகம்:—ஜாதியைப்பற்றியும், சமயத்தைப்பற்றியும் இம்மகாநாட்டில் பேசவே கூடாது.

இந்த நிலைமையில், தோழர் கா. சுப்பிரமணிய பிள்ளை எம். ஏ. எம். எல்; புலவர் மகாநாட்டைத் திறந்து வைக்கும்படி திருவனந்தபுரம் தோழர் டி. இலக்குமணம் பிள்ளையை வேண்டிக் கொண்டார்.

#### வாசியுங்கள்! வேண்டாம்!! கூட்டத்தில் ஆக்ஷேபனை.

அதன் பேரில், சென்னை மாகாண புலவர் மகாநாட்டை தோழர் டி. இலக்குமணப் பிள்ளை பி. ஏ. ஆரம்பித்துவைத்தார்.

பிறகு புலவர் மகாநாட்டு வரவேற்புத்தலைவர் தோழர் மா. வே. நெல்லையப்ப பிள்ளை பி. ஏ. வரவேற்புப் பிரசங்கத்தை வாசிக்க முற்பட்டார்.

தோழர் கா. சுப்பிரமணிய பிள்ளை எம்.ஏ.எம்.எல்."வரவேற்புப் பிரசங்கத்தை வாசிக்கவேண்டாம். வாசித்ததாக யாவரும் ஒப்புக்கொள்ளலாம்" என்றார்.

தோழர் மா. வே. நெல்லையப்ப பிள்ளை:—"அப்படியானல், மகாநாடு நடந்ததாக எல்லோரும்கருதிக்கொள்ளலாமே. மகாநாடு எதற்கு?"

தோழர் கா சுப்பிரமணிய பிள்ளை "சரி, சரி, வாசியுங்கள்"

பிறகு, தோழர் மா. வே. நெல்லையப்ப பிள்ளை பிரசங்கத்தின் சாரத்தை எடுத்துக்கூறினர்.

பின்னர், தோழர் உமாமகேசுவரன் பிள்ளை, மறைமலையடி (சாமிவேதாசலம்) அவர்களைபுலவர் மகாநாட்டுக்குத் தலைமை வகிக்கும்படி வேண்டி பிரரேபித்தபோது, புலவர் மகாநாட்டில் தமிழ் மொழி, தமிழ் இசை, தமிழ் மருத்துவம் ஆகிய விஷயங்களைக் குறித்து மட்டும் பேசப்படுமென்றும், சகலரும் பொருமையுடனிருந்து மறைமலையடிகளின் பிரசங்கத்தைக் கேட்டு உண்மையைத்தெரிந்துகொள்ள வேண்டுவதாயும், மகாநாட்டில் பிணக்கு ஏற்பட்டு குழப்பம் உண்டாயிற்று என்னும் சொல் லேற்படாதிருக்க எல்லாரும் ஒன்றுபட்டிருக்க வேண்டுமென்றும் கூறினர்.

#### கடவுள் வணக்கம் கூடாது எதிர்த்தது ஏன்?

பின்னர் தோழர் சி. டி. நாயகம் ஆமோதித்துப் பேசியபோது கூறியதின் சாரமாவது:-நான் தோழர் வேதாசலத்தின் மாணவர்களில் ஒருவன் அவர்கள் சொற்பொழிவைக் கேட்டு நான் மன எழுச்சி அடைந்திருக்கிறேன். தமிழர் மகாநாட்டின் ஆதரவின் கீழ் புலவர் மகாநாடு இப்போது நடைபெறப்போகிறது. நான் சில தினங்களுக்கு முன்பே இங்கு வந்து வரவேற்புக் கழகத்தாருடன் அளவளாவியதில், தமிழை வளர்த்தலும், தமிழைப் பரப்புதலும் மகாநாட்டின் நோக்கமென்று தீர்மானஞ் செய்தனர். மகாநாட்டின் நோக்கத்தை அனுசரித்தே தோழர் வேதாசலம் பிரசங்கம் செய்வார்களென நான் திண்ணமாய் நம்புகிறேன். சாதி சமயத்தைப் புகுத்தாமல் தமிழில் பேசுந் திறமை அவர்களுக்குண்டு என்பதை அவர்கள் இன்று நிரூபிப்பார்கள். சமயத்தையும், சாதியையும் கலக்காமல் தமிழைப்பேச முடியாதென்று சிலர் கூறுகிறார்கள். அங்ஙனம் கூறுவது தவறுஎன்று தோழர் வேதாசலம் இன்று, சாதியையும் சமயத்தையும் சேர்க்காமலே பிரசங்கம் செய்து காட்டுவார்கள்.

கடவுள் வணக்கம் கூடாதென நான் கூறினேன். கடவுள் உண்டென்றும் இல்லையென்றும் நம்புகிறவர்கள் இங்கு இருக்கிறார்கள். மகாநாட்டில் தமிழைப்பற்றி மட்டும் பேசப்படுமென அறிக்கை வெளியிட்டு விட்டு கடவுள் வாழ்த்து கூறுவது மற்றொரு பெயரால் கடவுள் எண்ணத்தைப் புகுத்துவோம் என்று சொல்வது போன்றுகின்றது. கடவுள் வாழ்த்து கூடாதென்று நான் சொன்னேன் ஆனல் அது கவனிக்கப்படாமல் கடவுள் வாழ்த்து கூறப்பட்டது.

தோழர் எம். வி. நெல்லையப்ப பிள்ளை "என்னுடைய நோத்தை எல்லாம் நீங்கள் எடுத்துக்கொண்டு பேசுகிறீர்களே"

தோழர் சி.டி. நாயகம்:—"உங்கள் நேரம் அப்போதே ஆகிவிட்டது.

சாமி வேதாசலம், தோழர் சி. டி. நாயகத்தைப் பார்த்து தேவாரம் பாடலாமா?"என்று கேட்டார்.

தோழர் சி. டி. நாயகம்:—"வேண்டுமானல் தேவாரம் இசை என்கிற முறையில் பாடப்படலாம். அல்லது வேறு எதை வேண்டுமானுலும் இசை என்னும் முறையில் பாடட்டும்.

---

## ஆரணியூனியன் போர்டு காங்கிரஸ் வாதிகள் கைப்பற்ற யோசனை

---

சென்றவாரம் ஸ்ரீ சீனிவாசராவ் வீட்டில் காங்கிரஸ் வாதிகளின் கூட்டம் ஒன்று ஆரணியூனியன் போர்டை காங்கிரஸ் வாதிகள் கைபற்ற வேண்டுமென்று அது விஷயமாய் பல விஷயங்கள் பேசிக்கூட்டம் ஒத்தி வைக்கப்பட்டது. என ஒரு நிருபர் எழுறுகிறார்.

# சோஷியலிசம்.

## கட்டுரை 5.

[சோஷியலிஸ்ட்]

[இக்கட்டுரையில், பொதுவுடைமைத் தத்துவம் ஆதிகாலத்தில் எங்கெந்த நாடுகளில் தாண்டவமாடிக் கொண்டிருந்ததென்பதை இதன் ஆசிரியர் விளக்குவதோடு, பொதுவுடைமைக்காரர்கள் எவ்வாறு முதலாளிகளாலும், குருமார்களாலும் ஏமாற்றப்பட்டு, தோற்கடிக்கப்பட்டார்களென்பதையும், அவர்கள் எவ்வாறு தந்திரமாக மரணமடையவும் நேரிட்டதென்பதையும் விளக்கிக்காண்பிக்கின்றார். ப-ர்.]

ஆதிகாலத்தில், மக்கள் காட்டுமிராண்டிகளாக வாழ்க்கை நடாத்தியபொழுது, அவர்களும் தங்கள் தங்களுடைய சமூக இயக்கங்களில் பொதுவுடைமைக்கொள்கைகளையே பெரும்பாலும் தழுவி வந்தார்களென்பதை நாம் சுலபமாகவே அறிந்து சொள்ளலாம். உண்மையைக் கூற வேண்டுமேயானால், மனிதன் எப்பொழுது தன்னுடைய ஆதிகாலத்திய பொதுவுடைமைக்கொள்கைகளையும், பொதுவுடைமைத் தத்துவங்களையும் கைநழுவவிட்டு, முதலாளித்வத்தைக் கடைப்பிடிக்க ஆரம்பம் செய்தானோ, அப்பொழுதுமுதற்கொண்டுஅவன் தன்னுடைய உன்னத நிலைமையிலிருந்து விழஆரம்பித்தான் என்று தான் கூறவேண்டும். இக்கருத்தை அனுசரித்தேதான், மிக்க உன்னத நிலைமையிலிருந்த முதல் மனிதனாகிய ஆதாம் என்பவனும் கீழே விழ நேரிட்டது. ப்ளேட்டோ (Plato) என்பவர் கிரீக் தேசத்திய ஓர் தத்துவஞானியாவர். அவர், "பிரஜாதிபத்தியம்" எனக் கூறப்படும் ஓர் நூலை இயற்றியுள்ளார். அந்தப் புஸ்தகத்தில், தனிவுடைமைத் தத்துவத்தை அவர் கண்டிப்பதுடன், விவாகங்களையுங் கூட அவர்கண்டிக்கின்றார். குழந்தைகள் யாவரும் அரசாங்கத்தாராலேயே காப்பாற்றப்பட்டு, கல்வியும் அவர்களுக்கு அரசாங்கத்தின் செலவிலேயே போதிக்கப்பட்டது. உலகத்தில் காணப்படக்கூடிய எல்லாக்கொள்கைகளும், எல்லா தத்துவங்களும் அறவே நீக்கப்பட்டு, பகுத்தறிவையே அஸ்திவாரமாகக் கொண்ட ஓர் புதிய உலகமானது சிருஷ்டிக்கப்பட்டது. மக்களுக்குள்ளிருந்துவரும் ஆண்-பெண் என்ற வித்தியாசங்கூட மறைந்திருந்தது. அநேக ஆயிர ஆண்டுகளுக்கு முன்பாகவே ஓர்விதப் பொதுவுடைமைத் தத்துவமானது சீனதேசத்தில் தாண்டவமாடிக் கொண்டிருந்ததென்பதாக நாம் இப்பொழுது அறிகின்றோம். ஆராய்ச்சித்துறையில் ஈடுபட்டிருக்கும் அநேகர் இத்துறையில் இன்னும்ஆராய்ச்சிசெய்துகொண்டேவருவதால்,ஆதிகாலத்தியசீனர்களின் பொதுவுடைமைக் கொள்கைகளைப்பற்றிய விபரங்களைக் குறித்து, அதிசீக்கிரத்தில், இன்னும் அதிகமாகவே நாம் அறிந்துகொள்ளக்கூடும்.

பொதுவுடைமை தத்துவங்களும், கொள்கைகளும் ஐந்தாவது நூற்றாண்டிலேயே பெர்சியா (Persia) தேசத்தில், பொதுவுடைமை தத்துவப்போதகராகிய மஜ்டக் (Mazdak) என்னும் பெரியாரால் மக்களுக்கு மிக்க விரிவாகவும், விளக்கமாகவும் போதிக்கப்பட்டு வரப்பட்டதுடன், பொதுவுடைமைக்கொள்கைகளும் ஓர் அளவுக்கு நடைமுறையில் அனுசரிக்கப்பட்டும் வரப்பட்டன. இக் கொள்கைகளின் உண்மையான கர்த்தா ஜாராதுஸ்த் (Zaradusht) என்னும் பெரியாரேயாகும். மஜ்டக் அவர்களின் நுண்ணிய அறிவினாலும், அவருடைய சாமர்த்தியத்தினாலும் அந்த ஆதிகாலத்திலேயே பொதுவுடைமைத் தத்துவங்கள் பெர்சியா தேசத்திலே தாண்டவமாடிக்கொண்டிருந்தன. பாமர மக்களின் தரித்திர நிலையும், அவர்களுடைய தேவைகளும், பணம் படைத்தவர்களுடைய கவலையற்ற தன்மையும், அவர்களுடைய கவனமின்மையுமே மஜ்டக் அவர்களை பொதுவுடைமை சமயக்கோட்பாடுகளை ஆரம்பிக்கும் படியாக வற்புறுத்தின. அதிருப்தியும், அநாகரீகமும், கலகமுமே அத்தேயத்தின் நாலு பக்கங்களிலும் தாண்டவ மாடிக் கொண்டிருந்தன. இக்காரணத்தாலேயே அவருடைய இந்த வேலையானது மிக்க இலகுவாகவும், எளிதாகவும் நடைபெற்று வந்தது.

சுத்தோலிக்க மதத்திலும் இன்னும் இதரகிறிஸ்துமதப்பிரிவிலும் உள்ளதெய்வபக்தி மிகுந்த பாதிரிமார்கள் எவ்வாறு மார்க்ஸ், எஞ்ஜல்ஸ், லெனின் ஆகியவர்களை வெறுத்து, தூற்றியதுடன் நில்லாமல், உலக உற்பத்தி முதற்கொண்டு நாளது வரையிலும் தோன்றிய பிசாசுகளையும், சாத்தான்களையும் விட இம்மூவருமேதான் பெரிய பிசாசுகளெனவும்பெரியசாத்தான்களெனவும் பறையடித்துக்கொண்டு வருகின்றார்களோ அவ்வாறும், நமது தென்னிந்திய பண்டிதர்களும், முல்லாக்களும், பாதிரிகளும், எவ்வாறு தோழர் ஈ. வெ. ராமசாமியையும், இன்னும் இருக்கப்பட்ட ஏனைய சமதர்மிகளையும் பிசாசுகளெனவும், சாத்தான்களெனவும் தூற்றிக்கொண்டும், விஷமப்பிரசாரம் செய்து கொண்டும் வருகிறார்களோ அவ்வாறே தான் அக்காலத்தில் முதலாளித்வத்திற்கு அடிமைகளாகயிருந்து வந்த ஆசிரியர்களும், சரித்திரத்தை அரைகுறையாகக் கற்றுக்கொண்ட பண்டிதர்களும் மூட பக்தியுள்ள முகமதியர்களும் அப் பெரியாரை-அதாவது மாஜ்டக் அவர்களை உலகத்தில் சிருஷ்டிக்கப்பட்ட பிசாசுகளிலெல்லாம் பெரிய பிசாசெனவும், சாத்தான்களிலெல்லாம் பெரிய சாத்தானெனவும் தூற்றியும், பறையடித்தும் வந்தார்கள்.

அளவுக்கு மீறிய ஆபாசவார்த்தைகளால் இவர் வர்ணிக்கப்பட்டிருந்த பொழுதிலும் கூட, இவருடைய மூட விரோதிகளின் கூற்றுகளை மட்டுமே ஓர் அறிவுள்ள மனிதன் ஆராய்ச்சி செய்வானேயாகில், அப்பொழுது கூட அவருடைய கொள்கைகளும், தத்துவங்களும் இயற்கையிலேயே மிக்க மாட்சிமை பொருந்தியவைகளென்பதை அறிந்துகொள்ளக் கூடும். மஜ்டக் அவர்களின் பொதுவுடைமைத் தத்துவங்களானது ஒரு சமயம் கொஞ்சம்பக்குவப்படாதகருத்துகளை யுடையதாயிருக்கலாம். அவ்வாறிருந்த போதிலும் கூட, அந்த ஆதி நாளிலேயே ஒரு மனிதன் சமதர்மத்தின் உயர்வை உணர்ந்து அதன் பெருமையை அனுபவித்து வந்தானெனக் கூறப்படுவதானது மிகவும் வியக்கப்படக் கூடியதும் புகழப்படக்கூடியதுமாகும். பணக்காரர்களுக்கும், பிரபுக்களுக்கும், செல்வாக்குள்ள ஜொராஸ்டிரிய குருக்கள் வகுப்பினர்களுக்கும் மஜ்டக் ஓர் பெரிய விரோதியாகவே யிருந்து வந்தார். பிரபுக்களிடத்திலும் குருமார்களிடத்திலும் குபாத் (King Kubad) என்னும்அரசனேபகைமை பூண்டு, அவ்விரண்டு வகுப்பு மக்களையும் விரோதித்து வந்தபடியால், அந்த அரசன் மஜ்டக் அவர்களிடம் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டான். முதன் முதலாக அந்த அரசனும், மஜ்டக்கும்தோற்கடிக்கப்பட்டார்கள். ஆனால் சில வருடங்கள் சென்ற பிறகு உயர்ந்த வகுப்பினர்கள் எனக்கருதப்பட்டு வந்தவர்கள் யாவரையும் மஜ்டாக் அவாகள் தோற்கடித்து, தொழிலாளர்களையும் ஏழை மக்களையும் ஒன்றாகத் திரட்டி, அவர்களுடைய உதவியைக் கொண்டு மீண்டும் குபாத் என்னும் அரசனை சிம்மாதன மேற்றினார். மஜ்டக் அவர்களின் அதிகாரம் அப்பொழுது உச்சஸ்தானத்திலிருந்து வந்தது. பணக்காரர்களின் கொடுங்கோன்மையிலிருந்தும், ஈவு இரக்கமற்ற குருக்கள்மார்களிடத்திலுமிருந்து மக்களை மீட்டு, இரக்ஷித்த புண்ணியவான் என்பதாக உலகமெங்கும் அவரைப் போற்றினார்கள்.

அரசும், பொதுவுடைமையும் கைகோர்த்துக்கொண்டு செல்ல முடியாது. மஜ்டக் அவர்களின் கொள்கையானது ஏகாதிபத்தியத்தின் ஆணி வேரை அதி சீக்கிரத்திலேயே அரித்து, ஜீரணித்துவிடுமென்பதை குபாத் என்பவன் அறிந்துகொண்டான். ஆனால் மஜ்டக்கை பின்பற்றக்கூடிய மக்களே அதிகாரத்திலிருந்து வந்தார்கள். ஆகையால், அரசன் மஜ்டக் என்பவருக்கு விரோதமாக பிரபுக்களிடத்திலும், குருமார்களிடத்திலும் ஓர் ஒப்பந்தம் செய்துகொண்டான். அரசனுடைய குமாரர்களில் ஒருவன்மஜ்டக்அவர்களின்பலத்தஉதவியாளனாகயிருந்துவந்தான். ஆகையினாலே, மஜ்டக்கும் அவரைப் பின் பற்றியவர்களும் அவனையே சக்ரவர்த்தியாக முடி சூட்ட வேண்டுமென விரும்பினார்கள். அரசனுடைய மற்றொரு குமாரனை குஸ்ரா Khusraw என்பவனை அரசனாக்க வேண்டுமென ஒரு கூட்டத்தினர் விரும்பினார்கள். பொது

தொடர்ச்சி 13ம் பக்கம்பார்க்க

ரோஜா முத்தையா

# புரட்சி

ஈரோடு 1934- ஜூன் மீ 17-உ.


## சம்பளக் கொள்ளைக் கொடுமை.

இந்தியாவுக்கு பிரிட்டிஷ் அரசியல் முறை ஏற்பட்ட பின் உண்டான கொடுமைகளில் எல்லாம் தலை சிறந்த கொடுமை சம்பளக்கொள்ளைக் கொடுமையேயாகும். இக்கொடுமைக்குப் பொறுப்பாளிகள் பிரிட்டிஷாரே என்று சொல்லிவிட முடியாது. இந்தியர்களும் சிறப்பாக இந்திய அரசியல் கிளர்ச்சிகளும் மற்றும் இந்திய தேசியமுமே யாகும்.

பிரிட்டிஷார் தாங்கள் அன்னியர் என்னும் பிரிவிலிருந்து தப்பித்துக்கொள்ளவும், தேசியக் கிளர்ச்சியின் உள் தத்துவம் இன்னதென்று தெரிந்து அதற்கு இணங்கவும் தேசியவாதிகள் என்பவர்களின் அபிலாசைகளைப் பூர்த்தி செய்யவும் முற்பட்டதே பிரிட்டிஷ் அரசியல் தந்திரத்தால் இந்தியாவுக்கு ஏற்பட்ட கெடுதிகளுக்கெல்லாம் காரணம் என்று சொல்லலாம்.

இன்றையத்தினம் உலகத்தில் எந்த தேசத்திலும்—எவ்வளவு செல்வம் பொருந்திய தேசத்திலும் உள்ள அரசாங்க உத்தியோகங்களில் இந்தியாவில் இருந்துவரும் சம்பளக்கொள்ளைக் கொடுமை இல்லை என்றே சொல்லுவோம்

இந்திய மக்களில் ஒரு மனிதனுடைய ஒரு நாளைய சராசரி வரும்படி 0-1-6 பை என்று பொருளாதார நிபுணர்களால் கணக்கிடப்பட்டிருக்கிறது. இது இந்தியப் பொருளாதார நிபுணர்களும் இந்திய தேசிய வாதிகளும் அவர்களது தலைவர்களும் ஆகிய எல்லோராலும் இது ஒப்புக்கொண்ட விஷயமாகும்.

ஆகவே ஒருமனிதனுடைய சராசரி வரும்படி மாதம்1க்கு 2-13-0 அல்லது 3 ரூபாயிக்கு உட்பட்டதேயாகும். மேலும் கூறவேண்டுமானால் இவ்வளவிற்கும்கூட மார்க்கமில்லாமல் இதைவிடக் குறைவான வரும்படி சம்பாதிக்கின்றவர்களும் உண்டு.

இந்தியப்பொருளாதார நிபுணர்கள் என்பவர்களாலும், இந்திய தேசியத் தலைவர்கள் என்பவர்களாலும் ஆதரிக்கப்படும் தேசியக் கைத்தொழில் என்பதின் மூலம் இந்திய மக்களுக்குக் கிடைக்கச் செய்யும் வரும்படி தினம் 0-1-6 பை. சில சமயங்களில் 0-1-0 அணு, சில சமயங்களில் இதைவிடக் குறைவும் ஆகும்.

எப்படியெனில் சுயராஜ்யத்துக்கு யார்க்கம் என்று சொல்லப்படும் கதர் நூல் நூற்பதின் மூலம் நபர் ஒன்றுக்கு தினம் ஒரு அணு, ஒண்ணரை அணுத்தான் எதிர்பார்க்கப்படுகின்றது. இதற்குக்காரணம் என்னவென்றால் "இந்த வரும்படிகூட கிடைப்பதற்கு மார்க்கமில்லாமல் கஷ்டப்படும்—பட்டினி கிடக்கும் மக்கள் கோடிக்கணக்காயிருக்கிறார்களாதலால் இதுவே கிடைத்தால் போதும்" என்று சொல்லப்படுகின்றது.

இந்தப்படியான தினம் 0-1-6 பை. வரும்படி என்பதுகூட மாதம் 1000, 10000 ரூபாய்கள் வரும்படி உள்ளவர்களின் சம்பாதனைத் தொகையையும் தினம் கால் அணு, அரை அணு வரும்படி உள்ளவர்களது சம்பாதனைத் தொகையையும் கூட்டி சராசரி வகுத்துவந்த தொகையே மேற்சொன்ன (0-1-6 பை) வரும்படியாகும். இதை அனுசரித்தே ஒரு மனிதனின் நித்திய வாழ்க்கைக்கு இன்றைய நிலைமையில் சராசரி தேவை எவ்வளவு ஆகுமென்று கணக்குப் பார்த்தால் மேற்கண்ட 0-1-6 பையேபோதும் என்று சொல்லக்கூடிய அனுபவத்தில்தான் அதிகமான மக்கள் இருந்துவருகிறார்கள். இதைவிடக்குறைந்த அளவிலும் ஜீவித்து வருகின்றவர்கள் கோடிக்கணக்கில் இருந்து வருகிறார்கள் என்பது மிகைபடுத்திச் சொல்வதாக ஆகாது. இதற்குக் காலநிலையும் அனுகூலமாய்த்தான் இருக்கிறது.

இன்று அரிசி ரூபாய் 1க்கு பட்டணம் படியில் 8 படி கிடைக்கின்றது. இந்தியாவுக்குள் எந்த ஊரிலும் ரூபாய் 1க்கு 7 படிக்குக் குறைவில்லாமல் கிடைக்கலாம். ஒரு படி அரிசி போட்டுச் சமைத்தால் சராசரி மக்கள் 8 பேர் சாப்பிடலாம். இதில் அபிப்பிராய பேதமே இருக்கக்காரணமில்லை. அப்படியானால் ஒவ்வொரு மனிதனின் மூன்று வேளை சாப்பாட்டுக்கும் சேர்த்து அரிசியும் மற்ற ஆகாரச்சாமான்களும் சேர்த்து கணக்குப்பார்த்தால் மேல் குறிப்பிட்டதான தினம் ஒண்ணரையணு வரும்படி சராசரி மக்களுக்கு போதுமானதென்றே சொல்லலாம். மற்றபடி துணி வீடு, வைத்தியம், படிப்பு ஆகியவைகளுக்கு இதில் பணம் மீதியில்லை. ஆனதினால் தான் இந்தியாவில் தரித்திரர்கள், ஏழைகள் அதிகமாக இருக்கிறார்கள் என்று சொல்லப்படுவதாகும்.

இப்படிப்பட்ட நிலை உள்ள இந்த தேசத்தில் அரசியல் உத்தியோகங்களில் சேர்ந்துள்ள ஜனங்களுக்கு மீ 1-க்கு 100, 500, 1000, 2000, 5000, 10000, 20000 ரூபாய்கள் என்கின்ற கணக்கில் சம்பளங்கள் கொடுக்கப்படுகின்றன. இந்தப்படி கொடுக்கப்படும் பணங்கள் மேல் கண்டபடி தினம் 1க்கு சராசரி ஒண்ணரையணு வரும்படி உள்ள மக்களிடம் வரியாக வசூலித்தே கொடுக்கப்படுகிறது. இவ்வளவு அதிகப்படியான சம்பளங்கள்ஏன் கொடுக்கப்பட வேண்டும் என்பதற்குச்சரியான காரணங்கள் எதும் சொல்லப்படவில்லை. சொல்லப்படவில்லை என்பது மாத்திரம் அல்லாமல் இந்தப்படி ஏன் கொடுக்கப் படுகின்றது என்று கூட சமீபகாலம் வரை எந்த தேசிய வாதிகளும்—தேசிய கிளர்ச்சிக்காரர்களும்—தேசியத்தலைவர்களும்—ஜனப்பிரதிநிதிகள் என்பவர்களும்கவலைகொண்டு கவனித்தவர்களும், கேட்டவர்களும் அல்ல. மேலும் இவர்கள் அதிகச்சம்பளங்களைப்பற்றி கண்டிக்காமல்கவலைப்படாமல் இருந்தார்கள் என்று மாத்திரம் சொல்லுவதற்கில்லாமல் இருக்கிற சம்பளம் போதாதென்றும் இன்னும் அதிகச் சம்பளம் வேண்டுமென்றும் கேட்டு வந்திருக்கிறார்கள் என்பதற்கு வேண்டிய ஆதாரங்கள் இருக்கின்றன.

சம்பளக் கொடுமை ஒரு புறமிருக்க மற்றொரு புறம் இப்படிப்பட்ட சம்பளங்கள் உள்ள உத்தியோகங்களும் நாளுக்கு நாள் பெருக்கப்பட்டு வந்து சுமார் 30, 40 வருஷங்களுக்கு முன் இருந்த சம்பளங்கள் 100-க்கு 100ரூ. வீதம் உயர்த்தியும், சில உத்தியோகங்களுக்கு 100-க்கு 300 வீதம்உயர்த்தியும் வந்திருப்பதுடன் இப்படிப்பட்ட உத்தியோகங்களின் எண்ணிக்கையும் 100க்கு 100வீதமும், சில விஷயங்களில் 100க்கு 300, 400 வீதமும் உயர்த்தப்பட்டு விட்டது.

உதாரணமாக மேல் நிலையில் ஹைகோர்ட் ஜட்ஜிகள் 5பேர் இருந்து வந்ததற்கு பதிலாக இன்று 15, 16 ஹைகோர்ட் ஜட்ஜிகளும், மந்திரிகள் 2பேர் இருந்து வந்ததற்குப் பதிலாக 7 மந்திரிகளும் இதுபோலவே கீழ் நிலைகளிலும் ஜில்லாவுக்கு 2 முன்சீப்புகளுக்குப் பதிலாக 6, 7 முன்சீப்புகளும், ஜில்லாவுக்கு 2 டிப்டிகலெக்டர்களுக்குப்பதிலாக 4, 5டிப்டி கலெக்டர்களும் இப்படியாக ஒவ்வொரு இலாகாவிலும் சம்பளத் தொகையும், உத்தியோக எண்ணிக்கையும் பெருகி ஜனங்களுக்காக அரசாங்க நிர்வாகமும், உத்தியோகமும் சம்பளமும் என்று சொல்லுவதற்கே இல்லாமல் அரசாங்கத்துக்காகவும், உத்தியோகஸ்தர்களுக்காகவும் அவர்களது சம்பளத்துக்காகவும் ஜனங்கள் இருக்க வேண்டியவர்களாக ஆகிவிட்டார்கள்.

இப்படியெல்லாம் அரசாங்க உத்தியோக சம்பளக் கொடுமை ஏற்பட்டும் மக்களுடையகல்வி, அறிவு, நாணயம், ஒழுக்கம், ஒற்றுமை, கூட்டுறவு முதலிய அவசியமானவைகளில் ஏதாவது விருத்திகள் ஏற்பட்டிருக்கின்றதா என்று பார்த்தால் ஒரு துறையிலாவது உண்மையான விருத்திக்குஅறிகுறிகூட இல்லையென்றேசொல்லவேண்டியிருக்கிறது. அதுமாத்திரமல்லாமல் முன்புஇருந்ததைவிட அனேக துறைகளில் கீழ் நோக்கி இருக்கின்றது என்று சொல்வதற்குக்கூட பலகாரணங்கள் இருந்துவருகின்றன.

இந்தப்படியான உத்தியோகப் பெருக்கமும், சம்பள உயர்வும்சேர்ந்து இன்று நம்நாட்டில் உள்ள எல்லா மக்களையும் தங்கள் வாழ்க்கைக்கு உத்தியோகத்தையே எதிர்பார்க்கும்படிக்கும், செல்வம் சேர்ப்பதற்குச் சம்பளத்தையேஆதாரமாகக் கொள்ளும்படிக்கும் அதற்கே ஒவ்வொருவரும் தங்களை தயார் செய்துகொள்ளும்படியும் தூண்டி வருகின்றதேஒழிய பாடுபட்டு வாழ எந்த மனிதனையும் தூண்டச்செய்யவில்லை. இந்திய மக்கள் ஒவ்வொருவரும் இன்று சோம்பேரி வாழ்க்கையில் வாழ ஆசைப்படுவதும் மொத்த ஜனத்தொகையில் சரீரத்தில் பாடுபட்டு வேலை செய்பவர்களைவிடசோம்பேரிகளே கணக்கில் மிகுந்திருக்க நேரிட்டதும் இதனாலேயேதான் என்பது நமது உறுதியான அபிப்பிராயமாகும்.

கல்வி இல்லாதவர்கள் எல்லாம் சரீரத்தால் பாடுபட வேண்டியவர்கள் என்றும் ஏதோ இரண்டு

எழுத்துகூட்டிப் படிக்கத்தெரிந்தவர்கள் எல்லாம் அறிவினால் வேலைசெய்பவேண்டுமே ஒழிய, சரீரத்தால் பாடுபட முடியாதவர்கள் என்றும் நினைக்கத்தக்க மனப்பான்மை ஏற்பட்டிருக்கின்றது. எழுதப்படிக்கத் தெரியாதவர்களே பாடுபட வேண்டியவர்கள் என்பதாக ஆகிவிட்டதால் தொழில் முறை மேன்மையடையாமல் போக ஒரு காரணமாகிவிட்டது. படித்தவர்கள் உத்தியோகத்தையே பிரதானமாகக் கருதி அதிலேயே பிரவேசித்து விட்டதால் போட்டி அதிகம் ஏற்பட்டு உத்தியோகத்தின் யோக்கியதை குறைந்ததுடன் அதற்கு வேண்டிய ஒழுக்கம்,நாணயம் நீதி முதலியவைகளும் குறைய நேரிட்டுவிட்டன. இதன் பயனாய் ஜனங்களுக்கு இரண்டுவிதக் கெடுதிகள் ஏற்பட்டு விட்டன. ஒன்று அதிக வரிக் கஷ்டம் அதாவது ஏழைகள் பாடுபடுபவர்கள் சம்பாதிக்கும் செல்வம் எல்லாம் இச்சோம்பேரிக் கூட்டங்களுக்கு சம்பளத்திற்காக அழ நேரிட்டு வரிகளாகக்கொடுத்துவருவதும், இரண்டு, அரசாங்க நிர்வாக ஒழுக்கக் குறைவு ஏற்பட்டு ஜனங்களுக்குநீதி, சமாதானம், பத்திரம் ஆகியவைகள் இல்லாமல்போனதும் ஆகும். ஆக இந்த இரண்டு காரியங்களே இன்று இந்திய மக்களின் வாழ்க்கைக்கு பெருத்த கஷ்டமாக இருந்து வருகின்றன.

இவை இரண்டும் சரிப்பட்டு விடுமேயானால் அரசியலில் இந்தியாவுக்கு எவ்வித குறைவும் இல்லை என்று ஒருவாருசொல்லலாம். ஆனால் இந்திய அரசியல் கிளர்ச்சியில் இந்த இரு குறைகள் நீங்குவதற்காகஇதுவரைஎவ்வித கிளர்ச்சியும் செய்ததும் இல்லை, இன்றும் செய்யப்படுவதாகவும் தெரியவில்லை. அது மாத்திரமல்லாமல் இதுவரை நடந்து வந்த அரசியல் கிளர்ச்சியானது பெரிதும் இவ்வித அதிக சம்பளம் பெறவும் யோக்கியமும், நாணயமுமாய் நடந்துகொள்ள முடியாத உத்தியோகங்களைப் பெருக்கி அவற்றைப் பெறவுமே செய்யப்பட்டு வந்திருக்கிறதே ஒழிய வேறில்லை என்பது யாவரும் அறிந்ததாகும்.

இந்தியாவில் இன்று பல அரசியல் கக்ஷிகள் இருக்கின்றனஎன்றாலும் அவற்றினுடைய முக்கியமானதும்முதன்மையானதும்ஒன்றேஆனதுமான உத்தேசமெல்லாம் இப்படிப்பட்ட சம்பளமும் உத்தியோகமும் பெருவதல்லாமல் வேறொன்றும் இல்லை என்பது உண்மையான அபிப்பிராயமாகும்.

நிற்க உலகத்தில் இந்தியாவைப் போல் மற்றும் எத்தனையோ தேசங்கள் இருக்கின்றன. அவற்றில் அரசியல் கிளர்ச்சிகள் நடந்தவண்ணமாகவே இருக்கின்றன. அரசாங்கத்தைக் கைப்பற்றி பூரண சுயேச்சை என்னும் பேரால்பொதுஜனங்களால் பல நாடுகளில் அரசாங்கம் நடைபெற்றும் வருகின்றன- அப்படிப்பட்ட தேசங்களின் செல்வ நிலைமைகள் இந்தியாவைவிடப் பலமடங்குஉயர்ந்ததாகவும் இருக்கின்றன. உதாரணமாக இந்தியாவில் ஒரு மனிதனின் சராசரி வரும்படி தினம் ஒன்றுக்கு 0-1-6 ஆனால் இங்கிலாந்து அமெரிக்கா முதலிய நாட்டு மக்களின் சராசரி வருமானம் 1-8-0, 2-0-0 ரூபாய்களாகும். இந்த தேசத்தின் வரி வருமானம் வருஷம் 200 கோடி ரூ ஆனால் இங்கிலாந்துதேசத்தின் வருமானம்வருஷம் ஒன்றுக்கு 1200 கோடி ரூபாய்களாகும்.அப்படிப்பட்ட தேசங்களில் அரசாங்க உத்தியோகங்களின் சம்பளங்களைப் பார்தோமேயானால் நம்து நாட்டு சம்பளத்தின் கொள்ளை போகும் முறையும், கொடுமையும் பாடுபடும் ஏழை ஜனங்களை பாடுபடாத சோம்பேரிகள் எப்படி வஞ்சிக்கிறார்கள் என்கின்ற உண்மையும் ஆகியவைகள் எளிதில் புலப்படும். இந்தியா வைசிறாய் என்கின்ற உத்தியோகத்துக்கு மாதம் 20 ஆயிரம் ரூபாயானால்இந்தியா, இங்கிலாந்து, கானடா, ஆஸ்ட்ரேலிய முதலிய பல தேசங்களின் ஆக்ஷிக்கு மேலதிகாரியாய் இருந்து இந்தியவைசிறாயையும், இன்னும் பலவைசிராய்களையும் நியமிக்கவும் நீக்கவும் அதிகாரமுள்ள பிரிட்டிஷ் தலைமை அதிகாரிக்கு மாதம் 5000 ரூ- சம்பளமேயாகும்.

பிரஞ்சு தேசத்து குடிஅரசுத் தலைவருக்கு அதாவது அரசர் இல்லாமல் அரசருக்கு பதிலாய் இருந்து அந்த தேசத்துக்கும் மற்றும் அதன் ஆக்ஷிக்குக்கீழ்ப்பட்ட ஏனைய தேசங்களுக்கும் தலைவராக இருப்பவருக்கு மாதம் 1க்கு 1500 ரூபாய் சம்பளமே கொடுக்கப்பட்டு வருகின்றது. நம் நாட்டு நிர்வாக சபை அங்கத்தினர்கள் மந்திரிகள் ஆகியவர்கள் சம்பளங்கள் அமெரிக்கா கவர்னர்கள் சம்பளங்களை விட அதிகமாகவும், பிரிட்டிஷ் தலைமை அதிகாரி நிர்வாக சபை அங்கத்தினர்கள் மந்திரிகள் ஆகியவர்கள் சம்பளங்களை விட 100க்கு, 100பங்கு 150 பங்கு அதிகமாகவும் இருந்து வருகின்றன. மேல் நாட்டு அரசாங்கங்களின் வரி வரும்படி நம் நாட்டு வரி வரும்படியை விட 5, 6மடங்கு அதிகமாகவும், அந்நாட்டு மக்களின் வரும்படி நம் நாட்டு மக்களின் வரும்படியைவிட 20 பங்கு 30 பங்கு அதிகமாகவும் இருக்க உத்தியோகசம்பளங்கள் மாத்திரம் அந்நாட்டுசம்பளங்களைவிட இந்தியாவில் பலமடங்கு அதிகமாய் இருந்தால் இந்த அரசாங்க நிர்வாகமும் உத்தியோக சம்பளமும் தேசத்தின் நிலைமையும் ஜனங்களுடைய க்ஷேமலாபங்களையும் அனுசரித்து நடத்தப்படுகின்றது என்று எப்படி சொல்லக் கூடும். ஆகவே இன்றைய தினம் நமது நாட்டில்உள்ள எல்லாவித அரசியல் கிளர்ச்சிகளையும் தகர்த்து ஒழித்து எறிந்து விட்டு இந்தக்கொள்ளை போன்ற சம்பளக் கொடுமையை ஒழிப்பதற்கு முயற்சித்தல் அதுவேஇந்தியநாட்டுஏழைமக்களுக்குச்செய்த அளவிட முடியாத நன்மையாகும்.

மந்திரிகளுக்கு ௴ 5000 ரூ சம்பளம் என்கின்ற திட்டம் இல்லாதிருக்குமானால் நமது நாட்டு காங்கிரஸ், மிதவாதி சங்கம், ஜஸ்டிஸ் கக்ஷி ஆகியவைகளின் ஒழுக்கமும் நாணயமும் இவ்வளவு கேவலமாகவும் இழிவாகவும் போயிருக்காது என்பதுடன் நிர்வாகங்களும் இவ்வளவு பொறுப்பற்ற முறையில்ஏற்பட்டிருக்காது.கக்ஷிகளின் மற்றக் கொள்கைகள் எப்படி இருந்தாலும் அரசியல் ஆதிக்கம் கைக்கு வந்தால் தங்கள் அதிகாரத்துக்குள் இருக்கப்பட்ட உத்தியோகங்களின் சம்பளங்களை நாட்டின் தகுதிக்கு ஏற்ற இன்ன அளவுக்கு குறைத்து விடுகின்றோம் என்றும் தங்கள் அதிகாரத்துக்கள் கட்டுப்படாத சம்பளங்களைக் குறைக்க அதிகாரம் பெருவதற்கு கிளர்ச்சி செய்கின்றோம் என்றும் சொல்லி அந் நிபந்தனையின் மேல் எந்தக்கட்சி புறப்பட்டாலும் அத்துடன் நமக்கு எந்தவிதப் பிணக்கும் இருப்பதற்கில்லை. அன்றியும் அக்கொள்கைகள் ஈடேற அவற்றுடன் ஒத்துழைக்கவும் ஆக்ஷேபணை இல்லை.

ஜஸ்டிஸ்கட்சி கூட தாங்கள் மறுபடியும் மந்திரிகளாய்வரநேரிட்டால் மந்திரிகள் சம்பளம் எந்தக்காரணத்தை முன்னிட்டும் ௴ 1000ரூபாய்க்குமேற் போகாமல் அதற்குள்ளாகவே குறைத்துக்கொள்ளுகிறோம். என்றும் இந்த விகிதமே மற்ற உயர்ந்த சம்பளங்களையும் குறைத்து விடுகிறோம் என்றும் சொல்லி அந்தப்படி நடக்க முன்வருவார்களானால் அதற்காகவே அதை இன்றைய நிலைக்கு தீவிரக்கட்சி என்று கூட சொல்லிவிடலாம்- அன்றியும் அது வெற்றி பெறும் என்பதிலும் யாரும் சந்தேகப்பட வேண்டியதில்லை. அப்படிக்கில்லாமல் அதாவது சம்பளத்தில் குறைத்துக்கொள்ளாமலும் மற்ற உயர்ந்த சம்பளங்களைக் குறைக்காமலும் இருந்து கொண்டு இவர்கள் ஜனங்களுக்கு எவ்வித நன்மை செய்கிறோம் என்று சொல்வதாய் இருந்தாலும் இவர்களுக்கு ஜன சமூக ஆதரவு கிடைப்பது கஷ்டமான காரியமேயாகும்.

காங்கிரஸ் கட்சிக்கு ஏதாவது நாட்டைப்பற்றி பொருப்பிருந்து உண்மையாய் அது தேசத்து மக்களுக்கு உழைப்பதாயிருக்குமானால் தீண்டாமையை விலக்குவேன் என்பதாலும் தீண்டாத ஜாதியார்களை கோவிலுக்குள் அழைத்துச் செல்கிறேன் என்பதாலும் இந்தியா பூராவும் கதர் மயம்ஆக்கிவிடுவேன்என்பதாலும் ஜனங்களை ஏமாற்றிவிடலாம் என்கின்ற எண்ணத்தை விட்டுவிட்டு இந்தக் கொள்ளையாம் சம்பளக் கொடுமையை அடியோடு ஒழித்துவிடுவோம், நாங்களும் மந்திரிகளாக நேர்ந்தால் ௴ 1000 ரூபாய்க்கு கீழாகவே சம்பளம் பெருவோம் என்று உறுதிகூறிவிட்டு வரப்போகும் தேர்தலில் தலைகாட்டட்டும். அப்படிக்கில்லையானால் அது எவ்விதத்திலும் பயனுள்ளதென்றோ நாணயமானது என்றோ சொல்லிக்கொள்ள சிறிதும் யோக்பத்தை அற்றதாகிவிடும்.

ஆதலால் அரசியலின் பேரால் வாழ்க்கை நடத்த எண்ணி இருக்கிறவர்கள் தேர்தலில் நின்று பயனடையக் கருதி இருக்கின்றவர்கள் இதைக் கவனித்து நடந்துகொள்ளுவார்களாக.

---

## திங்களூரில் சமதர்மப் பிரசாரம்

தோழர் ப ஜீவானந்தம். சொற்பொழிவு.

3-6-34ந்தேதி ஞாயிற்றுக்கிழமை மாலே 7-மணிக்கு திங்களூர் வாலிபர் சங்கத்தின் ஆதரவில் ஷெயூர் ஆஸ்பத்திரி முன்பாக ஓர் பொதுக்கூட்டம் நடை பெற்றது.

கூட்டத்திற்கு ஷை சங்கத்தலைவர் தோழர். டாக்டர், பி. சௌந்தரராஜ் அவர்கள்தலைமை வகித்தார். கோவை தோழர்.எம். ஆர். ராம்தாஸ்இனியசமதர்மகீதங்கள்பாடினர். தலைவர்,தோழர்ப. ஜீவானந்தம் அவர்களைகூட்டத்திற்கு அறிமுகம் செய்து வைத்தார்.

பின்னர் தோழர். ப. ஜீவானந்தம் அவர்கள் சமதர்மம் என்னும் பொருள் பற்றிப் பேசுகையில் முதலாளி, வர்க்கத்தினர் ஏழைத்தொழிலாளர்களை வஞ்சித்துப் பணத்தைக் கொள்ளையடித்து தாங்கள் சுகமனுபவிப்பதுடன் தொழிலாளிகளை அடக்கி, ஒடுக்கி, அடிமைப் படுத்தி வருகிறார்களென்றும், புரோகிதர், பார்ப்பனர் ஆகிய இவர்கள் பாமரர்களை 'மதம், ஜாதி, கடவுள் என்னும் பெயரால் ஏமாற்றி தாங்கள் சந்தோஷமான வாழ்க்கை நடத்திக் கொண்டு, பார்ப்பனரல்லாத மக்களில் பலரை, தீண்டப்படாதவன், வேண்டாதவன், வீதியில் நடக்கக்கூடாதவன்,என்றும் தாழ்வு படுத்தி, இழிவு படுத்தி கேவலப் படுத்தி வருகிறார்களென்றும், பாமர மக்கள் மதம், கடவுள், தலைவிதி என்ற நம்பிக்கை கொண்டு தன் முயற்சி, தன்னம்பிக்கையற்று பிற்போக்கான நிலையையடைகிறார்களென்றும்; இவையெல்லாம் நீங்கி ஏழை, பணக்காரன், முதலாளி- தொழிலாளி, ஆண்- பெண், உயர்ந்தவன்- தாழ்ந்தவன் என்ற பேதங்கள் ஒழிந்து சுதந்தரம், சமத்துவம், சகோதரத்வம் நிலவி இன்ப வாழ்க்கையடைய 'சமதர்மம்' தான் சிறந்ததென்றும், இன்று ரஷ்யாவில் சமதர்ம ஆட்சி நடை பெற்று வருகின்றதென்பதையும், பல உதாரணங்களுடன் எடுத்துக்காட்டி, தெளிவாக, உற்சாகமாக- உருக்கமாக- சுமார் 2 மணி நேரம் பிரசங்கம் செய்தார்.

சங்கக் காரியதரிசி தோழர் எம். ஜோதிஞனத் அவர்கள் வந்தனோபசாரங் கூறிய பின் இரவு 9-30 மணிக்கு கூட்டம் இனிது கலைந்தது.

## மன்னார்குடி சுயமரியாதைச் சங்கம்.

3-6-34 மத்தியானம் 2-30 மணிக்கு சென்னையிலிருந்து சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் அவர்கள் மன்னார்குடி சுயமரியாதைச் சங்க வி...யமாகத் தலைவர், காரியதரிசி, அங்கத்தினர் முதலியவர்களின் பெயர்களையும், மற்றும் கொள்கை சம்மந்தமாகவும் தோழர் கே. ஆர் பால் அவர்களை விசாரித்து எழுதிக்கொண்டார். இப்படியும் பல ஊர்களிலுள்ள சுயமரியாதைச் சங்கங்களின் ரிபோர்ட்டுகளை எடுத்து வருவதாகத் தெரிகிறது. கொள்கை என்னவென்று விசாரித்ததற்கு கே. ஆர். ஜி. பால். முதலாளி, தொழிலாளி, பணக்காரன், ஏழை, நிலக்காரன், நிலமில்லாதவன், உயர்ந்த ஜாதிக்காரன், தாழ்ந்த ஜாதிக்காரன் முதலியவைகள் மறைந்து நிறபேதமற்று உலகிலுள்ள மக்கள் யாரும் ஒரே குடும்பம்போல் வாழவேண்டியதுதான் எங்களுடைய கொள்கை என்றார்.

சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் இதையெல்லாம் எப்படிப் போக்க நினைக்கிறீர்கள்.

கே. ஆர். ஜி. பால்அரசாங்கத்தின் ஆதரவிலேயே போக்கப்பட வேண்டும் என்றார். இவைகளையெல்லாம் எழுதிக்கொண்டு போய்விட்டார்கள். என ஷை சங்கக் காரியதரிசி எழுதுகிறார்.

## நாடார் மஹாஜன சங்கம் மதுரை கவுன்ஸில் மீட்டிங்கு.

பவ—வருஷம் வைகாசி மீ 27 உக்கு 1934 ஹு ஜுன் 9உ சனிக்கிழமை மாலே 6-மணிக்கு சங்கம் ஆபீஸில் ராம்னுட்டிஸ்ட்ரிக்போர்ட் மெம்பர், மதுரை ஸ்ரீமான் பா. மா. பாண்டியநாடார் அவர்கள் அக்கிராசனத்தின் கீழ் நடைபெற்ற கவுன்ஸில் மீட்டிங்கில் அடியிற்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பெற்றன.

1. 1933—வருஷம் ஏப்ரல் மீ 1உ முதல் 1934-ஹு மார்ச்சு மீ 31உ-யோடு முடிந்த ஒருவருட வரவு செலவு கணக்குகளைக் குறித்து பொதுக் காரியதரிசிகளால் கவுன்ஸிலுக்கு சமர்ப்பிக்கப்பெற்ற ரிப்போர்ட்டை வாசித்து ஒப்புக்கொள்ளப் பெற்றது.

2. பாளையங்கோட்டையில் நடைபெற்ற 15-வது மஹாநாட்டின் வரவு செலவு கணக்கை வரப்பெற்று விஷயம் ஆலோசனைக் கெடுத்துக்கொள்ளப் பெற்றதில் ரிசப்ஷன் கமிட்டியாரிடமிருந்து வரவு செலவு கணக்கு இதுவரை கிடைக்காததைப் பற்றி இக்கவுன்ஸில் வருந்துவதுடன் ஷை கணக்கை தீவிரமாக முடித்து அனுப்பும்படி ரிசப்ஷன் கமிட்டிக்கு கடிதம் எழுத தீர்மானிக்கப் பெற்றது.

3. காலஞ்சென்ற பரமக்குடி, வக்கீல், ஸ்ரீமான் எ. பொன்னையா நாடார் பி. எ. எல். டி. அவர்கள் ஸ்தானத்தில் அருப்புக்கோட்டை, ஸ்ரீமான் சொ. அ. சொக்கலிங்க பாண்டிய நாடார் அவர்களை கவுன்ஸில் மெம்பராக நியமனம் செய்யப் பெற்றது.

4. சங்கத்தின் 1933-34ம் வருடத்திய வரவு செலவு கணக்கை பரிசோதிப்பதற்காக அடியிற் கண்ட கனவான்களை ஆடிட்டர்களாக நியமனம் செய்யப்பெற்றது.

தோழர்கள் ஆர். வி. ஷண்முகம் நாடார் அவர்கள், மதுரை.

,, பி. வி. டி. மாரியப்ப நாடார்,, தேனி.

5. நமது சங்கம் ஏழை மாணவர்ஸ் காலர்ஷிப் 3-வது வாட்டரியின் பிரைஸ் எடுக்க வேண்டிய 1934-வருஷம் ஜுன் மீ 10ம் தேதியைடிசம்பர் மீ 10ம் தேதியாக மாற்றியிருப்பதை இக்கவுவில் ஒப்புக்கொள்ளுகிறது.

6. (எ) தூத்துக்குடி, நாடார் பாங்கின் நிகர லாபத்திலிருந்து 2 பெர்சென்ட் நாடார் மஹாஜன சங்கத்திற்கு கொடுப்பதாக 27-3-1933உ பாங்கு டைரெக்டர் மீட்டிங்கில் செய்த தீர்மானத்தின்படியும், 2 பெர்சென்டுக்கு மேற்கொண்டு கொடுப்பதை அடுத்த வருடத்தில் யோசிப்பதாக 19-6-33உ டைரெக்டர் மீட்டிங்கில் செய்த தீர்மானத்தின்படியும் இதுவரை டைரெக்டர்கள் நடந்து கொள்ளாமல் 28-5-34உ லெட்டர் மூலம் சென்ற வருட ஆதாயத்திலிருந்து நாடார் மஹாஜன சங்கத்திற்கு எவ்வித தொகையும் கொடுக்க முடியாதென்று எழுதியிருப்பது குறித்து இக்கவுன்ஸில் டைரெக்டர்களின் நடத்தையை பலமாகக்கண்டிக்கிறது.

(பி) நாடார் பாங்கின் நிகர லாபத்திலிருந்து 10 பெர்சென்ட் மஹாஜன சங்கத்திற்கு வரப்பெற்ற பாங்கு 79-வது சட்டப்படி பாங்கு ஜெனரல் பாடி மீட்டிங்கை கூட்ட உடனே முயற்சி எடுக்க காரியதரிசிகளுக்கு இக்கவுன்ஸில் அதிகாரம் கொடுக்கிறது.

இரவு 9-30 மணிக்கு வந்தனோபசாரத்துடன் மீட்டிங்கு முடிவு பெற்றது.

P. S. சிதம்பர நாடார்.
A. A. ஆறுமுக நாடார்.
பொதுக்காரியதரிசிகள்.

## கும்பகோணம், போலீஸ் சோதனை

"தஸ்தா. வேஜுகளுக்கு நகல் எடுத்துக்கொள்ளப்பட்டது.

1-6-34 வெள்ளிக்கிழமை, மாலே 4 மணிக்கு சங்கக் காரியதரிசி சி. சாமிநாதனை. டவுன் போலீஸ் ஸ்டேஷனுக்கு தருவித்து சங்க சம்மந்தமான ரிகார்டுகளை தான் பார்வையிட வேண்டுமென்பதாக, "சென்னை சி. ஐ. டி. இன்ஸ்பெக்டர் கேட்டுக்கொண்டதின் பேரில், மெம்பர்கள் ரிஜிஸ்டர் மினிட்புக், ரூல்ஸ்புக் முதலியவைகளைக்காண்பித்தார். போலீஸார் அதற்கு ஒரு நகல் எடுத்துக்கொண்டு, சமதர்ம, இயக்க சம்மந்தமாய் பல கேள்விகள், கேட்டுவிட்டு புக்களை திருப்பிக்கொடுத்துவிட்டார்களென ஷை சங்கக்காரியதரிசி எழுதுகிறார்.

## கோவை சுயமரியாதை வாலிபர் சங்கம்

9-6-34தேதி சனிக்கிழமை மாலே 7மணிக்கு சங்கத்தின் வாராந்திரக் கூட்டம் நடைபெற்றது. தோழர்கள் சி. நடராஜன், எஸ். வி. ஆர் சந்திரன் பி. எம். கேசன், எம். ஆர். ராம்தாஸ் முதலியவர்கள் சமதர்ம கீதங்கள் பாடினர்கள் கூட்டத்திற்கு சிங்கா நெல்லூர் வெங்கிட்டசாமிஅவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் எ. எம். ஷெரீப் எ. கந்தசாமி, பி. எம். கேசன் டி. ஆர். மஞ்சுளா பாய் முதலியவர்கள் "பெண்கள் நிலைமை" என்பதைப் பற்றிப் பேசினர்கள். தோழர்கள் ஆர். எல். நாதன், பி. ரங்கசாமி ஆகிய இருவரும் 'கதர்' என்ற விஷயத்தைப் பற்றிப் பேசினர்கள் பிறகு ப ஜீவானந்தம் அவர்கள் முன் கூறிய விஷயங்களைப்பற்றி சிறிது நேரம் பேசிவிட்டு "வாலிபர்களும் தேசாபிமானமும்"; என்னும் விஷயத்தைப் பற்றி நீண்டதோர் சொற்பொழி வாற்றினர். பிறகு தலைவர் முடிவுரை கூற கூட்டம் இரவு 10 மணிக்கு இனிது முடிவுற்றது, எனக் காரியதரிசிஎழுதுகிறார்.

## இருதிருமணம்.

தேவூர் பி. ஆர். சீனிவாசன் இல்லத்தில் தோழர் மங்களநாயகிக்கும், பி. ரெத்தினசாமிக்கும், ரெங்கநாயகிக்கும், பி. அய்யம்பெருமாளுக்கும் 22-6-34 வெள்ளிக்கிழமை மாலே 6-30க்கு மேல் இரண்டு திருமணம் நடத்தப்படும். தோழர் அ. பொன்னம்பலஞர் அவர்கள் முன்னிலையில் நடைபெறும் என பி. ஆர். சீனிவாசன் எழுதுகிறார்.

## பொதுக்கூட்டம்

சென்னை பெரிய மெட்டு சமதர்ம சங்கத்தின் வாராந்திரக் கூட்டம் 9-6-34 சனிக்கிழமை இரவு 8மணிக்கு தோழர் வி. சந்தசாமியார் தலைமையில் கூடியது. அது சமயம் தோழர்கள் பி. நாராயணசாமி, எஸ். கண்ணப்பன், ராஜு, வி. கே. சுப்பருயலு, கே. ஆர். ரங்கசாமி ஆகியவர்கள் சொற்பொழிவாற்றினர்கள். தலைவர் முடிவுரை கூற கூட்டம் இரவு 9.30 மணிக்கு இனிது முடிந்ததென காரியதரிசி எழுதுகிறார்.

## அமெரிக்காவில் நரசோரம்

டபிள்யூ. எப். கெட்டில் என்ற 47 வயதான பெரும் பணக்காரர் ஒருவரைக் கொள்ளைக் கூட்டத்தினர். தூக்கிக்கொண்டு ஓடி விட்டனர் இவரை உயிருடன் திரும்பக் கொண்டுவர்துவிடுவதற்கு 12,000 பவுன் மீட்புத் தொகையாகக் கேட்கப்படுகிறது.

## சுயமரியாதைத் திட்டம்.

### தோழர் எஸ். ராமநாதன் பதில்.

ஜூன் ௴ 3௳ வெளியான “புரட்சி”ப் பத்திரிகையில் மாயவரம் சி. நடராஜன் அவர்கள் தஞ்சை ஜில்லா சுயமரியாதை மகாநாடு கூட்டுவதற்கென ஓர் அறிக்கை விடுத்திருக்கிறார். அவ்வறிக்கையில் தானும், தனது சகாக்களும் சுயமரியாதைச் சங்க மத்திய சபையின் தீர்மானத்தை நிராகரிக்கப் போவதாகக் குறிப்பிட்டிருக்கிறார். அப்படி நிராகரிக்கப்படுவதற்குக் காரணம் மத்திய சபை “எவ்வித வேலையும் செய்யாது இருக்குமிடம் தெரியாதிருக்கிறது” என்று குற்றஞ் சுமத்துகிறார். மத்திய சபையின் அங்கத்தினரில் ஒருவரான தோழர் நடராஜன் அவர்கள் அச்சபையின் தீர்மானத்தை நிறைவேற்ற வைக்க முயற்சி செய்யாததோடுகூட அதை நிராகரிக்கும்படி நேரிடையான பிரசாரத்தில் ஈடுபட்டிருப்பது, வேலியே பயிரை மேய்வது போன்றது. மத்திய சபையின் கடந்த கூட்டத்தில் சுயமரியாதை இயக்க வளர்ச்சிக்கென ஒரு சிறிய திட்டம் வகுக்கப்பட்டது. அந்தத் திட்டத்தை ஜூன் மாத இறுதிக்குள் நடத்திவைப்பதென ஒரு காலவரையும் குறிப்பிடப்பட்டது. ஜூலை மாதம் 1௳ மத்திய சபையை மறுபடியும் கூட்டுவதெனவும் தீர்மானிக்கப்பட்டது. ஆகவே சென்ற கூட்டத்திற்கும், அடுத்து வரப்போகும் கூட்டத்திற்கும் மத்தியில் மத்திய சபை எந்த வேலையையும் செய்யத்தக்க நிலைமையிலில்லை. அச்சபை ஏற்படுத்தியத் திட்டத்தை நிறைவேற்றிவைக்கும் பொறுப்பு அச்சபை அங்கத்தினர்களையும், மற்ற இயக்க அபிமானிகளையும் சார்ந்தது. திட்டம் நிறைவேறிய முறையை பரிசிலனை செய்து சுயமரியாதை மாகாண மகாநாட்டை கூட்டுவதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்யவே மத்தியசபை மறுபடியும் கூடும். மத்தியசபை ஏற்படுத்திய திட்டத்தின் வெற்றியை குலைப்பதற்கென சி. நடராஜன் அவர்கள் செய்யும் பிரசாரத்தின் அந்தரங்கம் என்னவாயிருந்த போதிலும், சுயமரியாதை இயக்கக் கொள்கையில் தீவிரப்பற்றும் கொண்டு அக் கொள்கை வளர்ச்சிக்கென எவ்வித தியாகமும் செய்ய தயாராக விருக்கும் தமிழ் நாட்டு வாலிபர்களின் கடமை என்ன வென்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. சுயமரியாதை என்ற பெயரால் நமது நாட்டில் தோன்றியிருக்கும் உணர்ச்சியை நாகரீகமான வழியில் ஓர் பொது ஸ்தாபன அமைப்பு மூலமாக வளர்க்க முயலுவதே நமது கடமையாகும். அப்படிக்கில்லாமல் ஜில்லா, தாலூக்கா மகாநாடுகள் என்ற பெயரால் ஓர் சிலர் மதாச்சாரிகள் பிரயாணம் செய்வதற்கொப்ப ஆங்காங்குக் கூட்டங்கள் கூட்டுவதும், அந்தக் கூட்டங்களிலிருந்து நிரந்தரமான ஒழுக்க முறையோ, அல்லது கட்டுப்பாடோ ஏற்படுத்திக் கொள்ளாமல் சொரூபமில்லாமல் கலைந்து போவதுமே நமது நடைமுறையாகக் கொண்டால் இவ்வியக்கம் சீக்கிரத்தில் “இருக்குமிடம் தெரியாமல்” போவது திண்ணம். நாகரீக இயக்கத்தின் அறிகுறி தொடர்ந்து வேலை செய்யக்கூடிய ஸ்தாபன அமைப்பேயாகும். அவ்வித ஸ்தாபன அமைப்பைச் சுயமரியாதை இயக்கத்திற்கு ஏற்படுத்திக்கொள்ள ஆர்வமுள்ளவர்கள் மத்திய சபையின் மூன்று மாதத் திட்டத்தை நிறைவேற்றி வைக்க முன் வரவேணடும். ஆங்காங்குக் கிளைச்சங்கங்கள் ஏற்படுத்தி அச்சங்கங்களுக்கு அங்கத்தினர் சேர்த்து அவ்வங்கத்தினரின் சந்தாவில் தலைக்கு 4 அணு விழுக்காடு மத்திய சபைக்கு அனுப்பி வைக்க வேண்டும். இக்கடமையை சுயமரியாதை இயக்கத்தார் நிறைவேற்றினால் மாத்திரமே ஒழுங்கு முறையோடு மாகாண மகாநாட்டைக் கூட்டுவிக்க இயலும். மாகாண மகாநாட்டை ஒழுங்கு முறையுடன் கூட்டுவித்து இயக்க வளர்ச்சிக்கு உழைக்குமாறு எனது தோழர்களை வேண்டுகிறேன்.

S. ராமநாதன்.

காரியதரிசி, சுயமரியாதைச்சங்கம்

### விருந்து

ராவ் சாஹிப் S. N. பொன்னைய கவுடர் அவர்களுக்கு புது வருடப்பட்டம் அரசாங்கத்தார் அளித்ததை முன்னிட்டு தோழர்கள் R. பத்மநாப நாயுடு, S. கிருஷ்ண ஐயர், N. R. லிங்கப்ப கவுடர், M. V. N. மருதாசலம் செட்டியார், C. R. வரதராஜுலு நாயுடு, R. வெங்கிட்டசாமி, C. ராமசாமி முதலியார் முதலியவர்கள் தோழர் R. வெங்கிடசாமி நாயுடு வீட்டில் 16-6-34ந்தேதியன்று ஒரு விருந்து நடைபெறுமெனத்தெரிகிறது,

### சுயமரியாதைத் திருமணம்.

29-6-34 வெள்ளிக்கிழமை காலை 9 மணிக்கு நா. பழனிச்சாமி முறையர் குமாரத்தி சீதா கண்ணம்மாளுக்கும், பே. சின்னசாமி தேவர் குமாரர் பே. சி. துளசி அவர்களுக்கும் ஆ. பொன்னம்பலம் அவர்கள் தலைமையில் மன்னார்குடி தாலூக்கா காளாஞ்சி மேடு கிராமத்தில் சுயமரியாதை முறைப்படி திருமணம் நடைபெறுமென நமது நிருபர் எழுதுகிறார்.

—0—

### ஆத்தூர்.

சேலம் ஜில்லா ஆத்தூரில் தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தலைமையில் நடந்த காதல்—கலப்பு—சுயமரியாதைத் திருமணத்தைப்பற்றிய விவரம் அடுத்த வாரம் வெளிவரும்.

### சூலூர் சுயமரியாதைத் தோழர்களுக்கு ஓர் வேண்டுகோள்.

வாலிபத்தோழர்களே, சுயமரியாதை இயக்கத்தில், ஆர்வமுள்ள சூலூர் வாசிகளே! நமது ஊரில் சுயமரியாதை இளைஞர் சங்கமானது இவ்வாண்டில் செய்துள்ள பிரசாரத்தின் காரணமாக, பகுத்தறிவுணர்ச்சியும், சமதர்ம எழுச்சியும், பாமரமக்களுக்குச் சிறிது உண்டாகியிருக்கும் இக்காலத்தில், ஆஸ்திகக் கூட்டம் தங்கள் கொள்கையை நிலைநிறுத்துவதற்கு, ஆதாரமாயுள்ள, திருவிழா என்னும் பெயரால் மாரியம்மன் பண்டிகை, நடந்துகொண்டிருக்கிற இது சமயம், நமது பிரசாரவேலையாகிய சுயமரியாதைச் சமதர்மப் பொதுக் கூட்டங்கள் அவசியம் நடத்த ஆர்வமிக்க தோழர்கள் முன்வரவேணுமாய் வேண்டுகிறோம் என சுயமரியாதை நண்பர்கள் கேட்டுக்கொள்ளுகிறார்கள்.

### சேரியில் சமதர்மப் பிரசாரம்.

4-6-34 தேதி காலை 8-30 மணிக்கு காஞ்சி தாலூக்கா 61நெ. சுரோத்திரிய திருப்பருத்திகுன்றம் சேரியில் பொதுவுடமைப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான உழவர்களும் கல் ஒட்டர்களும் விஜயம் செய்திருந்தனர். சமதர்ம தோழர்கள் பொதுவுடமைக் கீதங்கள் பாடினார்கள். பின்பு காஞ்சி தோழர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்கள் சமதர்மம் என்பது பற்றிப் பேசினார்

மற்றொருகூட்டம்

5-6-34 தேதி பகல் 11-30 மணிக்கு மின்னர் ஸ்டேசன் தோப்பு சந்தையில் சமதர்மப் பொதுக்கூட்டம் நடைபெற்றது. கூட்டத்திற்கு ஏராளமான தோழர்கள் விஜயம் செய்திருந்தனர். காஞ்சி தோழர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்கள் ‘பொதுவுடமை’ என்பது பற்றிப் பேசினார்.

(9ம் பக்கத் தொடர்ச்சி).

வுடமைக்காரர்கள் தங்களுடைய விரோதிகளை முறியடித்து, மீண்டும் அதிகாரத்தை கைப்பற்றும் தருணத்தில் குஸ்ரா என்பவனும் அவனுடைய ஆட்களும் ஏழைத் தொழிலாளர்களையும் குடியானவர்களையும் பித்தலாட்டம் செய்து ஏமாற்றி விட்டார்கள். மஜ்டக் அவர்கள் கூட ஏய்க்கப்பட்டார்.

குபாத்என்னும் அரசன், தான் தோற்று விட்டதாக ஒத்துக்கொள்வதாகவும், மஜ்டக் அவர்களின் ஆட்களான ஆண், பெண் அத்தனை பெயர் முன்னிலையிலும் தான் சரண மடைந்து விடுவதாகவும் பாசாங்கு செய்தான். ஓர் அழகிய நந்தவனத்தில் இதற்கெனவே ஏற்பாடு செய்யப்பட்ட ஓர் கூட்டத்திற்கு விஜயம் செய்ய வேண்டுமென அனைவரும் அழைக்கப்பட்டிருந்தார்கள். ஆனால் ஒவ்வொரு கூட்டத்தினரும் அந்த நந்தவனத்தின் வாயிலை யடைந்ததும் சிப்பாய்களால் பிடிக்கப்பட்டு, உயிருடனேயே தலைகீழும், கால்கள் மேலே நன்றாக காணும்படியாகவும் புதைக்கப்பட்டார்கள். எல்லா மக்களையும் இவ்வாறு ஒழித்து விட்ட பிறகு, குஸ்ரா என்னும் அரசகுமாரன் மஜ்டக் அவர்களைப் பிடித்து, அந்த நந்தவனத்தை சுற்றிலும் காண்பித்து “உன்னுடைய கொடுமையான கோட்பாடுகளினால் விளைந்த வெள்ளாமையைப் பார்” என சுட்டிக் காண்பித்துரைத்தான். இதற்குப்பிறகு மஜ்டக் அவர்களும் பிடிக்கப்பட்டு சட்டி, உயிருடனேயே தலைகீழும் கால்கள் மேலுமாக புதைக்கப்பட்டார்.

(தொடரும்)

### பெண்தேவை.

தக்க செல்வமும் திடசரீரமும் உள்ள ஒரு நாட்டுக்கோட்டை சனொனுக்கு ஒரு பெண்தேவை. முழு விபரத்துடன் அடியில் கண்டவிலாசத்துக்கு எழுதவும்.

A. B.
C/o E. V. R. ERODE.

ரோஜா முத்தையா

(7ம் பக்கத்தொடர்ச்சி)

க்க வேண்டுமென்றும் கூறப்படுகிறது.

ஆனால் சுயமரியாதைக் கல்யாணம் என்பதில் அப்படி இல்லை திருமணம் என்பது பெண்ணும் ஆணும் சேர்ந்து வாழ்க்கையை நடத்த ஏற்படுத்திக் கொள்ளும் ஒப்பந்தமென்றும் அவ்வொப்பந்த விஷயம் பெண்ணையும், ஆண்ணையும் மாத்திரமே பொருத்ததே ஒழிய வேறு எவ்வித தெய்வீகத்துக்கோ அல்லது எவ்வித கட்டுப்பாட்டுக்கோ சம்மந்தபட்டதல்ல என்றே சுயமரியாதைக் கல்யாணத்தின் தத்துவமாகும்.

மேலும் பழயமுறை கல்யாணமானது ஆணுக்கும் பெண்ணுக்கும் கல்யாணமேற்பட்ட பிறகு தான்ஒருவர் மீது ஒருவர் ஆசைகொள்ளுவதோ காதல் கொள்வதோ ஏற்பட வேண்டுமே ஒழிய அதற்கு (கல்யாணத்துக்கு) முன்னால் ஒருவர் மீது ஒருவருக்கு ஆசையும், "காதலும்" ஏற்படுவது கூடாதென்றும் குற்றமென்றும்அதுவிபசாரத்துக்கு சமானமானதென்றும் கூறப்படுகின்றது.

சுயமரியாதைக் கல்யாணத்திலோ, கல்யாணத்துக்கு முன்பாகவே ஆணுக்கும் பெண்ணுக்கும் ஒருவருக்கொருவர் ஆசையும் "காதலும்" ஏற்பட்டு அதன் பின்னரே கல்யாணம் நடக்க வேண்டும் என்றும், மற்றபடி கல்யாணம் ஆன பிறகு கல்யாணம் ஆய்விட்டதே என்கின்ற காரணத்திற்காக அங்க ஈனராய் இருந்தாலும் வியாதிக்காரராய் இருந்தாலும், கொடியவராய் இருந்தாலும் ஒருவருக்கொருவர் ஆசையும் 'காதலும் கொண்டுதான் ஆக வேண்டுமென்றும் சொல்வதை கண்டிப்பாய் ஒப்புக்கொள்ளுவதில்லை-

மற்றும் பழய முறைக் கல்யாணங்கள் ஒருதடவை கல்யாணமாகி விட்டால் எந்தக் காரணத்தைக்கொண்டும்மறுபடியும்பிரியக்கூடாதென்றும் இப்படிக் கூறிவிட்டாலும் ஆணுக்கு பிரித்துவிடவோபிரிந்துகொள்ளவோ உரிமை உண்டு பெண்ணுக்குத்தான்உரிமையில்லை.)என்றும் பெண்ஜாதி செத்துப்போனால் புருஷன் மறுவிவாகம் செய்துகொள்ளலாம் என்றும் பெண்ஜாதி உயிருடன் இருக்கும் போதே புருஷன் மாத்திரம் பல பெண்களை கல்யாணம் செய்துகொள்ளலாம் என்றும் பெண்கள் மாத்திரம் எந்தக்காரணம் கொண்டும் புருஷன் எவ்வளவு கொடியவனாகவும் மனுஷத்தன்மை அற்றவனாகவும் எவ் விஷயத்துக்கும் பொருத்தமில்லாமல் கொடுமையும்சித்திரவதையும்போன்ற கஷ்டத்தையும் கொடுப்பவனாலும் புருஷனைவிட்டுப் பிரியக் கூடாதென்றும் வேறு கல்யாணம் செய்து கொள்ள கூடாதென்றும் புருஷன் தான் பக்குவமாவதற்கு முன் தனது 5 வது 10வது வயதிலேயே இறந்துபோனாலும் வேறு புருஷனைக் கல்யாணம் செய்துகொள்ளாமல் விதவை என்னும் பெயருடன் உலக சுகபோகங்கள் எல்லாவற்றையும் வெறுத்து மக்கள் கண்ணுக்கும், மனதுக்கும் வெறுப்புத்தோன்றும் தன்மையில் வாழவேண்டும் என்றும் சொல்லுகின்றது.

சுயமரியாதைக் கல்யாணத்தில் இவ்வித அக்கிரமும், அயோக்கியத்தனமும் அறியாமையும் கொடுமையும் முர்க்கத்தனமும் காட்டுமிராண்டித்தனமும் இல்லை. வாழ்க்கைக்கும் மனதுக்கும் ஏற்ற தம்பதிகளானால் கூடிவாழலாம். அவைகளுக்கு ஒவ்வாத வாழ்கையே "நரகம்" போன்றதான தம்பதிகளானால் பிரிந்து மனதிற்கு ஏற்றவர்களை மணந்து இன்பசுக வாழ்வு வாழ உரிமை உண்டு என்பதோடு புருஷனோ மனைவியோ யார் இறந்துபோனாலும் மறு விவாகம் செய்துகொள்ளலாம் என்று கூறுகிறது.

பழய முறை கல்யாணப்படி பெண்களுக்கு சொத்துஉரிமை இல்லை, வாழ்க்கையில் சரிபங்கு ஆதிக்க உரிமை இல்லை என்று கூறப்படுகிறது. சுயமரியாதை கல்யாணத்தில் சொத்திலும் வாழ்க்கை ஆதிக்கத்திலும் பெண்ணுக்கு ஆணைப்போலவே சரிபங்கு உரிமை இருக்கின்றது என்பதுடன் இவைகளே கல்யாண ஒப்பந்தத்தின் ஷரத்துக்களாகும். அநேகமாய் கல்யாண தத்துவம் பழயதும் புதியதும் ஒரு மாதிரிதான். எப்படி எனில் இங்கு ஒரு ஆணும் பெண்ணும் சேர்ந்துதான் கல்யாணம் செய்துகொண்டார்களே ஒழிய ஆணும் ஆணும் சேர்ந்தோ, பெண்ணும் பெண்ணும் சேர்ந்தோ கல்யாணம் செய்துகொள்ளவில்லை.

ஆதலால் இவ்வித திருமணத்தைப் பற்றி யாரும் கவலையோ ஆத்திரமோ படவேண்டியதில்லை. பெண் மக்களில் பலருக்கு இவ்விஷயத்தில் ஏதாவது மனசஞ்சலம் இருந்தாலும் இருக்கலாம், ஆண்களில் படித்தவர்கள் வித்வான்கள் என்று சொல்லப்படுபவர்களிலேயே சில அழுக்குமூட்டைகள் இருந்துகொண்டு விஷமப்பிரசாரம் செய்துவரும்பொழுது பெண்களில் இதுவிஷயமாய அதிருப்தி உள்ளவர்கள் இருப்பது அதிசயமல்ல. ஏனெனில் பெண்களை நாம் எப்படி வைத்திருக்கின்றோம் அவர்களில் 100-க்கு 99-பேருக்கு அடுப்பங்கரையையும், படுக்கைவீட்டையும் மாத்திரமே காட்டி நகை மாட்டுகின்ற (Stand) ஸ்டேண்டுபோல் நகைகளை மாட்டி இது என் பெண்ஜாதி (அடிமை) இது உன் பெண்ஜாதி என்று கண்காக்ஷி காட்டுகின்றோமே ஒழிய வேறு அவர்களுக்கு என்ன கற்றுக்கொடுத்திருக்கிறோம் என்பதை யோசித்துப்பாருங்கள். வேண்டுமானால் கண்ணைமூடிக்கொண்டு பல்லைக் கடித்துக்கொண்டு கணக்கு வழக்குப் பார்க்காமல் பிள்ளைகளைப் பெறுவார்கள். இதற்கு ஒரு உபாத்தியாயரோ, அறிவோ வேண்டியதில்லை. எவ்வளவுக்கெவ்வளவு மடமை உண்டோ அவ்வளவுக்கு அவ்வளவு பிள்ளைகள் பிறந்து விடும். எவ்வளவுக்கெவ்வளவு அடிமைத்தன்மையில் மோகம் உண்டோ அவ்வளவுக்கவ்வளவு நகைகளை மாட்டிக்கொள்ளுவார்கள். தங்களை விகாரமாய் சிங்காரித்துக் கொள்ளுவார்கள். இவைகளையும், இவைபோன்றவைகளையும்தான் நாம் அவர்களுக்குத் தாய் தந்தையர்கள் என்கின்ற முறையில் கற்றுக்கொடுத்திருக்கிறோம். ஆகவே இப்படிப்பட்ட பெண்களிடம் நாம் வேறு எதை எதிர்பார்க்க முடியும். இன்றையபெண் எவ்வளவோ கல்வியும், செல்வமும், நாகரீக ஞானமும், கௌரவமும் உள்ள சுற்றத்தார்களுக்குள்ளும் சகவாசத்துக்குள்ளும் இருந்துவந்தும் நிரம்பவும் கர்நாடக முறையில் பட்டிக்காட்டு கிராம வாசப்பெண்களைவிட இளப்பமாய் நடந்து கொள்வதைப் பார்த்தால் நமக்கு எவ்வளவு சங்கடமாயிருந்தது என்பது அவரவர்களுக்கே தெரிந்திருக்கலாம். இப்படிப்பட்ட பெண்கள் வயிற்றில் பிள்ளைகள் பிறந்து இவர்களால் வளர்க்கப்பட்டால் அவற்றிற்கு மனிதத்தன்மை எப்படி ஏற்படும் என்பதை நீங்களே யோசித்துப்பாருங்கள். நமது மக்களுக்கு ஏன் மனிதத்தன்மை இல்லை, சுயமரியாதை இல்லை என்றால் அவற்றிற்கெல்லாம் முக்கியத்திலும் முக்கியமான காரணம் இப்படிப்பட்ட தாய்மார்களால் பெறப்பட்டு வளர்க்கப்பட்டதேயாகும்.

கடைசியாக தோழர்களே ஒன்று சொல்லி முடித்துவிடுகிறேன். கல்யாணமானவுடன் பெற்றோர்கள் பிள்ளைகளைஎதிர்பார்ப்பார்கள். சுற்றத்தார் எத்தனை ஆயிற்றென்று கணக்குக்கூட்டி வருவார்கள். தம்பதிகள் பிள்ளை பெறுவதினால் படும் கஷ்டம் காயலா அசௌகரியம் வாலிபம் பாழாவது அதிக பிள்ளைகள் பெறுவதினால் தரித்திரம், துன்பம், வியாகூலம், விசாரம், மனங்கெட நேருவது சுயமரியாதை இழந்தாவது வாழ ஆசைப்படுவது ஆகிய காரியங்களைப்பற்றியெவரும் சிந்திக்கமாட்டார்கள். யாதொரு பொறுப்பும் அறிவும் அற்று இன்று மணமக்களைப் பார்த்து "16 பிள்ளைகள் பெற்று பெருவாழ்வு வாழவேண்டும்" என்று சொல்லுகிறவர்கள் நாளைக்கு ஒரு குழந்தைக்கு அரைச்சங்கு பால் வார்க்கக்கூட சம்மதிக்கமாட்டார்கள். ஏதாவது கஷ்டம் வந்தால் கூட பக்கத்து வீட்டில் குடியிருந்துகொண்டு கணக்குக்கூட்டிப் பார்த்து அருசையும் வெறுப்பும் அடைவார்களே தவிர சிறிது பரிதாபம்கூட காட்டமாட்டார்கள். ஆதலால்மணமக்கள் குழந்தைகளைப் பெறும் விஷயத்தில் சிறிது ஜாக்கிரதையாகவும் அறிவுடமையாகவும் இருக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன் என்பதாகப் பேசினார்.

அன்று அங்கு விசேஷமான ஒரு பெரிய விருந்து நடைபெற்றது.

## ஆத்தங்குடி முத்துப்பட்டணம்.

### லோக நாயகி வித்தியாசாலை ஐந்தாவதாண்டுவிழா.

இவ்வித்தியாசாலையின் ஐந்தாவதாண்டு விழா 6-6-34ந்தேதி புதன் கிழமை மாலை 6-30மணிக்குகோவில் வாசல் முன்பாக காரைக்குடி செட்டிநாடு ஆசிரியர் தோழர் அ சேஷாத்திரி சர்மா அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

தலைவருக்கு உயர் திரு அளராமநாதன் செட்டியார் அவர்கள் ஒரு உபசாரப் பத்திரம் வாசித்துக் கொடுத்து மாலை சூட்டினர். தலைவர் முன்னுரைக்குப் பிறகு வித்தியசாலை மாணவ மாணவிகளின் பேச்சு, நடிப்பு, சம்பாஷணை, கும்மி, கோலாட்டம் நடைபெற்றது. மாணவ மாணவிகட்கு பிரைஸ் வழங்கினர்கள். தலைவர் முடிவுரை கூறியபிறகு உயர்திரு பெ. மு. சுப்பையா செட்டியார் அவர்களால் யாவருக்கும் நன்றி கூறப்பட்டு ஆண்டு விழா முடிவடைந்தது. இவ்வித்தியாசாலை ஆசிரியர் திரு. ஆண்டியப்பா அவர்கள் போதனை முறை பாராட்டப் பட்டது. ஆண்டு விழா சார்பாக ஷையார் இல்லத்தில் இரவு விருந்துநடைபெற்றது. இரவு 10மணிக்கு தலைவரும் தோழர்கள் அ. பொன்னம்பலம், கணபதி, ஆகியவர்கள் மோட்டாரில் காரைக்குடி பயணமானர்கள்.

## சென்னை பெரம்பூர் சுயமரியாதைச் சங்கம்.

3-5-34ந் தேதி ஞயிற்றுக்கிழமை மாலை 5-30 மணிக்கு பெரம்பூர் சிற்றேரியில் தோழர் டி. நாராயணியம்மேள் தலைமையில், சுயமரியாதைத் திறப்புவிழா நடந்தேரியது. அவ்வமயம் தோழர் வித்வான் வி. எ. முனுசாமிபிள்ளை, எஸ். சதாசிவம், பி. வரதராஜ பாகவதர், வி. பி. எஸ். மணியர், சி. ஆர் அமிர்தவாசகம், என். பி. பத்பனாபன்; டி. ராதா கிருஷ்ணன். இன்னும் பல தோழர்கள் சுயமரியாதைஇயக்கத்தைப் பற்றிபேசினர்கள். பிறகு அக்ராசனதிபதி வந்தனத்துடன் இரவு 9-மணிக்கு கூட்டம் அமைதியாய் முடிவு பெற்றது. கூட்டத்திற்கு அநேகர் விஜயம் செய்திருந்தார்களெனக் காரியதரிசி எழுதுகிறார்.

ரோஜா முத்தையா ஆராய்ச்சி நூலக அறக்கட்டளை

(6ம் பக்கத் தொடர்ச்சி)

ருவர் சண்டையிட்டுக் கொள்வது கிடையாது. இவ்வியக்கந்தான் உலக சமாதானத்தையுண்டு பண்ணுவதோடு உலகிலே யுத்தமே நடைபெற வொட்டாதபடி செய்யவும் முடியும். என்று நிர்வாண இயக்கத்தின் அரசியல் நிபுணர்கள் அபிப்பிராயப் படுகின்றார்கள்.

உலகமெங்கும் காட்டுத்தீபோல் வெகு விரைவில் பரவி வரும் நிர்வாண இயக்கம் ஜெர்மனியில் சிம்மாசனமேறிமகுடஞ்சூடிச்செங்கோலோட்சி வருகின்றது என்று கூறுவது ஒரு சிறிதும் மிகையாகாது.

பிரான்சில் நிர்வாண இயக்கம் என்னும் கட்டுரை பின்னால் வெளிவரும்

## காரைக்குடியில் தமயந்தி அல்லது தயங்கிய காதலர்.

காரைக்குடி ஆனந்த கான சபையாரால் காரைக்குடி சண்முகவிலாஸ் தியேட்டரில் 31-5-34ந்தேதி வியாழக்கிழமை இரவு 10மணிக்கு காரைக்குடி முனிசிபல் வைஸ்சேர்மன் தோழர் மு. ராம பெரியண்ணன் செட்டியார் அவர்கள் தலைமையில் முதலாவதாக "தமயந்தி—அல்லது தயங்கிய காதலர்" என்ற சீர்திருத்தக்கொள்கைகளைக் கொண்ட நாடகம் மிகச் சிறப்பாக நடைபெற்றது.

இந்நாடகத்திற்குத் தலைமை வகித்த தலைவர் அவர்கட்கு இந்நாடக சபையினரால் ஒரு உபசாரப்பத்திரம் கொடுக்கப்பட்டதை பூவாளூர் தோழர் அ. பொன்னம்பலம் அவர்களால் வாசித்துக்கொடுக்கப்பட்டது. தலைவர் நாடக நடிகர்களைப்பாராட்டியும் நாடக சபையினரை ஆதரித்தும் தாம் என்றும் உதவி புரிவதாகவும் பொது மக்கள் ஆதரிக்க வேண்டுவது அவசியமென்றும் கேட்டுக்கொண்டு தனது நன்றியைத் தெரிவித்துக்கொண்டு அமர்ந்தார். காரைக்குடி தோழர் ராமசுப்பையா அவர்கள் தலைவருக்குமலர்மாலைசூட்டினர்

பின்னர் நாடகம் ஆரம்பமாகி சுமார் 2-30மணி நேரம் வரை சீர்திருத்த உணர்ச்சி ததும்ப வாலிப நண்பர்களால் நாடகம்மிகச்சிறப்பாக நடத்திக்காட்டப்பட்டது.

இந்நாடகம் "குமரன் உதவி ஆசிரியராகயிருந்த" தோழர் இ சிவம் அவர்களால் எழுதப்பட்டதாகும். இந்நாடகத்தில் விதவைமணத்தின் அவசியம் வைதீக வெறியர்கள் கொடுமை கலப்பு மணத்தின் சிறப்பு மனமொத்த ஆண், பெண், காதலுணர்ச்சியை சமூகம்தடைசெய்வதால் விளையும் கேடு புராணப்புரட்டுகள் இவைகள் மிக நன்றாக விளக்கிக் காட்டப்பட்டது.

இந்நாடகத்தில் சீர்திருத்த உணர்ச்சியுடைய தோழர்கள் சோமசுந்தரம், மெய்யப்பா, இலட்சுமணன், பாலசுப்பிரமணியம், ஷான், இ. சிவம், பூதலிங்கம், ராமசுப்பையா, அ பொன்னம்பலம், குருசாமி, தியாகராஜன், முத்தையா முதலியவர்கள் நடிகர்களாக வந்து நடித்தது பெரிதும் குறிப்பிடத்தக்கது.

இந்நாடக மூலம் பொதுமக்கட்கு சமூக சீர்திருத்தத்தின் அவசியம் நன்கு வலியுறுத்தப்பட்டது. பல அறிஞர்கள் இந்நாடகத்தைப் பாராட்டி இது போன்ற நாடகங்கள்தான் இனி வேண்டப் படுவதென்று மகிழ்ச்சியுடன் கூறினார்கள். பலர் மீண்டும் இதே நாடகத்தை இவ்வூரிலேயே மற்றொரு முறையும் நடத்த வேண்டுமென்று கேட்டுக்கொண்டார்கள்.

இந்நாடகம் மிகச்சிறப்புற நடப்பதற்கு இந்நாடக சபை நடிகர்களும் காரைக்குடி தோழர்கள் ராம சுப்பையா அழ. அருணாசலம் ஆகியவர்களும் தக்க முயற்சி எடுத்துக்கொண்டு பல தினங்களாகப்பெரும் பிரயாசை எடுத்துக்கொண்ட அளவற்ற முயற்சி மிகவும் பாராட்டத்தக்கதாகும். இவர்களது நல்முயற்சிக்கேற்ற பெரும்பலனை எல்லோரும் மகிழ்வுடன் அனுபவித்தார்கள்.

இதேநாடகம் இவ்வூரிலேயே மற்றொரு முறை நடக்க தோழர். அழ. அருணாசலம், அவர்கள் பூரணபங்கு எடுத்துக்கொள்ள முன் வந்தது கேட்க பெரிதும் மகிழ்கின்றோம் என்று அ. ராமநாதன் அவர்கள் எழுதுகிறார்.

## சிவகெங்கை வாலிபர் சங்கம்.

27-5-34ந் தேதி ஞாயிற்றுக்கிழமை மாலை 6மணிக்கு சங்கக் கட்டிடத்தில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. அக் கூட்டத்திற்கு தோழர் எஸ். எம். நாக சுந்தரம் அவர்கள் தலைமை வகித்தார்கள். அது சமயம் தோழர்கள் எ. வேலுசாமி, டி நடராஜன், சி. ராமசாமி ஆகியவர்கள் நமது சங்கம், நாம் செய்யவேண்டிய வேலை, வாலிபர் கடமை என்பது பற்றி முறையே தெளிவாகவும், விரிவாகவும் பேசினார்கள். பிறகு கீழ்க்கண்ட தீர்மானங்கள்பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாக ஆதரிக்கப்பட்டது.

(1) சங்கத்தில் பிரசாரக் கமிட்டி ஒன்று ஏற்படுத்தி அதன் மூலம் நமது கொள்கைகளை குறிப்பாக கிராமத்திலும் பொது நகரங்களிலும் பிரசாரம் செய்ய வேண்டுமென்று இக் கூட்டம் தீர்மானிக்கிறது.

(2) தோழர் ஈ. வெ. ராமசாமி அவர்கள் தண்டனைக் காலம் முடிவடைந்து வெளிவந்தது பற்றி சந்தோஷப்படுவதோடு முன்னிலும் தீவிரமான கொள்கைகளோடு வாலிப உலகுக்கு வழிகாட்டும்படி அவரைக் கேட்டுக்கொள்கிறது. என்கிற தீர்மானங்களும் இன்னும் பல தீர்மானங்களும் நிறைவேறியது.

## திருச்சி—திருநெல்வேலி முனிசிபாலிட்டி விஷயம்.

ஜஸ்டிஸ் கட்சித்தலைவருடன் தமிழ் ஜில்லாக்கள் விஷயமாகத் தோழர் ஈ. வெ. ராமசாமி 7-6-34 தேதி காலை பேசிக்கொண்டிருந்த பேச்சுவார்த்தைகளின் மத்தியில் திருச்சி-திருநெல்வேலி முனிசிபாலிட்டிகள் விஷயமாய் பிரஸ்தாபித்ததில் கட்சித்தலைவர் ஸ்தலஸ்தாபன மந்திரி ஹோதாவில் தான் அந்தப்படி நடந்து கொள்ளவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டதைப்பற்றியும் வேறு விதமாய் நடக்கும் விஷயத்தில் உள்ள கஷ்டங்களைப்பற்றியும் விவரித்துக் கூறினார். எது எப்படி இருந்தாலும் தமிழ் ஜில்லாக்களில் பிளவும் மனக்கசப்பும் பெரிதும் ஏற்படாமல் இருப்பதற்கு இம்முனிசிபாலிட்டிகளின் விஷயங்கள் ஏதாவது ஒரு விதமாக சமாதான முறையில் பைசல் செய்யவேண்டும் என்று விரும்புவதாகத் தோழர் ஈ. வெ. ரா. தெரிவித்துக்கொண்டதின் பேரில் தன்னால் கூடியவரை முயற்சி எடுத்துக்கொள்வதில் ஆக்ஷேபணை இல்லை என்று சொன்னதாகவும், ஏதாவது ஒரு வழியில் சமாதானமான முடிவு ஏற்படக் கூடும் என்று தோழர் ஈ. வெ. ரா. எதிர்பார்ப்பதாகவும் தெரிய வருகிறது.

(இந்தக் குறிப்பு சென்றவாரம் பகுதி பத்திரிகைகளில் வெளியிட முடியாமல்போய்விட்டதால் இவ்வாரமும் வெளியிட நேர்ந்தது)

## சூலூர் சுயமரியாதை இளைஞர் சங்கம்.

### வாராந்திரக் கூட்டங்கள்.

20-5-34-ந்தேதி மாலை 5 மணிக்கு இச்சங்க வாராந்திரக்கூட்டம், சங்கத்தின் உபதலைவர் தோழர் எஸ். கே. கருப்பண்ணன் அவர்கள் தலைமையில்நடைபெற்றது. சில முக்கியமான தீர்மானங்கள் ஏக மனதாக நிறைவேறின.

26-5-34-ந்தேதி மாலை 5 மணிக்கு ஷை சங்க வாராந்திரக் கூட்டமொன்று சங்கத்தலைவர் தோழர் எஸ். எல். எஸ். மணியம் அவர்கள் தலைமையில் நிர்வாக சபைமெம்பர்களால் கூட்டப்பட்டது.

1. சங்கத்தின் வாசகசாலைக்கு மாதம் 1—8—0ரூ சம்பளத்தில்ஒரு ஆள் வைக்கலாமென, ஏகமனதாகத் தீர்மானிக்கப்பட்டது.

2. பகுத்தறிவு நூற்பதிப்புக் கழகத்திலிருந்து, வரவழைத்த புது புத்தகங்கள் 8-ம், 1—9—0 அணாவுக்கு சங்கத்திற்கு சாங்ஷன் செய்யப்பட்டது. பின் மாலை 6 மணிக்கு கூட்டம் இனிது கலைவுற்றது.

2-6-34-ந்தேதி மாலை 4-30 மணிக்கு சங்க வைஸ்பிரசிடெண்ட் தோழர் எஸ். கே. கருப்பண்ணன் அவர்கள் தலைமையில்கூடிய ஷை சங்க நிர்வாகக் கமிட்டிக் கூட்டத்தில்,இச்சங்கஉதவி காரியதரிசியாக இருந்துவந்த தோழர் சுப்பம்மாள் பல அசந்தர்ப்பத்தால், விலகிக்கொண்டதால், அன்னாருக்குபதிலாக தோழர் எம். கே. சாமியை நிர்வாக மெம்பராக ஒப்புக்கொள்ளப்பட்டு, உதவிக்காரியதரிசியாகவும், ஏகமனதாக ஒப்புக்கொள்ளப்பட்டது.

அடுத்த கூட்டத்தில் காரியக் கமிட்டி ஒன்று தேர்ந்தெடுக்கலாமென யோசிக்கப்பட்டு, கூட்டம் 6-மணிக்கு இனிது கலைவுற்றது.

## சேரியில் யாகக்கண்டனக் கூட்டம்.

6-6-34தேதி பகல் 3-30 மணிக்கு காஞ்சி தாலூகா 61நெ. சுரேத்திரிய திருப்பருத்திகுன்றம் சேரியில் யாக கண்டனப் பொதுக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. கூட்டத்திற்கு பௌத்த கொள்கையைச் சேர்ந்த தோழர்களும் இதரத் தோழர்களும் விஜயம் செய்திருந்தனர். காஞ்சி தோழர் சமதர்ம நாஸ்திக சி. கே. குப்புசாமி அவர்கள் 'யாகம்' என்பது பற்றி பேசினார்.

## சென்னை சுயமரியாதை இளைஞர் மன்றம்.

இம்மன்றத்தின் நிர்வாக சபைக் கூட்டம் 6-6 34 புதன்கிழமை மாலை 6 மணிக்கு மன்றத்தின் காரியாலயத்தில் நடைபெற்றது. அது சமயம், தோழர். செ. தெ. நாயகம் அவர்களை மன்றத்தின் தலைவராகவும். திரு. டி. இராதகிருஷ்ணன் அவர்களை பொக்கிஷதாரராகவும், தோழர்கள், என். பி. பத்மநாபன், பி. என். குருசாமி, முதலியோர் நிர்வாக அங்கத்தினராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டது எனக்காரியதரிசி எழுதுகிறார்.


## மணமகன் தேவை

S. S. L C. படித்து பொறுப்புள்ள உத்தியோகத்தில் ரூ 40, 50 ரூபாய் சம்பளத்தில் இருக்கும் சுமார் 25வயதுடைய பெண்ணுக்கு தக்க மணமகன் தேவை. மணமகன் சுயமரியாதை இயக்கத்தில் பற்றுக் கொண்டவராகவும், பொருளாதார நிலையில் தகுந்த யோக்கியதையும் வாலிபமும்கல்வியும் உடையவராகவும் இருக்க வேண்டும். மணமகனைப் பற்றி சகல விபரத்தோடும் எழுதப்பட்ட கடிதங்களே கவனிக்கப்படும்.

O. C.
C/o E. V. Ramasamy
"PURATCHI" ERODE

(5ம் பக்கத் தொடர்ச்சி)

கத்தில் நிலை நிறுத்தி- மக்களது அறிவை மழுக்கி "நீங்கள் எல்லோரும் அரசர்களுக்கும், முதலாளிகளுக்கும், எங்களுக்கும் உழைத்துப்போட்டு விட்டு நீங்கள் கோவில்களிலும், சர்ச்சுகளிலும், மசூதிகளிலும் புகுந்து . ஆண்டவனை வணங்குங்கள்- அவனிடத்தில் பிரார்த்தனை செய்யுங்கள் அவன் உங்களுடைய கஷ்ட நஷ்டங்களையும், குறைபாடுகளையும் நிவர்த்தி பண்ணுவான்" என்று சொல்லி அறியாத ஏழைத் தொழிலாளிகளை ஏமாற்றி அவர்களை இவ்வுலகத்தில் சதா கஷ்டப்பட செய்துவிட்டு, கடவுள் பெயராலும், மதத்தின்பெயராலும் பெரும்பான்மையான மக்களை கொள்ளையடித்து அவர்களுக்கு மேல் உலகத்தையும் தீர்ப்பு நாளையும் அடுத்த ஜன்மத்தையும் காட்டிவிட்டு சிறு பான்மையினர்களாகிய நீங்களும், முதலாளிகளும், அரசர்களும் இன்றளவும் இந்த உலகில் இந்த நாளில் இந்த ஜன்மத்தில் "இந்திர போக வாழ்க்கை" நடத்திக் கொண்டிருந்தது போல்- நடத்திக் கொண்டு வருவது போல், இனிமேலும் நடத்திக் கொண்டிருக்கலாம் என்று நம்பாதீர்கள். அந்தக்காலம் மலையேறி விட்டது! ஒட்டகத்தில் பிரயாணம் செய்த காலமல்ல இது! இது இருபதாம் நூற்றாண்டு. ஆகாய விமானம் மேலேபறக்கின்றன. மணிக்கு 5 மைல் தள்ளாடித் தள்ளாடிச் சென்ற காலம் போய், மணிக்கு 200 மைல் 500 மைல் வேகத்தில் யாத்திரை பண்ணும் காலமிது. சமுத்திரத்தை கண்டு பயந்து "சமுத்திர தேவதைக்கு" சாஸ்டங்கம் செய்த காலம் போய், சமுத்திரத்தின் கீழ் நீர் மூழ்கிக் கப்பல் மூலமாய் சமுத்திரத்தை ஊடுருவிச் செல்லும் காலம் இது. புகைவண்டியில் போவது தாமதம் என்றெண்ணி, மின்சார ரயிலில் போகும் காலம் இது. 1000, 10000 பேர்களுக்கு கேட்க கூடிய முறையில் தான் பேச முடியும், அதற்கு மேல் கேட்க கூடிய முறையில் மனிதனால் பேச முடியாது என்று எண்ணியிருந்த காலம் போய், ஆகாய வசனி மூலம் அகிலஉலகத்திலுமுள்ள 2000000000 இருநூறு கோடி மக்களுக்கும் கேட்க பேசும் காலம் இது. சக்கி முக்கிக் கல்லு போய் தீப்பெட்டியையும், மின்சார விளக்குகளையும் உபயோகிக்கும் காலம் இது. பனையோலையில் எழுத்தாணி பிடித்து எழுதும் காலம் போய், காயிதத்தில் பேனா கொண்டு எழுதும் காலமும் டயிப் அடிக்கும் காலமும்- இயந்திரங்கள் மூலமாய் மணிக்கு 100000 பத்திரிகைகளை பிரசுரித்து வெளியிடும் காலம் இது. அரசன் ஆட்சி முறை போய், பார்லிமெண்ட் ஆட்சி முறை வந்தன- அதுவும் போய், சர்வாதிகார ! சமதர்ம ஆட்சி முறை (ருஷியாவில்) வந்து விட்டன. மற்ற தேச மக்களும் சமதர்மம் என்னும் "சுவர்க்க லோகத்தை" நோக்கிச்செல்லுகிறார்கள். எல்லா தேசங்களிலும் ஏழை மக்கள் சமதர்மத்தின் உன்னதத்தையும், முதலாளிகள் "சமதர்மத்தின் கோரத்தையும்" உணர்ந்து கொண்டு விட்டார்கள். அகிலஉலகத்திலும் சமதர்மிகள் ஏழைத்தொழிலாளிகளைச் சேர்த்துக் கொண்டு ருஷியாவை முன் மாதிரியாகக் கொண்டு உலகத்தைக் கைப்பற்ற போகிறார்கள். இதனால் எல்லா அரசாங்கங்களுக்கும், முதலாளிகளுக்கும், மத குருக்களுக்கும் எல்லா மதங்களுக்கும், எல்லா வணக்க ஸ்தலங்களுக்கும் மறைவு காலம்- அழிவு காலம் ஏற்படப் போகின்றன. இம்மாறுதலால் அரசன்- ஆண்டி, முதலாளி- தொழிலாளி, ஏழை- பணக்காரன், உள்ளவன்- இல்லாதவன், உயர்ந்தோன்- தாழ்ந்தோன் என்னும் பேத முறைகள் எல்லாம் போய், முழு உலக மக்களும் இன்புற்று-கவலையற்று சாந்தியாயும்- சமாதானமாயும் வாழப்போகிறார்கள். குதூகலம்! சாந்தி!! சமாதானம்!!! என்னும் உலக மனித சமூகத்தின் ஆரவாரமானது வானத்தை இருபிளவாக பிளந்து கொண்டு உங்கள் "தெய்வலோக"த்திற்கு போய் "தெய்வத்தை"யும் களக்கமுரச் செய்து இருபுரட்டையும் வெளிஆக்கி விடும் என்று உலகத்திலுள்ள சமதர்மிகளின் கிளர்ச்சிகளிலிருந்து நீங்கள் இன்னமும் அறிய முடியவில்லையா? ஆஸ்திகர்களால் இந்தக் காலத்தை ஞாபகத்தில் வைத்துக் கொண்டு யான் ஈங்கு கேட்கும் கேள்விகள் எல்லாவற்றிற்கும் தக்க பதில் சொல்லித்தீருங்கள். இன்றேல் உங்களுடைய கற்பனைக் கடவுளையும், கற்பனைச்சொல்லால் எழுந்த மதங்களையும், மூட நம்பிக்கைகளையும் விட்டுவிட்டு, கடவுள் என்பது கற்பனைச் சொல், அவர் தம் வல்லமை யெல்லாம் கட்டுக்கதை- கருணையெல்லாம் கபடம், மதம், தீர்க்கதரிசி (தெய்வதூதர்) நரகம், சுவர்க்கம், ஆத்துமா, தலை விதி, கர்மம் என்பவைகள் எல்லாம் கற்பனைச்சொற்கள் என்று உண்மையைச் சொல்லிவிட்டு அறிஞனைப் போல் நாஸ்திகப் போதனையும், சமதர்மக் கிளர்ச்சியும், புரட்சியும் செய்ய எழுந்து முன்வாருங்கள்.

(தொடரும்)

---

## கூழிபிறை.

---

### பழந்தமிழர் பொதுக்கூட்டம்.

இவ்வூர் பிரமசங்கை வட கரையில் அமைந்துள்ள பந்தலில் கூழிபிறை பழந்தமிழர்களின் பொதுக் கூட்டம் ஒன்று 6-6-34யன்று புதன் கிழமை காலை 9-30மணிக்கு புலியூர் தோழர் ஆர். எல். சிவம் அவர்கள் தலைமையில் மிகச் சிறப்பாக நடைபெற்றது. தோழர் அம்பிகாபதி அவர்கள் கீதங்கள்பாடினார். தலைவர் முன்னுரையாக பழந்தமிழர்களின் முன்னேற்றம்குறித்தும் புதுக்கோட்டை சமஸ்தானத்தில் அவர்களது சகல உரிமைகள் குறித்தும் கல்வி, கிணறு வழிகள் குறித்தும் பேசினார்.

அதன் பின்னர் பூவாளூர் அ. பொன்னம்பலம் அவர்கள் "சமூக முன்னேற்றம், மனித உரிமை" பகுத்தறிவு சுயமரியாதைவாழ்வு மக்கள் விடுதலை, ஓய்வு, இன்பம், மூடநம்பிக்கை மதச்செலவு கடவுள் மனிதன் காப்பாற்ற வேண்டுமா? என்பவைகளைக்குறித்து நீண்ட நேரம் பேசினார். அதன் பிறகு பெரிய சூரியூர் தோழர் எம். பி. சாமி அவர்கள் சமூக முன்னேற்றம் என்பது குறித்துப் பேசினார். இதனிடையில் தோழர் அ. பொன்னம்பலம் அவர்கள் ஆத்தங்குடிக்குப் பயணமாக விடை பெற்றுக்கொண்டு பயணமானார்.

---

## காரைக்குடி
## ஆனந்தகான சபையார்.

காரைக்குடி ஆனந்த கான சபையாரால் இரண்டாவது முறையாக நடத்தப்போகும் "தமயந்தி அல்லது தயங்கிய காதலர்" என்ற சீர்திருத்த நாடகத்திற்கு செட்டி நாட்டு கனம், குமாரராஜா, அ. முத்தையா செட்டியார் அவர்களை தலைமை வகிக்குமாறு தோழர்கள் அ. பொன்னம்பலம், ராம-சுப்பையா, எம். கே அழகப்பா, டி. சுப்பிரமணியம் ஆகியவர்கள் 11-6-34ந்தேதி மாலை அடையாற்றிலுள்ள அவரது பங்களாவிற்குச் சென்று நேரில் கேட்டுக்கொண்டார்கள்.

கனம் குமாரராஜா அவர்கள்தான் சமீபத்தில் கொழும்பு செல்லயிருப்பதாகவும் மற்றொரு சமயம் அவ்விருப்பத்தை அவசியம் நிறைவேற்றி வைப்பதாகவும் வருந்தி மொழிகூறினார்என்றுதெரிகின்றது.


## நோயாளிகளுக்கோர் எச்சரிக்கை.

நல்லகாலம் வந்துவிட்டது.
இது சமயத்தை இழந்து விடாதீர்கள்.
ஆயிரக்கணக்கான நோய்கள் குணமாகிவிட்டது.

நீரழிவு, பவுந்திரம், வெள்ளை, வெட்டை முதலிய நோயுடையவர்கள் நேரில் வந்து குணப்படுத்திக்கொள்ளுங்கள். பத்து நாட்களில் குணமடைவீர்கள். விபரங்களுக்கு யெழுதித் தெரிந்து கொள்ளுங்கள்.

வேண்டிய சர்டிபிகேட்டுகளை நேரில்தெரிந்துகொள்ளுங்கள்.

அரண்மனை வைத்தியர்
**எஸ். டி. மாணிக்கம் பிள்ளை,**
சித்தவைத்தியசாலை, வளையல்காரத்தெருவு
ஈரோடு.



## ஆலயப்பிரவேச உரிமை.

இது திருவாங்கூர் சமஸ்தானம் நாகர்கோவில் வக்கீல் தோழர் பி. சிதம்பரம் பி. ஏ. பி. எல்., எம். எல். ஏ. அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்ட ஓர் அரும்பெரும் ஆராய்ச்சி நூலாகும். இதில் ஆலயங்கள் நிறுவப்பட்டதின் இரகசியம், அவைகள் ஆதியில் இருந்துவந்த முறை, ஆலயப்பிரவேச சம்மந்தமாய் ஆதியிலிருந்து இதுவரை அவ்வப்போது ஏற்பட்டு வந்த நிகழ்ச்சிகள் மற்றும் அதுசம்மந்தமான சட்ட முறைகள் முதலிய அனேக விஷயங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. சுமார் 300 பக்கத்தில் நல்ல கிளேஸ் காகிதத்தில் டிம்மி 1க்கு 8 சயிசில் உள்ள பெரிய இங்கிலீஷ் புத்தகம்.

இதன் விலை மிகக் குறைந்த ரூ. 1—0—0.

விலாசம்:—

குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.

ஆர். ராமலிங்கம், வியாபாரி, கேப்ரோட், கோட்டாறு, திருவாங்கூர்.

ஆகிய இடங்களில் கிடைக்கும்.

*(4ம் பக்கத் தொடர்ச்சி).*

களும் துன்பப்படவேண்டும்? கெட்ட சிந்தையுள்ள சில பெண்களைப் பிடிப்பதற்காகவா அனேக கோடி தாய்மார்களைக் கொஞ்சம்கொஞ்சமாக உயிர் வதை செய்வது? துர்நடத்தையுள்ள ஒன்றிரண்டு பெண்களுக்காகவா அனேக கோடி அருமைமனைவிமார்களைப் பலிகொடுப்பது? மானிட ஜாதியில் கேவல நடத்தையுள்ள ஒன்றிரண்டு விபசாரிகளைக் காப்பாற்றுவதற்காகவா அனேக ஆயிரம் பெண்கள் பொறுமையுடன் நசித்துப் போகும்படி விட்டுவிடுவது நியாமா? கத்தி இருந்தால் கொலைகள் நடந்துவிடுமென்று உலகத்தில் கத்திகளே இல்லாமல் செய்துவிடலாமா? நெருப்புக்குச்சி இருப்பதால் ஒருவர் வீட்டில் ஒருவர் நெருப்புவைத்துவிடுவார்கள் என்று உலகத்தில் ஒரு நெருப்புக்குச்சியுமில்லாமல் செய்துவிடலாமா? துப்பாக்கி இருப்பதால் ஒருவரை ஒருவர் சுட்டுக்கொல்வார்கள் என்று துப்பாக்கியே இல்லாமல் செய்யலாமா?

விபசாரம் செய்தால் நாம் அகப்பட்டுக்கொள்வோம் என்ற ஒரே பயத்தினால் நம்முடைய இந்தியப் பெண்கள் கற்புடையவர்களாக இருக்கிறார்கள் என்று நீங்கள் எண்ணிவிடவேண்டாம். அவர்கள் அவ்வளவு கேவல நிலைமைக்கு வரவில்லை. பெண்களின் சுத்தமான எண்ணங்களும், அவர்களுடைய கௌரவமான தன்மைகளும், பொறுப்புள்ள நிலைமையும் அவர்களை எப்போதும் கற்புள்ளவர்களாக வைத்திருக்கும்.

கேள்வி:—பூமியின் மேல் பிறக்கும் சகல ஜனங்களுக்கும் போதுமான ஆகாரம் பூமியில் கிடைக்கும்போது ஜனத்தொகையைக் கட்டுப்படுத்த என்ன அவசியம் ஏற்படுகிறது? அமேரிக்கா தேசத்தின் 'மிசிசிப்பி' என்னும் நதியின் செழிப்பான சமவெளியில் மட்டும் விளையும் தானியம் உலகத்தில் உள்ள சகல ஜனங்களுக்கும் போதுமானதல்லவா?

இப்பொழுது நாம் யோசிக்கவேண்டியதென்னவென்றால் தற்சமயம் நம்மால் செய்ய முடிந்த காரியத்தைப்பற்றியே. வடதுருவத்தில் ஏராளமான தானியம் விளைந்தால் தென்துருவத்தில் பசியால் வாடுகிறவனுக்கு என்ன பிரயோஜனம்? வெகுதூரத்தில் விளையும் பொருளை விலைகொடுத்து வாங்கச் சக்தியற்ற ஒருவனுக்கு நெல்விளையும் சமவெளி வடஇந்தியாவில் இருந்தால் என்ன அல்லது சந்திர மண்டலத்தில் இருந்தால் என்ன? பசித்தவனுக்கெல்லாம் ஆகாரம் கிடைக்கும் மார்க்கம் கண்டுபிடிக்கப்பட்டால் மிகவும் புத்திசாலித்தனமான காரியமாகும். ஆனால் அவ்விதவழிகண்டு பிடிக்கப்படும் வரைக்கும் தற்சமயம் பூமியில் உள்ளவர்களுக்கே போதுமான ஆகாரம் கிடைக்காத நிலைமையில் மேலும் மேலும் பசிப்பிணிக்காளாபவர்களை உண்டுபண்ணுவது அறிவுடைமையா? நன்னடத்தையுள்ளதா? பசியால் அழுபவர்கள் இக்கரையிலும், தானியம் அக்கரையிலும் இருப்பதால் யாருக்கு என்ன நன்மை?

கேள்வி:—கலியாணம் செய்துகொண்ட ஜோடிகள் கர்ப்பத்தடை முறைகளைத் தெரிந்துகொண்டால், அவர்கள் (புணர்ச்சி) யின்பத்தையே முக்கியமாகக் கருதி, குழந்தைகளையே உற்பத்தி செய்யாமல் இருந்துவிடமாட்டார்களா?

பதில்:—குழந்தைகளைப்பெற வேண்டும், குழந்தைகளை வளர்க்க வேண்டும் என்ற ஆசையானது ஒவ்வொரு பெண்களின் இருதயத்திலும் இயற்கையாகவே வேரூன்றி இருக்கிறது. வேண்டுமானால் ஆணாகப்பிறந்தவர்கள் புணர்ச்சியில் தங்களுக்குள்ள இன்பத்திற்காக, பெண்கள் குழந்தைகளைப் பெறாமல் இருப்பது நல்லது என்று நினைக்கலாம். ஆனால் பெண்கள் அதை அனுமதித்துக்கொண்டிருப்பார்கள் என்பதை கனவிலும் நினைக்கவேண்டாம். பெண்களாகப் பிறந்தவர்கள் தாங்கள் தாய்மார்களாக வேண்டும் என்றும் குழந்தைகளை வளர்க்கவேண்டும் என்றும் நினைத்து இவ்வுலகத்தில் உள்ள சகல சௌகரியங்களையும் விட்டுக்கொடுக்க தயங்கமாட்டார்கள். ஏனென்றால் அவர்கள் குழந்தைகளைத்தான் அவர்கள் கண்களைப்போலவும், உயிருக்கு மேலாகவும் மதிக்கிறார்கள். குழந்தைகள், தங்கள் மனதிற்கு சந்தோஷத்தைக்கொடுத்து சாந்திஅளிக்கவல்லது என்று நினைக்கிறார்கள், இரண்டு அல்லதுமூன்று குழந்தைகளையாவதுவிரும்பாத பெண்களை நாம் பார்க்கமுடியுமா? ஒவ்வொரு பெண்ணும் இரண்டு அல்லது மூன்று குழந்தைகளை மட்டுமாவது பெற்றெடுத்தால், அக்குழந்தைகள் நன்றாகப் பாதுகாக்கப்படுவதுடன், உலக ஜனத்தொகை இப்போது இருப்பதைப்போலவே இருந்துகொண்டிருக்கும்.

கேள்வி:—கர்ப்பத்தடை செய்வது துர்நடத்தையுள்ளது என்று எப்பொழுது தீர்மானிக்கப்படலாம்?

பதில்:—விவாஹமான இருபாலர்களும், போதுமான தேகசுகமும், போதுமான பணச்சௌகரியமும் பெற்றிருந்தும், புணர்ச்சியில் ஏற்படும் இன்பம் ஒன்றையே முக்கியமாகக் கருதி, கேவல மனப்பான்மையுடன் கர்ப்பத்தடை செய்தால் அது மிகவும் துர்நடத்தையுள்ள செயல் என்றும் தீர்மானிக்கப்படலாம். விபசாரம் செய்வதற்காக கர்ப்பத்தடை முறைகளைக் கற்றுக்கொண்டால் அப்பொழுதும் அது மிகவும் துர்நடத்தையுள்ள செயல் என்று தீர்மானிக்கப்படலாம்.

கேள்வி:—கர்ப்பத்தடை செய்வது மிகவும் நல்லசெயல் என்று எப்பொழுது தீர்மானிக்கப்படலாம்?

பதில்:—கீழே குறிப்பிடும் மூன்று வித சந்தர்ப்பங்களிலும் கர்ப்பத் கர்ப்பத்தடைமுறையை யனுசரிப்பது நல்ல செயலாம்.

1. மனைவியானவள் கர்ப்பந்தரித்து, பத்துமாதங்கள் சுமந்து, பிரசவித்து உயிர்மீளமுடியும் என்று நம்பமுடியாத அவ்வளவு பலஹீனமாயிருக்கும் பொழுதும்,

2. டாக்டர்களுடையவும், அவர்களுடைய ஆயுதங்களினுடையவும் உதவியன்னியில் பிரசவம் செய்ய முடியாத தேக அமைப்பு இருக்கும் பொழுதும்,

3. பிறக்கும் குழந்தைக்குப் போதுமான ஆகார வசதியும், போதுமான உடைகளும் போதுமான வைத்திய உதவியும், போதுமான கல்வி வசதியும், போதுமான மன அமைதியும் ஓய்வும் அளிக்கமுடியாத நிலைமையில் ஒரு குடும்பத் தலைவன் இருக்கும்பொழுதும் கர்ப்பத்தடை செய்வது ஒருநல்ல அறிவுள்ளசெயலாகும்.

ஆகையால் பகுத்தறிவு உள்ளவர்கள் என்று பெருமை பேசிக்கொள்ளும் மனிதர்கள், நன்றாக அவர் அவர்களின் நிலைமையை யோசித்து வேண்டுவன செய்யக் கடமை பட்டிருக்கிறார்கள்.

குறிப்பு:—கர்ப்பத்தடை செய்வதற்கு வேண்டிய மருந்துகளும், மற்ற சாமான்களும் கீழ்கண்ட விலாசமுள்ள இடத்திலும் மற்ற இடங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்."

The All India Occult house.
Decca.

## ஜரிகைக் கம்பிப்பட்டு அங்க வஸ்திரங்கள்.

மிக அழுத்தமாய் நல்ல மிருதுவான பட்டில் செய்யப்பட்டது. நீடித்து உழைக்கக் கூடியது. சலவைக்குப் போடலாம். உத்திரவாத முள்ளது.

5 முழம் ஜரிகைக்கம்பியுள்ளது
1-க்கு விலை ரூ. 4-0-0

5 முழம் சாதா ப்ளெய்ன்
1-க்கு விலை ரூ. 3-4-0

N. B. இந்தியா, பர்மா, சிலோன் முதலிய இடங்களுக்கு மட்டும் பாக்கிங் தபாற் செலவு இனாமாய் அனுப்பப்படும்.

The Indo Malaya Fancy
Silk Works, Benares City

# வைத்திய அறிக்கை.

வாய்வு, வயிற்றுவலி, கிராணி, இடுப்புவலி முதலிய வியாதிகளுக்கு

## பஞ்சகல்ப சூரணம்.

இம்மருந்தை சாப்பிட்டு ஆயிரக்கணக்கான நோயாளிகள் குணமடைந்து விட்டார்கள்.
ஒரு முறை சாப்பிட்டுப்பாருங்கள்.

இடுப்புவலி, வயற்றுவலி, வயிற்றுப்போக்கு, வயற்றுப்பிசம், வயற்றிரைச்சல், அண்டவீக்கம், பாண்டு, காமாலை, சோகை, வாய்கசப்பு, பசியில்லாதிருத்தல், புளியேப்பம், நெஞ்சுகரிப்பு, நெஞ்செரிவு, அஜீரணம், கிராணி, குன்ம வலி, குன்மக்கட்டி, குன்ம வாந்தி, இருமல், மூலவாய்வு, மஞ்சள்நீர் மூத்திரம், பெண்களுக்குண்டாகியசூதகசம்பந்தமான சகல வாய்வுகளும், குணமாகின்றது.

இடுக்காம் சோற்றில் நெய்யுடனே இதமாய் மூன்று பிடியுண்ணே
உண்டிடுவாய் பிரகன்னம். உதிரம் பொருமல் பெருவாய்வு
குண்டுபோல் திரண்டிடுதல் கூப்பிட்டோடல் கீழ் விளுதல்
மண்டிவலித்தல் களித்திடுதல் மயக்கம் சத்திபலவாய்வும்
தெண்டம் தெண்டம் நமக்கெனப்போம். தேவி அமிர்தம் இதுதானே

என்ற படி இம்மருந்தை 3 நாள் சாதத்துடன் சாப்பிட்டால் எல்லா வாய்வுக்களும் இருந்த இடம் தெரியாமல் பறக்கின்றது. மருந்து சாப்பிடும் விதம் மருந்துடன் அனுப்பப்படும்.

3நாள் 6வேளை மருந்தடங்கிய டின்1 விலை ரூபா 2—0—0

**அரண்மனை வைத்தியர் எஸ். டி. மாணிக்கம் பிள்ளை,**
சித்தவைத்தியசாலை, வளையல்காரத்தெரு, ஈரோடு.

(3ம் பக்கத்தொடர்ச்சி)

நாயக்கர் பிரசங்கத்தைஅச்சடித்து எலெக்ஷன் காலத்தில் ஓட்டர்களுக்குக் கொடுக்கவேண்டும்.

சாரதா சட்டம் ஒழிய ஒரு யாகம் செய்வதென்றால் இந்த நாடு மனிதத்தன்மை உடைய நாடு ஆகுமா? கேவலம் இந்த யாத்தினால் ஒரு நன்மையுமில்லை. இது எல்லாம் மக்களை மயக்கும் ஒரு பூச்சாண்டி. டார்வின் என்பவர் மிருகங்களின் மூலமாய் மனித சமுகம் வளருகிறது என்று சொன்னார். எந்தப் பெயரால் இந்தக் கூட்டத்தார் இந்த இழிதொழிலைச் செய்கிறார்கள். மோக்ஷத்துக்கு ஆடுகளை அனுப்புகிறார்களாம். வெரும் போலிக் காரணங்களைக் கூறுகிறார்கள். வேதம் என்ற பெயரால் இந்தப் கொடுமை நடைபெறுகிறது. நான் இந்தப் பிரசங்கத்திற்குவரும் சமயம் ஒரு வக்கீல் நண்பர் “உங்களுக்கு இந்தியாவில் நல்லபெயர் உண்டு” ஏன் ராமசாமி நாயக்கர் கூட்டத்துக்குபோகிறீர்கள் என்று கேட்டார். இது வேடிக்கையாய் இருந்தது. சர். பி. சிவசாமி அய்யர், சர். சி. பி. ராமசாமி அய்யர், ஸ்ரீ ஸ்ரீனிவாசசாஸ்திரி, அல்லாடி கிருஷ்ணசாமி அய்யர் முதலியவர்கள் கையெழுத்திட்டு இந்தப் யாகக்கொடுமையை ஏன் நிறுத்தக்கூடாது. மற்ற விஷயங்களில் மூலை முடுங்கிலிருந்து அறிக்கைகள் வெளியிடவில்லையா? ஸ்ரீ சத்திய மூர்த்தியைப்பற்றி எனக்குக்கவலையில்லை. ஆதிசங்கராச்சாரி என்ன சொன்னார். அவர் பீடத்தில் அமரும் சங்கராச்சாரிகள்என்ன சொல்லுகிறார்கள் பாருங்கள். அவருக்குப் பின் வந்த சங்கராச்சாரிகள் ஆதி சங்கராச்சாரியார் கருத்துக்கும் கொள்கைக்கும் மாறுபட்டு நடக்கிறார்கள். இவர்கள் ஆதிசங்கரர் பரம்பரையாவார்களா? பூரி சங்கராச்சாரி என்பவர் (ஓர் ஏமாற்றக்காரர்) அவரைப்பற்றி விசேஷமாய் ஒன்றும் சொல்லவேண்டியதில்லை. இப்படிப்பட்ட சங்கராச்சாரிகளாலேயே நாடு பிளவுபட்டது என்று சொல்லுவேன். என்னை ஒருவன் சூத்திரன் என்றால் நான் சொல்லுபவனை சூத்திரன் என்று சொல்லுவேன்.

மடம் என்றால் என்ன? பெரியோர்கள் எல்லோரும் ஜாதி வேறுபாடு வேண்டாமென்றார்கள். எல்லா மடங்களும் வயிறு வளர்க்கும் சத்திரங்களாய் விட்டதுடன் ஜாதியை ஆதரிக்கும் மடம் தான் எங்கும் காண்கிறோம். சங்கராச்சாரிகள் ஜாதியை வளர்க்கிறார்கள். எல்லா ஜாதியாரிடமும் பணம் பறித்து ஒரு ஜாதிக்கே சாப்பாடு போடுகிறார்கள். இதுதான் ஆதிசங்கரர் கொள்கையா? நான் இம்மாதிரி எல்லாம்உண்மையைச்சொன்னால் சில பிராமணர்கள் இது தேசத்துக்கும், காங்கிரசுக்கும் விரோதம் என்பார்கள். என் தேசத்தினிடத்திலெனக்கு பற்றுண்டு எனக்கு தேசப்பற்று பிராமணர்கள் கற்றுக்கொடுக்க வேண்டியதில்லை பிராமணர்களும் என் சகோதரர்கள்தான். பாரமார்த்திகமாகவா மடங்கள் நடைபெறுகிறது? பெரியோர்கள் பெயரைச் சொல்லி ஜாதி உட்பிரிவுகள் வளர்க்கப்படுவது அநீதி! அநீதி!!

நான் ஆறு ராமாயணங்களைப் படித்து இருக்கிறேன். ஒரு ராமாயணத்தில் ராவணனை அயோக்கியன் என்று சொல்லி இருக்கிறது. மற்றொரு ராமாணத்தில் ராக்ஷசன் என்று சொல்லப்படுகிறது. ஹனுமானைப்பற்றி ஒரு ராமாயணத்தில் ஆஞ்சநேயர் என்றும், மற்றொன்றில் குரங்கு என்றும் சொல்லப்பட்டு இருக்கிறது. ஒரு ராமாயணத்தில் சீதை ராவணன் மகள் என்று சொல்லப்பட்டு இருக்கிறது. எதை நம்புவது எதை தள்ளுவது? ஆகையால் இவைகளை நம்புவதால் பயனில்லை.

தமிழ் அழகாய் இருப்பதால் சிலர் ராமாயணத்தைப் படிப்பதாகச்சொல்லுகிறார்கள். அது சரிதான். ராவணன் யாகத்தை அழிக்க சொன்னான் என்பது அவர்மீது கூறப்படும் குற்றமாகும். ஜீவகாருண்யத்தை முன்னிட்டே அம்மாதிரி சொல்லியிருக்கலாம். தத்துவங்களைக் கவனித்துப் பார்க்கவேண்டும்.

அரசாங்கத்தார் சமூகப் பிரச்சினையில் பிரவேசிப்பதில்லை என்று சொல்லுகிறார்கள். நம் நாட்டில் ஜெயினர்கள் என்று ஒரு வகுப்பார் உண்டு. அவர்கள் இந்த யாகத்தை நிறுத்தவேண்டுமென்றும் இது பெரும் கொலை என்றும் சொல்லுகிறார்கள். அவர்கள் அரசாங்கத்தாருக்கு விண்ணப்பித்துக்கொண்டால் அரசாங்கம் அதைக் கவனிக்கவேண்டும். கொலையைக்கண்டு அக்கூட்டத்தார் கலங்குகிறார்கள்.

சாரதா சட்டத்தைப்பற்றி ராஜப்பிரதிநிதி லார்டு இர்வினிடம் சிலர் முறையிட்டுக்கொண்டார்கள். அதற்கு அவர் மதத்திற்காக அரசாங்கம் காத்திருக்காது என்றார். அந்தக்கொள்கைப்படியே சர்க்கார் எப்படியும் இந்தயாகக்கொடுமையை நிறுத்த சட்டம் செய்தாகவேண்டும்.

திரு. நாயக்கர் சொல்லியபடி எல்லோருக்கும் பேச்சுரிமை வேண்டும். அவர் வெகு அழகாய் விஷயங்களை எடுத்துச்சொன்னார். மூடப்பழக்கங்கள் ஒழிய வேண்டும் ராமலிங்க சுவாமிகள் “கண் மூடி வழக்கங்கள் மண்மூடிப் போகவேண்டும்” என்று சொல்லியிருக்கிறார்.

இந்த இருபதாவது நூற்றாண்டில் நாகரீகம் முற்றியிருக்கும் இக்காளில் பிரிட்டிஷ் ஆட்சி நிலவிவரும் இந்த யுகத்தில் 5000 வருஷத்துக்கு முன்பு மிலேச்ச வழக்கமாய் இருந்த இந்த யாகக் கொலையை அறிவுள்ள பிராமணர்கள் ஆக்ஷேபிக்கக் கடமைப்பட்டிருக்கிறார்கள் என்று அழகாய் சொல்லி “இந்த யாகக்கொலைக்கு ஆதாரம் காட்ட யாராவது முன் வரட்டும் என்று அறைகூவி அழைத்தார்.

புத்தர், அசோகர், ரிஷப தேவர் முதலிய மகான்கள் பிறந்த நாட்டில் இப்போது இந்த ஆடுகளை சித்திரவதை செய்யப்படுகிறது. இந்த அக்கிரமத்தைக் கேட்டு சும்மா இருப்பவர்களுக்குத்தான் நரகம் சித்திக்கும். புத்தருக்குப் பின் யாக ஆக்கம் தேட முயற்சித்த மதாச்சாரியர்கள்— ஓர் சோம்பேறிக்கூட்டம் என்று தான் சொல்லவேண்டும். இவர்கள் ஊர் பொருளை கொள்ளையடித்து ஒரு கூட்டத்தாருக்கு ஆபிரக்கணக்காய் ஆதரிக்கிறார்கள். சர். பி. ராஜகோபாலாச்சாரியார் சோம்பேறிகளுக்கு சாப்பாடு போடக்கூடாது என்றார். பணம் கொடுப்பது ஒரு ஜாதி. ஏப்பம் விட்டு சாப்பிடுவது ஓர் கூட்டம். இதை பலமாய் எதிர்க்கவேண்டும். தெய்வத்தின் பேரால் சோம்பேறிகள் வளருகிறார்கள். ஏழைகள் பட்டினி கிடக்கிறார்கள். பணக்காரர்கள் இதற்கு ஆதரவு அளிக்கக்கூடாது. இப்படிச்சொன்னால் நாஸ்திகம் என்கிறார்கள். சர். சதாசிவமய்யர் போன்ற உத்தம பிராமணர்களைப் போற்ற வேண்டும். யாகம் செய்ய செய்ய பூகம்பம் [Earth quake] ஏற்படுகிறது இந்த ஆடுகள் கூச்சல் தான் பூகம்பம் வந்து விட்டது.

திரு. நாயக்கர் இப்போது தான் சிறையிலிருந்து வெளிவந்தார். அவருக்கு உடம்பு சௌகரியமில்லை. சீக்கிரம் அவர் குற்றாலம் செல்கிறார். அப்படி இருந்தும் தொண்டு செய்ய அவர் வந்திருக்கிறார்.

கும்பகோணத்துக்குச் சென்று 50 கூட்டங்களைக் கூட்டவேண்டும். திரு. சத்தியமூர்த்தி தீண்டாமை போகவேண்டும் ஆனால் சட்டம் கூடாது என்கிறார். இது ஓர் விந்தை. ஓட்டுக்கு வரும் போது கேளுங்கள்.

எனக்கு தேக சௌக்கியமில்லை. இருந்தாலும் பழயபடியே பிரசாரம் செய்யலாமென்று இருக்கிறேன்.

யாகத்தை ஒழிப்பதற்கு நான் எவ்வளவு வேண்டுமானாலும் தொண்டாற்ற உடன்படுவேன். அப்பர் சுவாமிகளைப் போல் நடந்து சென்று தொண்டாற்றவும் தயாராய் இருக்கிறேன். இதனால் எனக்கு மோக்ஷம் உண்டு. ஏன் என்றால் யாகத்தைத்தடுத்த புண்ணியம (ஆடுகளைக் கொலை புரிவதை நிறுத்தியதினால்) கைலாசத்துக்கு ஆண்டவன் என்னை அழைப்பார். மற்றபடி உங்களுக்கு வந்தனம் என்று விரிவாயும், வீரமாயும் பேசினார்.

மேலும் பேசுகையில் ஊசி குத்தினால் நம் உடல் பாதைப்படுகிறது. கொலையும், சித்திரவதையும் அடுக்குமா, பொது ஜனங்கள்தான் கடவுள் ஊழியர்கள். நாங்கள் ஒருவரையும் திட்ட வரவில்லை. ஏமாற்றவும் வரவில்லை. மோசம் செய்கிறவர்களைக் கண்டிக்கவே நாங்கள் இங்கு வந்திருக்கிறோம்.

பிராமணர்கள், தாயுமானவர், பட்டினத்தார் முதலிய மகான்களைச் சூத்திரர்கள் என்று கேலி செய்கிறார்கள். நான் ஆஸ்திகர் யார்? நாஸ்திகர் யார்? என்று ஒரு புஸ்தகம் எழுதியிருக்கிறேன். முக்கியமாய் மூடப்பழக்கங்கள் அடியுடன் தொலையவேண்டும். சர்க்கார் இது விஷயத்தில் சட்டம் ஏற்படுத்தவேண்டும் என்று பேசினார்.

தோழர் டி. எஸ். ஸ்ரீபால் ஆடுகள் கொலையைத் தடுக்கவேண்டியதின் அவசியத்தைப்பற்றியும், மூடப் பழக்கங்களைத் தடுக்க வேண்டியதின் அவசியத்தைப் பற்றியும் பல திருஷ்டாந்தங்களுடன் பேசி தலைவர்களுக்கு வந்தனோபசாரம் செலுத்தினார். இரவு 8.45 மணிக்குக் கூட்டம் கலைந்தது.

தலைவர்கள் இருவரும் தோழர் நயினார் வீட்டில் இரவு தங்கி மறுநாள் காலை சென்னைக்குச் சென்றார்கள்.

# விற்பனைக்காக நம்மிடம் உள்ள

## இதர பதிப்புப் புஸ்தகங்கள்.

| | | | |
|---|---|---|---|
| சிதம்பர ரகசியம் | 0-8-0 | ஆஸ்திக நாஸ்திக சம்வாதம் | 0-6-0 |
| சுதந்தரப்போர் | 0-4-0 | உழைப்பாளிகளுக்குஏன்இவ்வுலகமில்லை? | 0-1-0 |
| மாதர் சுதந்திரம் | 0-8-0 | சாமிகளின் அடிமை | 0-12-0 |
| விவாக விடுதலை | 0-4-0 | லோகல்போர்டுஆக்...(சென்னை) | 2-0-0 |
| மோட்டார் இயந்திரசாஸ்திரமும் பயிற்சி முறையும் | 2-0-0 | பகுத்தறிவு கீதம் | 0-1-0 |
| | | காந்தி-கிட்டு | 0-1-0 |
| The Right of Temple Entry | Re. 1—0—0 | The Curx of the Indian Problem | Re. 1—0—0 |

விலாசம்:— குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.



# பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டட், ஈரோடு.

## புதிய புத்தகம்.

**பாதிரியும், பெண்களும், பாவமன்னிப்பும்:—** இது பாவமன்னிப்பின் பேரால் நடந்துவந்த அக்கிரமங்களை அனுபவத்தில் கண்டவரான பாதிரி செனிக்யூ அவர்கள் தன் அனுபவத்தை ஆங்கிலத்தில் எழுதிய புத்தகத்தின் மொழிபெயர்ப்பு. இதைப்படிப்பவர்களுக்கு மதக்கொள்கையின் ஆபாசங்களும், அவற்றின் துஷ்பிரயோஜனங்களும், உள் எண்ணங்களும் பளிங்கு போல் விளங்கும். சுமார் 90 பக்கங்கள் கொண்டது. விலை அணு மூன்றுதான்.

## தோழர் ஈ. வெ. இராமசாமி எழுதியது.

**பிரகிருதிவாதம்:—** இந்நூலில் கடவுள், மதம், ஆத்மா, மோட்ச நரகம், பாவ புண்ணியம், ஒழுக்கம் முதலியவைகளின் தன்மைகளையும் லோகாயத வாழ்க்கையின் அவசியத்தையும் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை 0—3—0.

**பெண் ஏன் அடிமையானுள்** விலை 0—5—0

## அறிஞர் கே. பிரமச்சாரி எம். ஏ. எல். டி. எழுதியது.

**மதமும் விஞ்ஞான சாஸ்திரமும்:—** இந்நூலில் மதத்திற்கும் விஞ்ஞான சாஸ்திரங்களுக்குமுள்ள முரண்பாடுகளைத் தெளிவாய் விளக்கப்பட்டிருக்கிறது விலை 0—3—0

**பிரபஞ்ச உற்பத்தி:—** இந்நூலில் பரிணாம வாதக்கொள்கைப்படி உலகம் எவ்வாறு தோன்றப்பட்டது என்பதை ஆராய்ச்சி பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை 0—3—0.

# குடி அரசு பதிப்பக வெளியீடுகள்.

## இந்தியாவின் குறைபாடுகள்.

இது பம்பாய் அரசாங்கக் கல்வி மந்திரியாயிருந்த டாக்டர் பராஞ்சிபே M. A., D. Sc. அவர்களால் எழுதப்பட்டு லண்டன் R. P. A. சங்கத்தாரால் வெளியிடப்பட்ட ஓர் அறிவும், அனுபவும் ஆராய்ச்சியும் கொண்டதான அரிய நூலின் தமிழ் மொழிபெயர்ப்பாகும்.

விலை அணா 8.

## லெனினும் மதமும்.

இது பொதுவுடமைக் கொள்கை வீரராகிய V. I. லெனின் அவர்களால் எழுதப்பட்ட புத்தகத்தின் தமிழ் மொழிபெயர்ப்பாகும், விலை அணா 4.

## பொதுவுடமைத் தத்துவங்கள்.

ஐக்கிய அபேதவாத சமதர்ம குடி அரசு நாட்டின் உயரிய லட்சியங்களை வற்புறுத்தும் மிகச் சிறந்த நூல்.

விலை அணா 3.

## கடவுளும் பிரபஞ்சமும்.

தோழர் ம. சிங்காரவேலு அவர்களால் எழுதப்பட்ட நாஸ்திகம் நிறைந்த நூல். விலை அணா 4.

## கைவல்யம் அல்லது கலைக்கியானம்.

இது தமிழ்நாட்டுப் புராணங்கள் அனைத்திலும் உள்ள மோசடிகளை மெய்ப்பிக்கும் நூல். தமிழ் நூல் பாண்டித்தியம் பெற்ற சுவாமி கைவல்யத்தால் எழுதப்பட்டது.

விலை அணா 8.

## இராமாயண ஆராய்ச்சி.

இராமாயணத்தின் சகல ஆபாசங்களும், ஊழல்களும் இதில் கண்ணாடி போல் தெளிவாக எடுத்துக் காட்டப்பட்டிருக்கிறது. பாலகாண்டம் அணா 4.
அயோத்தியாகாண்டம் அணா 8.

## ஞானசூரியன்.

வேதம், புராணம், ஸ்மிருதி, மதம் முதலியனவைகளின் மிகக் கொடிய ஆபாசங்கள் விளக்கிக் காட்டும் பெரிய புத்தகம். விலை அணா 4.

## தர்ம பரீக்ஷை.

இது புராதன காலத்திலேயே எழுதிவைக்கப்பட்ட புராணப் புரட்டுகளை வெளிப்படுத்தும் நூல். விலை அணா 3.

## மேயோ கூற்று.

தோழர் C. A. அய்யாமுத்துவால் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ள இந்திய நாட்டின் நிலைமையை விளக்கும் நூல்.

விலை அணா 3.

## பங்கஜம்.

பார்ப்பனப் புரட்டை தெள்ளிதில் விளக்கும் நாடக நூல். விலை அணா 4.

**குடி அரசு புத்தகாலயம், ஈரோடு.**

# பகுத்தறிவு கழக வெளியீடுகள்.

## பெண் ஏன் அடிமையானாள்?

இந்நூல் ஈ. வெ. இராமசாமி அவர்களால் கற்பு, காதல், விபசாரம், கைம்மை, மறுமணம், விவாகரத்து, கர்ப்பத்தடை, சொத்துரிமை ஆகியவைகளை தர்க்கரீதியாய் ஆராய்ந்து எழுதப்பட்ட தொகுப்பாகும். விலை அணா 5.

## முன்னேற்றத்திற்கு மதம் முட்டுக்கட்டை

இந்நூல் சார்லஸ் T. கோர்ஹாம் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு K. M. பாலசுப்பிரமணியம் B. A. B. L. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இதில் மக்களின் முன்னேற்றத்தையும், விஞ்ஞான வளர்ச்சியையும், மதம் எவ்வாறு தடுத்து வந்தது என்பதைச் சரித்திர பூர்வமாய் எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 5.

## நான் ஏன் கிறிஸ்தவனல்ல?

இந்நூல் பெர்ட்டிரண்ட் ரசல் அவர்களால் ஆங்கிலத்தில் எழுதப்பட்டு S. குருசாமி B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இது கடவுளைப்பற்றியும், கிறிஸ்துவைப்பற்றியும் தெள்ளத்தெளிய ஆராய்ந்து எழுதப்பட்ட ஆராய்ச்சி நூல். விலை அணா 3.

## மதம் என்றால் என்ன?

இந்நூல் ராபர்ட் G. இங்கர்சால் அவர்களால் ஆங்கிலத்தில் இயற்றப்பட்டு தோழர் S. லட்சுமிரதன்பாரதி M. A., B. L., அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. இந்நூலில் மதங்களின் தன்மையையும், கடவுளின் தன்மையையும் நன்கு எடுத்துக்காட்டப்பட்டிருக்கிறது. விலை அணா 2.

## கடவுள்.

இந்நூல் கர்னல் ராபர்ட் ஜி. இங்கர்சால் அவர்களின் ஒரு அரிய சொற்பொழிவாகும். இதில் உலகிலுள்ள பல்வேறு கடவுளின் தன்மையும் உலகத்தோற்றத்திற்குக் காரணமாக ஓர் கடவுளிருக்க முடியாது என்பதையும் விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

அழகிய ரேப்பருடன், இங்கர்சாலின் வரலாறும், ஆர்ட் பேப்பரில் ஆசிரியர் உருவப்படமும் சேர்க்கப்பட்டுள்ளது 100 பக்கங்கள் கொண்டது. விலை அணா 5.

## மதம் மக்களுக்குச் செய்த நன்மை என்ன?

இந்நூல் Hon. பெர்ட்டிரண்ட் ரசல் M. A. F. R. C. S. அவர்களின் சொற்பொழிவு. தோழர் C. K. மருதாச்சலம் B. A. அவர்களால் மொழிபெயர்க்கப்பட்டது. மதம் எவ்வாறு மக்கள் முன்னேற்றத்திற்கு தடையாயிருக்கிறது என்பதை விஞ்ஞான பூர்வமாய் விளக்கியிருக்கிறது.

விலை அணா 3.

## நான் சம்சயவாதி ஆனதேன்?

இந்நூல் ராபர்ட் ஜி. இங்கர்சாலின் சொற்பொழிவு. இதில், தான் கடவுளைப்பற்றிக் கவலைப்படாத வனாயிருப்பதற்குரிய காரணங்களைத் தெள்ளத்தெளிய எடுத்துக்காட்டியிருக்கிறார். விலை அணா 3.

புத்தகங்கள் வேண்டுவோர் புத்தகம் ஒவ்வொன்றிற்கும் ஒரு அணா ஸ்டாம்பு கூடுதலாக அனுப்பவேண்டும்.

**பகுத்தறிவு நூற்பதிப்புக்கழகம் லிமிட்டெட், ஈரோடு.**

Edited Printed and Published by E. V. Krishnasamy at the Unmai Vilakkam Press, Erode.